# காலைக்கதிர்
Kalaikkathir

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 32, ஞாயிற்றுக்கிழமை 16.07.2017 கதிர் 252

# பொறுப்புக் கூறலிலிருந்து அரசு தப்பவே முடியாது!



## அதையே ஐ.நா. அறிக்கையாளரின் கருத்து உறுதிப்படுத்துகின்றது என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜூலை 16

போர்க்குற்ற விசாரணைகளில் இருந்தோ பொறுப்புக் கூறலில் இருந்தோ இலங்கை அரசு எந்த வழியிலும் தப்பிக்கவே முடியாது. இலங்கைக்கு வந்த ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் கொழும்பில் வைத்துத் தெரிவித்த கருத்துக்கள் இதனையே உறுதிப்படுத்துகின்றன.

-இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

பக்கம் 03

## இங்கு வரும் ஐ.நா. அறிக்கையாளர்களுக்கு தகுதியுமில்லை; இராஜதந்திரமும் தெரியாது!

### நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் கணிப்பீடு இது



கொழும்பு, ஜூலை 16

“இலங்கைக்கு விஜயம் செய்யும் ஐ.நாவின் விசேட அறிக்கையாளர்கள் பலருக்குத் தகுதியுமில்லை; இராஜதந்திரமும் தெரியாது. இப்போது வந்து திரும்பும் பென்எமர்ஸனும் அப்படிப்பட்டவரே.

“ இது குறித்து ஜனாதிபதிக் கும்பிரதமருக்கும்தெரியப்படுத்துவேன்.”

பக்கம் 22

## நாடு திரும்பினார் ஜனாதிபதி மைத்திரி


கொழும்பு, ஜூலை, 16

மூன்றுநாள்கள்விஜயமாக பங்களாதேஷ் சென்றிருந்தஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனாவும் அவரது அணியினரும்நேற்று மாலை 3.40 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். (உ)

## டெனீஸை நீக்க முதல்வர் முடிவு!

### நடவடிக்கை எடுப்பார் என ரெலோவுக்கு அவர் அறிவிப்பு





யாழ்ப்பாணம், ஜூலை 16

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் வாரியத்திலிருந்து அமைச்சர் பா.டெனீஸ்வரனை நீக்குமாறுகோரிஅவர் சார்ந்த தமி

பக்கம் 22

## மாகாண அவைத் தலைவர்கள் கூட்டம்; சிங்களத்தில் சி.வி.கே. தலைமையுரை

யாழ்ப்பாணம், ஜூலை 16

இம்முறை அனைத்து மாகாண சபைகளின் அவைத் தலைவர்களின் கூட்டம் நேற்று மாதகல் கடற்படைத் தளத்தை ஒட்டிய ஹோட்டலில் நடைபெற்றபோது அதற்குத் தலைமை வகித்த வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், ஏனைய மாவட்ட அவைத் தலைவர்கள் சிங்களவர்களாக இருந்தமையால் சிங்களத்திலேயே தமது தலைமையுரையின் பெரும் பகுதியை வழங்கி

பக்கம் 22

## முல்லைத்தீவில் இன்று கவனவீர்ப்புப் பேரணி

### சட்டவிரோதக் குடியேற்றத்துக்கு எதிராக

முல்லைத்தீவு, ஜூலை 16

முல்லைத்தீவில் இயற்கைச் சமநிலையைக் குழப்பும் விதமாக காடுகளை அழித்து சட்டவிரோதக் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், அவ்வாறான குடியேற்றங்களை உடன

பக்கம் 22

## வித்தியா படுகொலைச் சந்தேக நபரான சுவிஸ் குமார் தப்ப உதவிய பொலிஸ் டி.ஐ.ஜி. கைது!



யாழ்ப்பாணம், ஜூலை 16

புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு, படுகொலைசெய்யப்பட்டவழக்கில்பிரதான சந்தேக நபரான சுவிஸ்குமார் முதலில்தப்பிச் செல்வதற்கு உதவினார் என்ற குற்றச்

பக்கம் 22

## காணாமற்போனோர் சட்டத்தினால் படையினருக்கு ஆபத்து இல்லையாம்!

### புதிய பாதுகாப்புச் செயலர் உறுதி

கொழும்பு, ஜூலை 16

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுவோர் சம்பந்தமாக கொண்டு வரப்படும் சட்ட மூலத்தால் படையினருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை எனத் தெரிவித்துள்ள

பக்கம் 22




‘நெஸ்லே’ மரதனில் சாதித்த உடையார் கட்டு ம.வியின் வீராங்கனை சுடர்மதி நேற்று முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் ஆகியோரிடமிருந்து பரிசுகளைப் பெற்ற போது... (விரிவான செய்தி 20 ஆம் பக்கத்தில்) (படப்பிடிப்பு : கங்கா)

### அளப்பு அருணாசலம்



அப்பு... பிறகும் பிரளயம் எண்டு சொல்லுங்கோ...!

## படையினர் கைதைத் தடுக்க விரைந்து ஆட்சி மாற்றம்!



### சிறையில் சென்று சந்தித்த பின் சீற்றத்துடன் மஹிந்தர் சூளுரை

கொழும்பு, ஜூலை 16

நாட்டைக்காப்பாற்றப் போரிட்ட படையினர் கைது செய்யப்படுகின்றனர். அரசியல் வாதிகளுக்குஎதிராகஅரசியல் பழிவாங்கல்கள் சதித் திட்டத்தோடு

பக்கம் 22

காலைக்கதிர் Kalaikkathir



## மேல் மாகாணத்தில் 30 ஆயிரம் இடங்களில் டெங்கு பரவும் சூழல்



கொழும்பு,ஜூலை 16

மேல் மாகாணத்தில் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய வகையிலான 30 ஆயிரம் இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், டெங்கு நுளம்புக் குடம்பிகள் காணப்படும் 2 ஆயிரத்து 500 இடங்கள் இனங் காணப்பட்டுள்ளன.

கடந்த 10ஆம் திகதி முதல் நான்கு நாள்கள் மேல்மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது இவ்வாறான இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. (எ)

# சுதந்திரக் கட்சி தனித்து ஆட்சியமைக்க மஹிந்த ஆதரவு வழங்க வேண்டும்!

## அழைக்கிறார் அமைச்சர் அமரவீர



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அடுத்தமுறை தனித்து ஆட்சி மைப்பதற்கு கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவு வேண்டும். இவ்வாறு கோரியுள்ளார் அமைச்சர் மஹிந்த அமரவீர.

இனிமேல் அவர் ஜனாதிபதியாக வர முடியாது என்பதால் மஹிந்த ராஜபக்ஷ தனது ஆதரவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வழங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில்அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தி அதைப் பலவீனப்படுத்துவதற்கு மஹிந்த அணிக்குள் சிலர் முயற்சி செய்கின்றனர்.

அந்த அணியிலுள்ள இளைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் புதிய கட்சி ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சி செய்கின்றனர்.

புதிய கட்சி ஒன்றின் ஊடாக வெகு விரைவில் மூத்த அரசியல்வாதிகளாக மாறமுடியும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

உண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தும் திட்டம் மஹிந்த ராஜபக்ஷவிடமோ அல்லது அவருடன் இருக்கும் மூத்த உறுப்பினர்களிடமோ இல்லை.

இனிமேல் மஹிந்த ராஜபக்ஷ வால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. ஆகையால் 2020இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து ஆட்சியமைப்பதற்கு மஹிந்த உதவ வேண்டும்.

இந்த உதவியைத்தான் நாம் மஹிந்தவிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். இந்த வருடத்தின் முதல் தேர்தலாக உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் இடம்பெறும்.

எல்லை நிர்ணயத்திலுள்ள சிக்கல்கள் விரைவில் தீர்க்கப்பட்டு தேர்தல் விரைவில் நடத்தப்படும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெறுவதற்கேற்ப வியூகம் வகுக்கப் படுகின்றது.

அதைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தல்களும் இடம்பெற உள்ளன. பிளவுபடாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்தே இந்தத் தேர்தல்கள் அனைத்தையும் எதிர்கொள்வதற்கும் அவற்றை வெற்றிகொள்வதற்கும் நாம் பாடுபடுகின்றோம்.- என்றார். (எ)

# ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் குடியேறாதோரின் காணிகள் மீளப் பெறப்படும்

## வட மாகாண சபை உறுப்பினர் மயூரன் தெரிவிப்பு



வவுனியா, ஜூலை 16

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டம் பகுதியில் குடியேறாதவர்களின் காணிகளை மீட்டு காணி அற்றவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடமாகாணசபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாபிரதேசசெயலகத்தில் நேற்று இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டம் பகுதியில் பல வருடகாலமாக குடியேறாமல் இருக்கும் காணிகளைத் தெரிவு செய்து காணியற்றவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளேன்.

அந்தப் பகுதியில் காணிகளைப்பெற்றுக் கொண்டவர்கள் அங்கு சென்று குடியேறாமல் அந்தப்பகுதிகள் காடுவளர்ந்து யானைகள், திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

ஓமந்தை அரச ஊழியர்கள் வீட்டுத்திட்டம் பகுதியில் பலர் காணிகளைப் பெற்றுக்கொள்வதற்குவிண்ணப்பித்தபோதும் தற்போது அந்தப்பகுதியில் 45 குடும்பங்களே வசித்து வருகின்றன என்று ஓமந்தை கிராம அலுவலர் திருமதி அ. அனுசியா தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.- என்றார்.

# திட்ட முன்மொழிவுகள் தமிழிலேயே இனிமேல் காட்சிப்படுத்த வேண்டும்

## வவுனியா ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சபை உறுப்பினர் லிங்கநாதன் கோரிக்கை

வவுனியா, ஜூலை 16

திட்ட முன்மொழிவுகள் காட்சிப்படுத்தும் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் தமிழ் மொழியில் மேற்கொள்ளுமாறு வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுக்காலை நடைபெற்றது. வவுனியா பிரதேச செயலாளர் உதயராஜா தலைமையில் ஆரம்பமாகிய இந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட திட்ட வழங்கல் முன்மொழிவுகளைக் காட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் ஆங்கில மொழியில் இடம்பெற்றுள்ளன.

இருப்பினும், எதிர்காலத்தில் திட்ட வழங்கல் முன்மொழிவுகளை தமிழ் மொழியில் மேற்கொள்ளநடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன் .

அத்துடன், இன்று (நேற்று) இடம்பெற்ற அனைத்து திட்ட முன் மொழிவுகளும் உத்தியோகத்தர்களால் ஆங்கில மொழியிலே மேற்கொள்ளப்பட்டுள்ளன. -என்றார். (எ)

# கொக்காவில் ரயில் கடவைக்கு அருகில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்பு!



மாங்குளம், ஜூலை 16

முறிகண்டி, கொக்காவில் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட ரயில் கடவைக்கு அருகில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்டுள்ள அந்தச் சடலம் நேற்று கொழும்பிலிருந்து யாழ். நோக்கி பயணித்த ரயிலில் இருந்து தவறி விழுந்து காணாமற்போனவரின் சடலமா என்று மாங்குளம் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி நேற்றுமுன்தினம் பயணித்துக் கொண்டிருந்த ரயிலில் இருந்து மாங்குளம், கொக்காவில் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட ரயில் கடவையில் ஒருவர் தவறி விழுந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து மாங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. பின்னர் அந்த நபரை தேடும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில், முறிகண்டி,கொக்காவில் பகுதியில் நேற்று மீட்கப்பட்டுள்ள சடலம் அந்த நபரினுடையதா என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அத்துடன்,இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-81)

# ஆபத்தான மரப்பாலம் இப்போது காட்சி தருகிறது புதுப்பொலிவுடன்!

## புனரமைப்பினால் மக்கள் மகிழ்ச்சி

கிளிநொச்சி, ஜூலை16

கிளிநொச்சிப் பகுதியில் ஆபத்தான நிலையில் காணப்பட்ட மரப்பாலம் ஒன்று மக்களின் நீண்டநாள் கோரிக்கைக்கு அமைய புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

முரசுமோட்டை - ஐயன் கோவிலடி கிராமத்துக்கான பிரதான வீதியை ஊடறுத்துச் செல்லும் கனகராயன் ஆற்றின் கிளையாற்றைக் கடப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட மரப்பாலமே புனரமைக்கப்பட்டுள்ளது.

வட்டக்கச்சி மற்றும் இதர இடங்களுக்குச்செல்லும் குறுந்தூரவீதியாக உள்ளமுரசுமோட்டை மற்றும் ஊரியான் ஆகிய கிராமங்களின் பொது மயானத்துக்குச் செல்லும் வீதியிலேயே இந்தப் பாலம் உள்ளது.

இந்த நிலையில், இந்த



பாலத்தினூடாக பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில், பருவமழைமற்றும்வெள்ளப்பெருக்கு காலங்களில் ஐயன்கோவிலடி கிராமத்துக்கான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து கிராம மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் முன்மொழிவுக்கு அமைய ஆயிரம் பாலத்திட்டத்தின் கீழ் இந்தப் பாலம் புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

### விடுதலைப் போராட்டத்தில் தேசியத் தலைவரின்

# முதற்குண்டு முழங்கிய பொன்னாலையை மீளக் கட்டியெழுப்ப முயற்சிக்கவேண்டும்

### வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் உரை



யாழ்ப்பாணம், ஜூலை 16

'தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பொன்னாலைக்கு சிறப்பிடம் உண்டு. தேசியத் தலைவரின் முதலாவது துப்பாக்கி வேட்டு முழங்கிய இடம் இது. இங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் இந்த இடத்தையும் அபிவிருத்தி செய்யவேண்டும்'

-இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்புவிழா நேற்று முன்தினம் (14.07.2017) வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

வித்தியாசாலை அதிபர் தி.மோகனபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாணவர்களின் கல்விக்கு எது தடையாக இருக்கின்றதோ அதைக் களைய வேண்டும். அப்போதுதான் மாணவர்களால் சிறப்பாகக் கல்வி கற்க முடியும். வறுமையைக் காரணம் காட்டி எந்தவொரு மாணவனும் கல்வியில் இருந்து இடைவிலக முடியாது.

பாடசாலைகளில் ஒரே வகுப்பில்வசதியானவர்களின்பிள்ளைகளும் கல்வி கற்கும் அதே வேளை வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களின் பிள்ளைகளும் கல்வி கற்கின்றனர். வசதியான பிள்ளையைப் பார்த்து அவனைப் போன்ற வசதி வாய்ப்புக்கள் எனக்கு கிடைக்கவில்லையே என வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவன் ஏங்கக் கூடாது.

இவ்வாறு ஏங்குகின்ற மாணவர்களின் ஏக்கத்தைப் போக்க அரசியல்வாதிகள் முன்வரவேண்டும். இவ்வாறான மாணவர்களை நோக்கியதாகவே எனது சேவைகள் அமைந்திருக்கின்றன. அரசு இலவச சீருடைகளை வழங்கினாலும் அவர்களின் இதர தேவைகளை நாம் பூர்த்தி செய்யவேண்டும்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையைப் பொறுத்தவரை தரம் 9 வரையுள்ள இந்தப் பாடசாலையை க.பொ.த சாதாரண தரம் வரை தரமுயர்த்த பாடசாலைச் சமூகம் ஆர்வமாக உள்ளது. அப்படி தரமுயர்த்தினால் கிராமப் புறங்களில் உள்ள மாணவர்கள் கல்வியில் இடைவிலகல் இல்லாமல் சாதாரண தரக் கல்வியைப் பெற முடியும் என அவர்கள் நம்புகின்றனர்.

அவர்களின்நம்பிக்கை வீண் போகக்கூடாது. இந்தப் பாடசாலையைத் தரமுயர்த்துவதற்கு உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடவுள்ளேன். இந்தப் பிரதேச மாணவர்களை எதிர்காலத்தில் நல்லவர்களாக மாற்றும் பொறுப்பில் நானும் இணைந்து கொள்கின்றேன்.- என்றார்.

மேலும், பொன்னாலை என்ற இடம் ஒரு காலத்தில் சர்வதேச ரீதியாகப் பேசப்பட்டது. இந்த இடம் எப்படி இருக்கும் என்பதைப் பார்க்கவேண்டும் என நாம் ஆர்வமாக இருந்தோம். இதேபோல எமது புலம்பெயர் நண்பர்களும் ஆர்வமாகக் கேட்பார்கள். பின்னர் நேரில் வந்து பார்த்துப் பெருமையடைந்தோம். அத்தகைய பெருமைமிகு இந்த இடத்திலுள்ள மக்கள் தற்போது மீளக் குடியேறியுள்ளனர். இந்த இடத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். - எனவும் கூறினார்.

இந்த நிகழ்வில், சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நோபேட் உதயகுமார், வடமாகாணக் கல்வித் திணைக்கள சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (நடனம்) திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன் ஆகியோரும் உரையாற்றினர். மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம)

# யாழ். பிரதேச செயலக 'ஆடிப்பூர விழா' நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 16

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையின் 'ஆடிப்பிறப்பு விழா' நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான பொன்னம்பலம் தயானந்தன் தலைமையில் விழா நிகழ்வுகள் இடம்பெறும்.

நிகழ்வில் சின்மயாமிஷன் தலைவர் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் ஆசியுரை வழங்க, மதத் தலைவர்கள் பிரார்த்தனை உரைகள் வழங்குவர். அதனைத் தொடர்ந்து கம்சப்பிரியா இசைமன்ற மாணவர்களின் பாட்டும், தொடர்ந்து "உலகியல் மாற்றம் சமுதாய வளர்ச்சிக்கு உந்துதலாயுள்ளதா? குந்தகமாயுள்ளதா?" என்ற தலைப்பிலான பட்டிமன்றம் இடம்பெறும். இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் வாதிடுவர். (இ)

# உலக சைவ இளைஞர் மாநாடு ஓகஸ்ட் மாதம் நடத்த ஏற்பாடு

### யாழ். இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் 3 தினங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 16

இலங்கை தென் கயிலை ஆதீன குருமகா சந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார் மற்றும் தமிழக பேரூர் ஆதீன இளைய பட்டம் மருத்தாசலம் அடிகளார் ஆகியோரின் வழிகாட்டலில் அகில இலங்கை சைவ மகா சபை ஏற்பாட்டில் உலக சைவ இளைஞர் மாநாடு நடத்தப்படவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவ காலத்தில், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரையான மூன்று தினங்கள் யாழ். நீராவியடியில் உள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

"தமிழ் எங்கள் மொழி, சைவம் எங்கள் வழி" என்ற மகுட வாக்கியத்துடன், இன்றைய சைவத் தமிழ் சமுதாய மறுமலர்ச்சியில் இளைஞர்களின்பங்கும்பணியும் என்ற தொனிப்பொருளில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் தமிழகத்திலுள்ள ஆதீனங்களில் முதல்வர்களும் இலங்கையில் உள்ள ஆதீனங்களின் முதல்வர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டுக்கு இணைப்பாளர்களாக தாயகத்தில் மருத்துவர். பரா. நந்தகுமார் (தொ.இல. 0094772208467), தமிழகத்தில் சிவத்திரு. அ.அருண் சீனிவாசன் (10917395866699), புலம்பெயர் தேசத்தில் சிவத்திரு. சிவஞானசுந்தரம் தம்பு (00447861393295) ஆகியோர் கடமையாற்றி வருகின்றனர்.

மாநாடு தொடர்பாக மேலதிக விபரங்களை இவர்களைத் தொடர்புகொண்டு அறிந்து கொள்ள முடியும். அத்துடன், மாநாடு தொடர்பான ஆலோசனைகளையும் தெரிவிக்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

## பொறுப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுப்பதில் இலங்கை படுதோல்வி அடைந்துள்ளது. யுத்தக் குற்றங்கள் இழைத்த படையினரை, நீதியின் முன்நிறுத்தும் விடயத்தில் எந்த முன்னேற்றத்தையும் காண முடியவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தானும் சேர்ந்து இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றிய தீர்மானங்களில் உள்ளடங்கிய விடயங்களை முன்கொண்டு செல்வதில் - செயலுருக் கொடுப்பதில் - இலங்கை அரசின் நடவடிக்கைகள் முடங்கிவிட்டன.' - என்று கொழும்புக்கு வந்திருந்த ஐ.நா.வின் மனித உரிமைகள் மற்றும் தீவிரவாத எதிர்ப்புத் தொடர்பான சிறப்பு அறிக்கையாளர் பென். எமர்ஸன் குறிப்பிட்டிருந்தார். அதுகுறித்துக் கேட்டபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயத்தை ஒட்டி அவர் தெரிவித்த கருத்துகள் வருமாறு:-

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தானும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் ஆக்கபூர்வமாக எதையும் செய்யவில்லை.

ஐ.நா. விசேட அறிக்கையாளரின் காட்டமான கருத்து அதையே காட்டுகின்றது.

அந்தப் பரிந்துரைகளை முழு அளவில் விரைந்து நடைமுறைப்படுத்த - செயலில் காட்ட - நல்லாட்சி அரசு முன்வரவேண்டும்.

இந்தப் பரிந்துரைகளை செய்யாமை குறித்து உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அதிருப்தி அதிகரித்து வருகின்றது. இந்தக் கருமங்களை நிறைவேற்றுவதற்கான கால அவகாசத்தை இலங்கை கேட்ட போது கடும் அதிருப்தியுடனேயே சர்வதேசம் அதை வழங்க முன்வந்தது. கால அவகாசம் வழங்கியும் எதுவும் நடக்கவில்லை என்பது சர்வதேச சமூகத்தை இன்னும் சீற்றத்தில் ஆழ்த்தும்; ஆழ்த்துகின்றது.

நடந்துமுடிந்த அவலங்களுக்குப் பின்னால் புதையுண்டு கிடக்கும் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

தவறிழைத்தோர் தப்பிப்பதற்கு இடமளிக்கப்படக்கூடாது. அதற்கான சாத்தியம் இல்லை என்பதை அரசு உணரவேண்டும்.

மனித உரிமை மீறல்கள், காணாமற்போதல், போர்க்குற்ற விடயங்கள் மீண்டும் இடம்பெறாத - நிகழாத - சூழ்நிலைகளை அரசு ஏற்படுத்தவேண்டும்.

நீண்ட காலமாகத் தொடரும் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண வேண்டும். அந்தக் கடமையில் இருந்து அரசு ஒருபோதும் பின்வாங்கக் கூடாது.

பொறுப்புக்கூறல் விடயத்திலிருந்து பின்வாங்குவதற்கு சர்வதேசம் ஒருபோதும் இடமளியாது. நடந்த சம்பவங்களுக்கு பொறுப்புக் கூறியேயாகவேண்டும்.

ஐ.நா. தீர்மானப் பரிந்துரைகள் மற்றும் போர்க்குற்ற விசாரணைகளில் விலகிக் தப்பிவிட முடியாது என்பதை ஆட்சியாளர்கள் உணரவேண்டும்.

இந்த அரசு சில கருமங்களில் ஈடுபாட்டாலும் அவை திருப்தி தருவன அல்ல. மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும். காணாமல் போனோர் சட்டம் நிறைவேற்றப்பட்டும் அது நடைமுறைப்படுத்தப்படவே இல்லை.

அரசியல் கைதிகளின் விவகாரம் முடிவின்றித் தொடர் கின்றது. இந்த நாட்டில் உள்ள அரசியல் கைதிகள் அனைவருக்கும் இனியும் காலதாமதப்படுத்தாது விடுவிக்கப்பட வேண்டும்.

அரசமைப்புத் தொடர்பாக இந்த அரசு சில காரியங்களில் ஈடுபட்டாலும் அவற்றில் எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லை. அரசமைப்பு விடயத்தில் - தீர்வு விவகாரத்தில் - அரசு முழுக் கவனமும் செலுத்த வேண்டும்.

நாட்டின் முழு மக்களும், முழுத் தரப்புகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வை அரசு முன் வைக்க வேண்டும்.

மஹிந்த அரசு தவறிழைத்தமையால் - கடமைப் பொறுப்பிலிருந்து விலகியமையால் - நாட்டின் மூவின மக்களும் ஒன்றிணைந்து அவரை அதிகாரத்திலிருந்து அகற்றினர். சர்வதேசமும் அதை முன்னின்று இயக்கிச் செய்வித்தது.

இந்தப் படிப்பினையை நல்லாட்சி அரசும் உணர்ந்துகொள்ள வேண்டும். தாமதமின்றி காரியங்களை முன்னெடுக்க வேண்டும். - என்றார். (உ)

# ஸிம்பாப்வே டெஸ்ட்: திணறுகிறது இலங்கை!

கொழும்பு, ஜூலை 16

ஸிம்பாப்வேக்கு எதிரான ஒரு நாள் ஆட்டத்தொடரை 3-2 என்ற கணக்கில் பறிகொடுத்த இலங்கை, ஒரேயொரு டெஸ்ட் ஆட்டத்தை மட்டும் கொண்ட இந்தத் தொடரையும் பறிகொடுக்குமா என்ற கேள்வி அந்த டெஸ்ட்டில் முதல் இரு நாள் ஆட்ட முடிவிலேயே தோன்றியுள்ளது.

முதல் இன்னிங்ஸில் ஸிம்பாப்வேயின் ஓட்ட எண்ணிக்கையை இலங்கை எட்டுவது சந்தேகமான நிலையில் உள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பு பிரேமதாஸ ஸ்டேடியத்தில் ஆரம்பமான இந்த டெஸ்ட் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸிம்பாப்வே துடுப்பாட்டத்தைத் தேர்ந்துகளமிறங்கியது.

அந்த அணி 94.4 ஓவர்களில் 356 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஸி.ஆர். எர்வின் 160, ஸிக்கந்தர் ரஸா, எம்.என். வல்லர் ஆகியோர் தலா 36 ஓட்டங்களைப் பெற்றனர். ரங்கன ஹேரத் 116 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்று இரண்டாம் நாள் ஆட்ட முடிவின்போது 83 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முதலாவது இன்னிங்ஸில் ஸிம்பாப்வேயின் ஓட்ட எண்ணிக்கையை எட்டிப்பிடிப்பதற்கு - தற்போது எஞ்சியுள்ள 3 விக்கெட்டுக்கள் கைவசம் இருக்க - இன்னும் 63 ஓட்டங்கள் இலங்கை பெற வேண்டும்.

இலங்கை தரப்பில் கருணாரட்ன 25, சந்திமல் 55, மத்தியூஸ் 41, டில்ஷான் பெரேரா 33, குணரட்ன ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஸிம்பாப்வே தரப்பில் ஏ.ஜி. கிரீமர் நூறு ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இன்று டெஸ்ட் போட்டியின் 3 ஆவது நாளாகும். (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கிட்டுமா அதிகாரப் பகிர்வு?

யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரிகளைத் தமது அலுவலகத்துக்கு அழைப்பித்து அங்கு அவர்களுக்குக் கூட்டம் நடத்தியிருக்கின்றார் வடக்கு முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரன்.

அழைப்பையும் கூட்டத்தையும் அதுபற்றிய செய்திகளையும் பார்க்கும் போது, அந்தப் பொலிஸார் மீது - அல்லது அதிகாரிகள் மீது - முதலமைச்சர் என்ற முறையில் அதிகாரம், செல்வாக்குச் செலுத்தக் கூடிய நிலைமை உள்ளதோ என்று எண்ணத் தோன்றும்.

ஆனால், அது அப்படி இல்லை என்பதே உண்மை நிலைமை; யதார்த்தம்.

தற்போதைய மத்திய அரசு, தமிழர் தரப்போடு - குறிப்பாக இப்போது வடக்கு மாகாண சபையை நிர்வகிக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு - நல்லுறவையும், ஓரளவு இணக்கப் போக்கையும் கடைப்பிடித்து வருவதால், இந்தக் கூட்டம் சாத்தியமாயிற்றே தவிர, வடக்கு மாகாண முதல்வர் வடக்குப் பொலிஸார் மீதான தனது அதிகாரத்தை, கட்டுப்பாட்டைப் பயன்படுத்தி, அவர் அழைத்ததால் இந்தக் கூட்டம் சாத்தியமாயிற்று என்று எண்ணக்கூடாது.

மாகாண சபைகளை அமைக்கும் போது - அதற்கு வழி செய்யும் அரசமைப்பு ஏற்பாடுகள், 13 ஆவது திருத்தம் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட போது - உண்மையில் அத்தகைய அதிகாரம் மாகாண சபைகளுக்கு இருந்தன. சட்டம் - ஒழுங்கு, பொலிஸ், காணி அதிகாரம் எல்லாம் மாகாண சபைக்கு அதிகாரப் பகிர்வாக வழங்குவதே ஏற்பாடு.

ஆனால், ஒரு கையால் கொடுத்து மறு கையால் பறிப்பது போல, இந்த அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்வதாக 13 ஆவது திருத்தத்தில் காட்டிய இலங்கை அரசு, பின்னாள்களில் அத்தகைய விடயங்கள் சம்பந்தமான அதிகாரப் பகிர்வை நடைமுறையில் செயற்படுத்தவில்லை. அதாவது புதிய சட்ட ஏற்பாடுகள் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பிடுங்கிக் கொண்டு விட்டது.

மாகாண சபைகளுக்கான அதிகாரம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான விடயம் போல - உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதை போல - ஆயிற்று.

13 ஆவது திருத்தப்படி, வடக்கு மாகாணத்துக்குத் தனியான பொலிஸ் ஆணைக்குழு, தனியான பிரதி பொலிஸ்மா அதிபர், தனியான பொலிஸ் ஆளணி எல்லாம் இருக்க வேண்டும். அவர்கள் மீது முதலமைச்சருக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

பொலிஸ் அதிகாரத்தை மாகாணங்களுக்குப் பகிரும் ஏற்பாடுகளை அரசமைப்பு ரீதியாக உருவாக்கி, சட்டரீதியாக அதனைச் செயற்படுத்தும் வரை மாகாண நிர்வாகம் - அல்லது முதலமைச்சர் - பொலிஸ் துறை மீது செல்வாக்குச் செலுத்துவது சாத்தியம் அற்றது என்பது தெளிவு.

பொலிஸ்துறையில் தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் இணைகின்றமை பொலிஸ் அதிகாரம் மாகாணத்துக்குக் கிட்டுவதற்கு வழி செய்யும் என்ற முதலமைச்சரின் உரை அர்த்தமற்றது. பொலிஸ் நிலையங்களில் தமிழ் மக்கள் தமது தேவைகளைத் தமிழில் நிறைவு செய்து கொள்வதற்கும் அதுபோன்ற பிற இன்னோரன்ன நடவடிக்கைகளுக்கும் அது உதவக் கூடுமே தவிர, மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் கிட்டும் விவகாரத்தை அது எந்த வகையிலும் தூண்டப் போவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இப்போது நல்லாட்சி அரசுடன் நடத்தி வரும் - அரசியல் தீர்வுக்கும் வழி செய்யக் கூடிய விடயங்களை உள்ளடக்கிய - உத்தேச புதிய அரசமைப்பு இந்த பொலிஸ், காணி அதிகாரங்களைத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிப்பதை உறுதி செய்கின்றது என்று கூறப்படுகின்றது.

'சமஷ்டி' என்ற சொல்லும் இல்லாமல், 'ஒற்றையாட்சி' என்ற சொல்லும் இல்லாமல், அந்த அரசமைப்பு வரப்போகின்றதாம்.

'மாகாணங்களுக்கு திட்டவட்டமான - தெளிவான - அதிகாரப் பகிர்வு. மாகாணங்களுக்குரிய அதிகாரம் தனியான பட்டியலில். மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் தனியான பட்டியலில். இரண்டுக்கும் பொதுவான அல்லது இரண்டும் சேர்த்தும், இணைந்தும், உடன்பட்டும் பிரயோகிக்கின்ற அதிகாரங்கள் என்று எதுவும் இல்லை. மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசு சம்பந்தப்பட்ட மாகாணத்தின் இணக்கமின்றி பிடுங்கவும் முடியாது. தான் பிரயோகிக்கவும் முடியாது. அதாவது அத்தகைய அதிகாரங்களை மத்திய அரசு தான் மீளப்பெற்றுக் கொள்ளவும் இயலாது. தான் பயன்படுத்தவும் இயலாது என்ற மட்டுப்படுத்தல்' - இதுதான் தாங்கள் இணங்கிவரும் ஆலோசனைத் திட்டம் என்கின்றார் சம்பந்தன்.

சட்டம் - ஒழுங்கு, பொலிஸ், கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், கடற்றொழில், அனைத்துவிதமான கைத்தொழில்கள், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், தொழில்வாய்ப்பு மற்றும் சமூக பொருளாதார விடயங்கள் என எல்லாவற்றையும் தமிழ் மக்கள் தாமே முன்னெடுக்கக் கூடியதாக அதிகமான - உச்சப்பட்ச - பரந்த - விரிவான - அதிகாரப்பகிர்வு என்கிறார் சம்பந்தன்.

அது உண்மையானால், வழங்கிய அதிகாரங்களை மீளப் பறிக்க முடியாத கட்டுப்பாடு (Check and Balance) இருக்குமானால், அதை தமிழர் தரப்பு ஏற்க - அதற்கு இணங்க - முன் வருவதில் என்ன தப்பு?

# புதிய அரசமைப்பு உருவாக்குவதை நிறுத்திக் கொள்வதே நல்லது!

## அரசுக்கு மக்கள் ஆணை இல்லை என்கிறார் அமைச்சர் திஸாநாயக்க

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான மக்கள் ஆணை இந்த அரசுக்கு இல்லை. மக்கள் ஆணை இல்லாத ஒரு செயலை எம்மால் செய்ய முடியாது. ஆகவே, புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியை இத்தோடு நிறுத்திக் கொள்வதுதான் நல்லது என்று அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதற்கான ஆணையை ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்களிடம் கோரின.

ஆனால், எந்தக் கட்சிக்கும் மக்கள் ஆணை வழங்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் வழங்கிய ஆசனங்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்தக் கட்சியால் தனித்து ஆட்சி அமைக்க முடியவில்லை.

அதேபோல் சுதந்திரக் கட்சிக்குக் கிடைத்த ஆசனங்களின் எண்ணிக்கையைக் கொண்டும் அந்தக் கட்சியால் தனித்து ஆட்சியமைக்க முடியவில்லை.

இந்த நிலையில்தான் இரண்டு கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைத்தன. எந்தக் கட்சி வென்றாலும் இந்த இரண்டு கட்சிகளும் இணைந்து தேசிய அரசை அமைக்கும் என்று கூறினாலும் கூட விரும்பியோ விரும்பாமலோ இரண்டு கட்சிகளும் சேர்ந்தே ஆட்சி அமைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டன.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு எதிராக இன்று நாட்டில் எதிர்ப்புகளும் உள்ளன.

பௌத்தபீடங்கள் கூட எதிர்க்கின்றன. மக்கள் ஆணை இல்லாத ஒரு வேலையைச் செய்யப் போனால் பிரச்சினைகளும் எதிர்ப்புகளும் வரவே செய்யும். - என்றார். (எ)

# எந்தச் சமூகத்தினரையும் வேறுபடுத்தி நோக்குவதை ஏற்கவே முடியாது

## சிறிதரனின் கருத்துக்கு சந்திரகுமார் கண்டனம்

எந்தச் சமூகத்தினரையும் வேறுபடுத்தி நோக்கும் எவருடைய எத்தகைய செயற்பாடுகளையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கு அனுமதிக்கவும் கூடாது என்று சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பிரதேசவாதக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார் எனத் தெரிவித்து அதனைக் கண்டித்துத் தாம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விடுதலை என்ற உன்னத இலட்சியத்துக்காகவும், அனைத்துத் தளைகளிலிருந்தும் விடுதலை பெற்ற மகத்தான வாழ்க்கைக்காகவும் தங்கள் இன்னுயிரை ஈந்த மக்களிடையே சாதி, மத, பிரதேச வேறுபாடுகளைச் சில சக்திகள் அண்மைக்காலமாக வெளிப்படுத்தி வருகின்றன. இது, எமது ஒற்றுமையைச் சிதைத்து, விடுதலை நோக்கிய பயணத்தை நிச்சயமாகப் பலவீனப்படுத்திப் பாதிப்பையே உண்டாக்கும் தீய செயலாகும்.

அத்துடன், இந்த மாதிரியான நடவடிக்கைகள் வரலாற்று ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் பாதிப்புக்கு உட்படுத்தும் அபாயத்தைக் கொண்டவை என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவேதான், இத்தகைய செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அத்துடன், இத்தகைய செயற்பாடுகளுக்கு எமது முழுமையான எதிர்ப்பையும் வெளிப்படுத்தி நிற்கிறோம். இத்தகைய வேறுபாடுகளைத் தங்கள் மனதிலும் செயற்பாட்டிலும் கொண்டிருக்கும் சக்திகளையும் தனி மனிதர்களையும் கூட நாம் எதிர்க்கின்றோம்.

### ஒலிப்பதிவுப் பகிரங்கம்

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மலையக மக்களைக் குறித்து அநாவசியமான முறையில் இழிவான சொற்பதத்தைப் பயன்படுத்திப் பேசியிருக்கும் ஓர் ஒலிப்பதிவு பகிரங்க வெளியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒலிப்பதிவு வெளிப்படுத்தப்பட்டு இரண்டு வாரங்களைக் கடந்து விட்ட நிலையிலும் கூட அதுதொடர்பான தன்னுடைய தவறை அவர் ஒப்புக்கொள்ளவோ அதற்காக மன்னிப்புக் கோரவோ அதைக் குறித்து விளக்கமளிக்கவோ இல்லை.

ஆகவே, அவர் தான் சொன்னது சரியே என்றும் அந்த மக்கள் தொகுதியினர் தன்னுடைய பார்வையில் கீழ் நிலையிலானவர்கள் என்றுமே கருதவைத்துள்ளார். இது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. பொறுப்பான நிலையில் இருக்கும் ஒருவர், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியானவர். இவ்வாறு ஒரு சமூக மக்களைத் தரம் தாழ்த்திப் பேசுகின்றமை எந்த நிலையிலும் அனுமதிக்கக் கூடியதல்ல. இவ்வாறு ஏற்றத் தாழ்வாகச் சமூகத்தைப் பார்க்கும் ஒருவர் சமூகங்களைச் சமத்துவமாக நடத்துவார் என யாரும் எதிர்பார்க்கவும் முடியாது.

### விடுதலைப் போராட்டத்தில் உயர்வான பங்களிப்பு

மலையக மக்கள் இந்த நாட்டுக்கும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கும் செய்த பங்களிப்புகள் மிக உயர்வானவையாகும். அது மட்டுமல்ல எமது மக்கள் சுமந்த துயரங்களையும் சந்தித்த அவலங்களையும் இரண்டு மடங்காக ஏற்றுக் கொண்டவர்களும் இவர்களே. ஆனால், இவற்றையெல்லாம் அவமதித்துப் புறக்கணிக்கும் வகையிலேயே சிறிதரனுடைய கூற்று அமைந்துள்ளது. சிவஞானம் சிறிதரனுடைய இந்தச் செயலைக் கண்டித்து வடக்கு, கிழக்கு வாழ் மலையக மக்களின் ஒன்றியம் தனது கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தது. இருந்தும் சிறிதரனோ, அவருடைய கட்சியோ, அவருடைய தலைமையோ எத்தகைய கரிசனையையும் இது தொடர்பில் இதுவரையில் எடுக்கவில்லை. இதுவும் கவலைக்குரியதே.

### அனைவரும் இணைந்து கண்டிக்க வேண்டும்

மேற்படி நிலைமைகள் அனைத்தும் மலையக மக்களை மிகுந்த துயரத்துக்கும் மிகுந்த கோபத்திற்கும் உள்ளாக்கியுள்ளன. அவ் மக்களை மட்டுமல்ல இந்த மண்ணிலே சமத்துவத்தையும் மெய்யான சமூக விடுதலையையும் இன விடுதலையையும் விரும்புகின்றவர்களையும் ஆத்திரமூட்டியுள்ளன. எனவே, இந்த மக்களின் உணர்வுகளோடு ஒன்றிணைந்து நாமும் நிற்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சமூக நீதியையும் விடுதலையையும் விரும்புவோர் அனைவரும் இந்த நீதியற்ற செயலைக் கண்டிக்க முன்வருவதுடன், இதற்குத் தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு இந்த அநீதியை முழுமையாகக் கண்டிப்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களுடன் என்றும் இணைந்திருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். - என்றுள்ளது.


### சிறுநீரக செயலிழப்பை தடுத்திட...

- உணவில் உப்பு, சீனி, எண்ணெய் பாவனையை குறைப்போம்.
- புகையிலை, மதுபானம் பாவனையை நிறுத்துவோம்.
- வலி நிவாரணி மாத்திரைகளை வைத்திய ஆலோசனைப்படி மாத்திரம் பயன்படுத்துவோம்.
- பாம்புக் கடிக்கு அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோம்.
- நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் ஆகியவற்றுக்குக் கிரமமாக சிகிச்சை பெற்றுக் கொள்வோம்.
- சமைப்பதற்கு அலுமினிய பாத்திரங்களைத் தவிர்த்து, மட்பாண்டங்களை உபயோகிப்போம்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.


### நாளை

17.07.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம் : அச்சுவினி மு.இ. 8.32 வரை
திதி : அட்டமி மு.ப. 8.41 வரை
சுபநேரம் : 12.00 – 1.30 வரை
இராகுகாலம் : 7.30 – 9.00 வரை

# உரிமைப் பிரச்சினையும் அபிவிருத்தியும் சமாந்தரமாகவே இருக்க வேண்டும்

## ஜனாதிபதியின் விசேட வேலைத்திட்ட பணிப்பாளர் பிரபாகணேசன் தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஜூலை 16

மக்களின் உரிமைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் மற்றும் அவர்களை அபிவிருத்தி நோக்கி நகர்த்தும் விடயங்களும் சமாந்தரமாகச் செல்லும் தண்டவாளங்களாக இருக்க வேண்டும் என்று ஜனாதிபதியின் விசேட வேலைத் திட்டப் பணிப்பாளர் பிரபாகணேசன் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தியை நோக்கிய விசேட வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது. இதில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய உணவு உற்பத்தி, சுற்றாடல் பாதுகாப்பு,போதைப் பொருள் ஒழிப்பு, சிறுநீரக நோய்க்காப்பு, சிறுவர்களுக்கு பாதுகாப்பு போன்ற ஐந்து வேலைத்திட்டங்களும் ஜனாதிபதி செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தியைக் குறிக்கோளாக முன் வைத்து ஏற்படுத்தப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வாகவே இக்கலந்துரையாடல் அமைந்துள்ளது.

மேலும், மக்களின் உரிமைப் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதற்கு பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அதே வேளை, உரிமைப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பான விடயங்களும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான விடயங்கள் இரண் டும் தண்டவாளங்களாக இருக்க வேண்டும்.

அப்படி இருந்தால் தான் எமது சமூகத்துக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு இல்லையென்றால் எமது சமூகம் பின்நோக்கிச் சென்று விடும்.

எனவே, மக்களின் உரிமை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசியல் கட்சிகள் செயற்படும் அதேவேளை அபிவிருத்தி தொடர்பான வேலை களை ஜனாதிபதி செயலகத் தினூடாக நாங்கள் செயற்படுத்தவுள்ளோம். இதன் மூலம் எமது சமூகம் முன்னேற்றம் அடையும்.- என்றார். (எ)

## ஆலய உற்சவம்

இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள வயாவிளான் உரிய மாதா ஆலயத்தின் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் என்று பங்குத் தந்தை எஸ்.ஜெயக்குமார் அறிவித்துள்ளார். (ச)

★★★

யாழ்ப்பாணம் குருநகர் தூய புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

24 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணைத் திருவிழாவும்,25 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ச)

★★★

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப்பிள்ளையார் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த் தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

# வவுனியா வடக்கில் இரு வீதிகளின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்



வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து வடமாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனால்ஒவ்வொரு மாகாணசபை உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்ட 50 லட்சம் ரூபாவில், வவுனியா வடக்கில் இரண்டு வீதிகள் புனரமைக்கும் பணிகள் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், வீதியை தெரிவு செய்த வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், எம்.தியாகராஜா, இராமநாதர் இந்திரராஜா ஆகியோரின் பிரதிநிதிகள் மற்றும் வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக் களத்தின் பிரதம பொறியிய லாளர் கௌசிகன், திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின்பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்ட னர். (எ)

# இலவச 'வை-பை' வசதி விரைவில் வழங்கப்படும்

## உறுதியளித்தார் பிரதமர்



கொழும்பு, ஜூலை 16

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய அனைவருக்கும் இலவச இணைய வசதியை ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க தெரிவித்தார்.

வை-பை வழங்கும் செயற்றிட்டத்தில் தாமதங்கள் ஏற்பட்டாலும், அளித்த வாக்குறுதிக்கு அமைய விரைவில் வழங் கப்படும் என்று அவர் உறுதி அளித்துள்ளார்.

பலபிட்டிய பிரதேசத்தில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உயர்தர மாணவர்களுக்கு லப்ரெப் வழங்கும்நடவடிக்கை எதிர்வரும் 3 வருட காலப் பகுதியினுள் இடம்பெறவுள்ளது.

நாட்டில் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அனைத்து நடவடிக்கைகளையும் ஒரே தடவையில் ஏற்படுத்திக் கொடுப்பது முடியாத காரியம். முதற்கட்டமாக சில பாடசாலைகளுக்கு லப்ரெப் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் .-என்றார். (எ)

## ஆவரங்கால் பாடசாலை உயர்தர மாணவரின் ஒன்றுகூடல் இன்று

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு, பாடசாலை பிரதான மண்டபத்தில் உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவர் பா.சிவராம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் யாழ்.கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா பிரதம விருந் தினராகவும் பழைய மாணவர்சங்கத்தின்செயலாளர் அ.கலைச்செல்வன்,பாடசாலை ஆசிரியர் பிறேமிளா கலைச்செல்வன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவர் ஆ. வவானந்தன், சுகிர்தா வவானந்தன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (இ)

# மன்னார் பெரியகட்டு தூய அந்தோனியார் திருவிழா குறித்து விசேட கலந்துரையாடல்

மன்னார், ஜூலை 16

மன்னார் மறை மாவட்டத்தின்புனிததலங்களில்ஒன்றான பெரியகட்டுதூயஅந்தோனியார் ஆலய திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

உதவிப் பிரதேசசெய லாளர் கே.முகுந்தன் தலைமையில் வெண்கள செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

எதிர்வரும் 28 ஆம் திகதி வெள் ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி திருப்பலியுடன் நிறைவடையவுள்ளது.

இந்தத் திருவிழாவுக்கு வரும் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆலய பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் மற்றும் குடிதண்ணீர், சுகா தாரம், பாதுகாப்பு, போக்குவரத்து உள்ளிட்ட அவசர தேவைகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது மன்னார் மறை மாவட்டகுருமுதல்வர் அன்ரனி விக்டர் சோசை, செட்டிக்குளம் பங்குத்தந்தை ஜெயபாலன் குரூஸ், வெண்கள பிரதேசச் செயலக அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள்,உட்படப்பலர்கலந்து கொண்டனர். (எ)

# வவுனியாவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



வவுனியா மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வவுனியா பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி சோமரத்ன விஜயமுனி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நகரின் மத்திய பகுதிகளான சந்தைப்பகுதி அதனை அண்டிய குளப்பகுதிகளில் டெங்கு ஒழிப்பு இடம்பெற்றது. நகரசபை பொது சுகாதாரப் பரிசோதகர்கள், நகரசபை ஊழியர்கள் பொலிஸாருடன் இணைந்து டெங்கு ஒழிப்பை முன்னெடுத்தனர். (எ)

காலைக்கதிர் Kalaikkathir



## நீர்வேலி முன்பள்ளி விளையாட்டு விழா

நீர்வேலி, ஜூலை 16

நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்ரீகணேசா முன்பள்ளி முன்றிலில் ஸ்ரீ கணேசா சனசமூக முன்பள்ளித் தலைவர் க.முருகையா தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக கனடா வாழ் ஜீவா வாசுகியும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயக் கல்வி அலுவலக ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர்க.நிர்மல நாதன், ஜேர்மன் வாழ் இ.சோமசேகரம்,லண்டன்வாழ் ஆர்.சுபத்திரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

## பரிசில் தினம்

நெல்லியடி, ஜூலை 16

நெல்லியடி மத்திய கல்லூரியின் பரிசில் தின நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி பிரதீபா வேதநாயகன் வழங்குவார். (இ)


★ ★ ★

சுழிபுரம், ஜூலை 16

சுழிபுரம் வடக்கு யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை முன்றிலில் இடம்பெறும். (ச)

### பெரும் செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்ட

# அராலி அமெரிக்கன் மிஷன் திருச்சபை பிரதிஷ்டை வழிபாடு இன்று மாலை



1860 களில் அமெரிக்கன் சிலோன் மிஷனரிமார்களால் அராலி வடக்கில் இந்தத் திருச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இத் திருச்சபையின் பெரும்பாலான அங்கத்தவர்கள் அராலி வடக்கு நாகேந்திரமடத்திற்கு அண்மையில் வசித்த காரணத்தினால் அவர்கள் தங்கள் வழிபாட்டிற்காக நாகேந்திர மடத்தடியில் ஓர் காணியைப் பெற்று அழகான ஆலயத்தைக் கட்டி 1906 ஆம் ஆண்டிலிருந்து அங்கேயே தொடர்ச்சியாக வழிபட்டு வந்தனர். இந்த ஆலயம் யாழ்ப்பாணத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்தில் யாழ்.கல்லுண்டாய் வட்டுக்கோட்டை வீதியில் அமைந்துள்ளது.

இந்த ஆலயம் சமூகத்தில் புகழ் பூத்த பல கல்விமான்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சமயத் தலைவர்கள், சட்டத்தரணிகள் அரசியல்வாதிகளெனப் பலர் உருவாகுவதற்குக் காரணமாக இருந்துள்ளதென்றால் அது மிகையாகது.

கல்விப்பணி, சமூக சேவை மற்றும் ஆன்மீகத் திருப்பணிகளை இந்தத் திருச்சபை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

இயற்கையின் தாக்கங்கள், உள்நாட்டுப்போர் மற்றும் இதர காரணிகளால் இப் பழைமை வாய்ந்த ஆலயத்தின் அங்கத்தினர் பலர் புலம்பெயர்ந்து வெளிமாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் வாழவேண்டிய கட்டாயத்துக்குள்ளாக்கப்பட்டனர். ஆனாலும் இத் திருச்சபையின் அங்கத்தினர் எங்கிருந்தாலும் தங்கள் தாய்ச்சபையுடன் உறவை தொடர்ந்து பேணிக்கொண்டேயிருந்துள்ளனர்.

இத்திருச்சபைக் கட்டடம் அவசரமாகத் திருத்தப்படவேண்டுமென்றும் அப்படி உடனடியாகச் செய்யாவிட்டால் பெரும் பின்விளைவுகள் ஏற்படுமென்றும் கட்டட பொறியியலாளர்கள் மூலம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கண்டறியப்பட்டது. பாரம்பரிய அமைப்பில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாது இவ்வாலயத்தைப் புதுப்பிப்பதற்கு பல லட்சம் (சுமார் 40 லட்சம்)தேவைப்படுமென்று உத்தேச மதிப்பீடு எதிர்வு கூறியது.

திருச்சபையினர் மக்களிடம் அவ்வளவு பணமில்லாவிட்டாலும் இது கடவுளின் வேலை, அவர் பார்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கையுடன் திருத்தப் பணிகளை ஆரம்பித்தனர்.


ஊர் மற்றும் வெளியூர் அங்கத்தவர்களின் சரீர, பண மற்றும் விசுவாசத்துடன் கூடிய ஜெபங்கள் மூலம் இப் புனருத்தாரணப் பணிகள் வெகு சிறப்பாகப் பூர்த்தியடைந்துள்ளன.

எதிர்வு கூறப்பட்ட தொகையிலும் பார்க்கப் பல லட்சம் ரூபாய்கள் மேலதிகமாகத் தேவைப்பட்டது. ஆனால் அதிசயிக்கத்தக்க வகையில் அராலித் திருச்சபை அங்கத்தினர் இப்புனிதப் பணியை நிறைவேற்றியுள்ளனர். இப்பணியில் முன்னின்று உழைத்த அனைவருடனும் இறையாசி நிறைவாய்த் தங்குவதாக! புனருத்தாரணம் செய்யப்பட்ட அராலி அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபைக் கட்டடம் இன்று 16 ஆம் திகதி ஞாயிறு மாலை 4.00 மணிக்குத் திருச்சபைத் தலைவர் அருள்திரு தே.தேவநேசன் அவர்களால் திருச்சபை மக்களின் வழிபாட்டுக்காக பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

இந்தச் சிறப்பு வைபவத்தில் மதகுருமார், சபை மக்கள், சமூகப் பெரியவர்கள் மற்றும் ஆர்வலர்கள் பெருமளவில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப் படுகின்றது.

**அருள்திரு அன்னப்பா ஜெயக்குமாரன்**
*( முன்னாள் தலைவர், அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை.)*

## 'சுவாமி விபுலாநந்தர்' ஆவணப்படம் 20 இல் மட்டு. நகரில் வெளியீடு!



இலங்கையின் மிகவும் ஆளுமை மிக்கவர்களில் ஒருவரான சுவாமி விபுலாநந்த அடிகளின் வாழ்வு மற்றும் பணிகள் பற்றிய 'முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தர்' ஆவணப்படம் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை மட்டக்களப்பு மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தில் வெளியிடப்பட உள்ளது.

'அரங்கம்' நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இந்த ஆவணப்படம், மட்டக்களப்பு நல்லையா உடையார் குடும்பத்தினரின் ஏழாவது திருவிழாவின் போது, மாமாங்கம் ஆலயத்தில் வெளியிடப்பட உள்ளது.

இந்த ஆவணப்படம் விபுலாநந்தர் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் தமிழ்மொழி மற்றும் சமூகத்துக்கு ஆற்றிய தொண்டுகள் பற்றி விவரிக்கின்றது.

தமிழ் ஆய்வாளர்கள் மற்றும் எமது அடுத்த தலைமுறையினர் ஆகியோருக்காகத் தயாரிக்கப்பட்ட இந்த ஆவணப் படத்தை கனடாவைச் சேர்ந்த பாபு வசந்தகுமார் தயாரிக்க, ராகுலன் சீவகன் இயக்கி இருக்கின்றார். (ச)

## சட்டவிரோதமாக மீன்பிடித்த 21 மீனவர்கள் திருமலையில் கைது!




திருகோணமலை,ஜூலை 16

சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட உள்நாட்டு மீனவர்கள் 21 பேர் திருகோணமலையின் இருவேறு பிரதேசங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிலாவெளி பர்வி தீவுக்கு அருகில் உள்ள கடற்பரப்பில் 15 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, அவர்கள் பயன்படுத்திய 2 டிங்கி படகுகள் , 220 மீற்றர் நீளமான தடைசெய்யப்பட்ட 2 வலைகள் மற்றும் 319 கிலோ மீன்கள் என்பன கைப்பற்றப்பட்டன எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, திருகோணமலை கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட வலையைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)

# முல்லையில் முஸ்லிம் குடியேற்றத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்

### சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. திட்டவட்டம்



முல்லைத்தீவு மாவட்டத்தில் காடழித்து புதிய முஸ்லிம் குடியேற்றங்கள் அமைப்பதை ஒரு போதும் ஏற்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மேற்படி முஸ்லிம் குடியேற்றங்களுக்கு அரசியல் அதிகாரம் கொண்டவர்களுடன் மாவட்ட அரச அதிபர் உட்பட அனைத்து அரச உத்தியோகத்தர்களும் துணை போகின்றனர் எனவும் குற்றஞ்சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட சாள்ஸ் நிர்மலநாதனிடம் ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக முல்லைத்தீவில் முஸ்லிம் மக்களுடைய குடியேற்றம் தொடர்பில் குழப்பகரமாக பதற்ற நிலை காணப்படுகின்றது. யுத்தத்திற்கு முன்னர் முல்லைத்தீவில் இருந்தவர்கள் மீண்டும் இங்கு வரும் போது வீட்டிற்கு உரிய காணி இல்லை என்ற ரீதியில் அவர்களுக்கான காணி வழங்கப்படுவதை நாங்கள் எதிர்க்கவில்லை.

ஆனால், ஒரு சில அரசியல்வாதிகள் கூளாமுறிப்பில் காடழிப்பு செய்து முஸ்லிம்களைக் குடியேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் நான் பேசியுள்ளேன். அப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அங்கிருந்தார்.

அரசியல் ரீதியாக அதிகாரம் உள்ளவர்கள் சிலர் கடந்த ஆட்சிக் காலத்தில் இழைத்த தவறை இப்போது ஆட்சியில் உள்ளவர்களும் இழைக்கின்றார்கள். இவர்களுடைய தவறான செயற்பாடுகளுக்கு பொலிஸ் திணைக்களமும் உடந்தையாக உள்ளது.

தற்போது முல்லைத்தீவில் குடியேற்றப்படவுள்ள முஸ்லிம் மக்களுக்கு ஏற்கனவே அரசாங்கத்தினால் காணிகளும், வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன. இதனால் தான் நாங்கள் எதிர்க்கின்றோம்.

பிலக்குடியிருப்பு காணி விடுவிப்பின்போது ஏற்கனவே அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணிகளை மீள ஒப்படைக்குமாறு கோரி கடிதம் அனுப்பப்பட்டது.

இங்கு அரசியல் ரீதியாக ஒரு பகுதி மக்களுக்கு ஒரு விதமாகவும், இன்னுமொரு பகுதி மக்களுக்கு வேறோர் விதமாகவும் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கொக்குளாய், கொக்குத்தொடுவாய்,கருநாற்றுக்கேணி பிர தேசத்தில் 1953 ஆம் ஆண்டு 136 பேருக்கு 4 ஏக்கர் வீதம் மகாவலி திட்டத்தின் கீழ் காணி வழங்கப்பட்டது.

அக் காணிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்களுக்கு மீண்டும் அக் காணிகள் வழங்கப்படும் என்று அத்திட்டத் தின் பணிப்பாளரினால் 2016 ஆம் ஆண்டு உறுதியளிக்கப்பட்டது. இருப்பினும் இன்றுவரை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.- என்றார். (ம)

# தசநாயக்காவின் கைது நடவடிக்கை பிரிவினைவாதிகளை மகிழ்விக்கவே!



## சீறுகின்றார் வீரவன்ஸ

கொழும்பு, ஜூலை 16

தமிழ் பிரிவினைவாதிகளை மகிழ்விக்கும் நோக்கிலேயே கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க கைது செய்யப்பட்டுள்ளார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கொமடோர் தசநாயக்க உள்ளிட்ட சகல இராணுவப் புலனாய்வாளர்களையும் உடனடியாக விடுதலை செய்து, படையினர் வேட்டையாடப்படுவதை நிறுத்துமாறு இந்தத் துரோக அரசை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

அதனைத் தொடர்ந்தும் செய்ய இடமளிக்கப் போவதில்லை என்று மக்களுக்குக் கூறிக்கொள்கிறோம். கொமடோர் டி.கே.பி. தசநாயக்க கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேபோல், போர் காலத்தில் போருக்கு தலைமை தாங்கிய அதிகாரிகள் கைது செய்யப்படுவார்கள். அவர்கள் நாட்டை மீட்க அர்ப்பணிப்புகளை மேற்கொண்டவர்கள்.

அனைவரையும் சிறையில் அடைக்கும் வரை காத்திருக்க வேண்டுமா?. இந்த விடயம் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளது.

அந்த அறிக்கையில் குறித்த குற்றச்சாட்டில் எந்த அதிகாரியையும் கைதுசெய்யும் அளவுக்கு போதுமான காரணங்கள் இல்லை.


தசநாயக்க உள்ளிட்ட இராணுவ அதிகாரிகளைக் கைது செய்ய சட்டமா அதிபரின் ஆலோசனை இல்லை. படையினரை கைது செய்யுமாறு மேல் மட்டத்தில் இருந்து ஆலோசனை வழங்கப்படுகிறது.

இதனால், புலனாய்வுப் பிரிவினர் சட்டமா அதிபரின் ஆலோசனையின்றி தமது இஷ்டத்துக்குப் படையினரை வேட்டையாடி வருகின்றனர்.

ஐ.நா. மனித உரிமை பேரவையை மகிழ்விக்க பார்க்கின்றனர். புலம்பெயர் தமிழர்களை மகிழ்விக்கவே இதனைச் செய்கின்றனர்.

இதன்காரணமாக இந்தச் தவறை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்காது, எதிராக வீதியில் இறங்குமாறு தேசிய சுதந்திர முன்னணி பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.- என்றார். (எ)

## தமிழக மீனவருக்கு இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க உரிமை இல்லை



இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க உரிமை கோர தமிழ்நாட்டு மீனவர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் வெளியிட்ட கருத்து வருமாறு:-

தமிழக மீனவர்கள் தங்கள் சொந்த நீரில் அவர்கள் விரும்பும் அனைத்தையும் எடுத்துக் கொள்ளும் உரிமை அவர்களுக்கு உண்டு.

ஆனால், இலங்கை கடற்பரப்பில் மீன் பிடிக்க உரிமை கோர தமிழ்நாட்டு மீனவர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை.-என்றுள்ளது. (எ)



பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனா அம்மையாரின் அழைப்பின்பேரில் அங்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பங்களாதேஷ் தேசிய வீரர்களின் நினைவுத்தூபிக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

## தகவல் அறியும் சட்டத்தின் மூலம் மக்களின் உரிமைகள் விரிவாக்கம்

### களுத்துறையில் நடந்த செயலமர்வில் சபாநாயகர்

தகவல் அறியும் சட்டத்தின் மூலம் பொதுமக்களின் உரிமைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன என்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும் சில வருடங்களில் இதன்பயன்களைநாடு பெற்றுக் கொள்ளும். சுயாதீன ஆணைக் குழு தற்போது செயற்படுகிறது. கடந்த காலங்களில் இது வெறும் கனவாகவே இருந்து வந்தது என்று அவர் மேலும் கூறினார்.

நாடாளுமன்றச் செய்தி சேகரிப்பதில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளர்களுக்காகக் களுத்துறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செயலமர்விலேயே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசின் கீழ் எந்த வகையிலும் ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை. தற்போது அதிகாரத்தில் உள்ளோர் ஊடக சுதந்திரத்துக்காகப் பெரும் அர்ப்பணிப்பை மேற்கொண்டவர்களாவர்.

நாட்டில்நிலவும்தற்போதைய நிலைமையில் ஊடக ஒடுக்குமுறைக்கு எந்தவித இடமும் இல்லை- என்றார்.

நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் அலுவலகம் மற்றும் அமெரிக்காவின் நிதி உதவியுடனான வேலைத் திட்டத்துடன் இணைந்து இந்தச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (எ)

## தோணி கவிழ்ந்து இரு மாணவர் சாவு

குருநாகல் - கெக்குனுகொல்ல அரக்கியால ரவ்லத்துல் ஹாபிழீன் அரபிக் கல்லூரி மாணவர்கள் இருவர், மாவிலாறு குளத்தில் தோணிகவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், நீரில் மூழ்கி, நேற்று உயிரிழந்தனர் என்று சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

கெக்குனுகொல்ல - அரக்கியாலப் பகுதியைச் சேர்ந்த எம்.என்.எம்.அப்துல்லாஹ் (வயது 11) மற்றும் எம்.எச்.எம். அப்துல்லாஹ் (வயது 18) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அந்த மாணவர்கள், மூதூரில் திருமணவீடொன்றுக்குச் சென்ற போது, மாவிலாறு குளத்தைப் பார்வையிடச் சென்ற வேளை, தோணியில் பயணித்துள்ளனர். அதன் போது தோணிகவிழ்ந்ததாக ஆரம்பக்கட்ட விசாரணையின் போது தெரிய வந்துள்ளது. (எ)

# சிறுபான்மையினரின் பிரச்சினையைத் தீர்க்க இடையூறாக இருப்பவர்கள் பிக்குகளே!

## புஞ்ஞாசார தேரர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 16

நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் பிரச்சினைக்குத் தீர்வு காண அன்றும், இன்றும் தடையாக இருப்பவர்கள் நாட்டின் பிக்குகளேயாவர் என்று சத்கோரள மகாதிசாவே பிரதிபிரதம சங்க நாயக்க சாஸ்திரபதி மாகல்கடவல வண. புஞ்ஞாசார தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய நாளிதழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கில் சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்க்க 1956, 1957 ஆம் ஆண்டுகளில் பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டபோது அதனைக் கிழித்தெறிவதற்குக் காரணமாக இருந்தவர்கள் பிக்குகளேயாவர்.

அந்தக்காலத்தில், பண்டாரநாயக்கவை ஆட்சிக்குக் கொண்டு வந்த பிக்குகளே இந்த ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அன்று பிக்குகள் ரொஸ்மிட்டை சுற்றி வளைத்து ஒப்பந்தத்தைக் கிழித்தார்கள். அன்று பிரதமர் பண்டார நாயக்க ஒப்பந்தத்தை கொண்டு வந்து என்ன கூறினார் தெரியுமா? இதை நான் இன்று கிழிக்கின்றேன். ஆனால் எதிர்காலத்தில் போர் கூட உருவாகலாம். - என்றார்.

டட்லி சேனநாயக்க பிரதமராக இருந்தபோது 1965, 1966 காலப் பகுதியில் செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்று செய்தார். அதையும் கிழித்தெறியக் காரணமாக இருந்தவர்களும் பிக்குகளே.

சரித்திரம் முழுவதும் பிக்குகள் அநாகரிகமான முறையில் இதில் தலையிட்டுள்ளார்கள். ஜே. ஆர். ஜெயவர்தன காலத்தில் அபிவிருத்திச் சபை, கிராம சபை என்பவற்றைக் கொண்டு வந்தார். அதுவும் செயற்படவில்லை. அதனால் தான் முப்பது வருடகால போர் ஏற்பட்டது. நாம் போரை முடிவுக்குக் கொண்டு வந்தாலும் காயம் இன்னும் உள்ளது. அதனை சுகமாக்க வேண்டிய பொறுப்பு நல்லாட்சி அரசினுடையது.

இந்த நல்லாட்சி அரசு புதிய அரசமைப்பு வரைவு ஒன்றை தயாரித்து வருகின்றது. அதற்கு மூன்று நிக்காயக்களையும் சேர்ந்த மகாநாயக்க தேரர்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இது எமது வரலாற்றை மீண்டும் ஞாபகமூட்டுகின்றது.

இன்றும் பிக்குகள் அதே இடத்தில் தான் இருக்கின்றார்கள். அதுதான் தவறான நிலைமையாகும். எமது நாட்டின் பொறுப்பான மதத் தலைவர்கள் பிரச்சினைகள் குறித்து சமாதானமான முறையில் நோக்க வேண்டும்.-என்றார். (எ)

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?



2017 ஆம் ஆண்டு ஏ விளம்பி வருடம் ஆடித் திங்கள் முதலாம் நாள் ஸப்தமித் திதி பகல் 1.37 மணி வரை. பின்னர் அஷ்டமி. நட்சத்திரம் – ரேவதி இரவு 12.20 மணி வரை. பின்னர் அச்சுவினி. அமிர்தயோகம் இரவு 12.20 மணி வரை. பின்னர் அசுபயோகம். பிறந்த நட்சத்திர வழிபாடு:– ரேவதி.

**ராகுகாலம்:**- மாலை 4.59 மணி முதல் 6.34 மணி வரை.

**சுபநேரம்:**- காலை 9.02 மணி முதல் 10.32 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி:**- இன்று திதி இல்லை.

**கணிப்பு:**- 'ஜோதிட மணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி

**சந்திராட்டமநாள்:**- மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம் ஆகிய நட்சத் திரங்களில் பிறந்தோர் இன்று சுப கருமங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

## 16.07.2017 இல் இருந்து 22.07.2017 வரை

### மேஷம்

சலனம் மிகுந்த வாரம். எந்த விஷயத்திலும் கவனம் தேவை. பண வரவு குறையும். குடும்ப உறவில் சச் சரவுகள் உண்டாகும். கடின முயற்சியின் பேரில் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் உண்டாகும். கடன்பட நேரிடும். உடலாரோக்கியம் பாதிப்புறும் நண்பர்கள், உறவினர்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகும். அரச அதிகாரிகள் கடுமையான வேலைப்பளுவால் அவதிப்படுவார்கள். வீண் பழி ஏற்பட வாய்ப்புண்டு. விவசாயிகளுக்கு லாபம் குறைவாகவே கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் எடுக்க வேண்டும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினை உண்டாகும்.

### ரிஷபம்

மகிழ்ச்சியான வாரம் ஆகும். தனவரவு அதிகரிக்கும். குடும்ப உறவு இனிமையாக இருக்கும். அயல் நாடு வேலை வாய்ப்புகள் உண்டாகும். அரச அதிகாரிகள் பதவி உயர்வு அடையப் பெறுவார்கள். மேலதிகாரிகளின் பாராட்டும், விரும்பிய இடமாறுதல்களும் கிடைக்கும். விவசாயிகளுக்கு அமோக லாபம் கிடைக்கும். புதிய சொத்துக்கள், காணிகள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். மாணவர்கள் தேர்வுகளில் சிறந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள். கலைத்துறையினர் தங்களின் புதிய படைப்புகளால் அமோக லாபமும், புகழும் விருதுகளும் பெறுவார்கள்.

### மிதுனம்

சம பலன்கள் உள்ள வாரம் ஆகும். பொருளாதாரம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்கள் கடுமையான வேலைப்பளுவால் சிரமப்படுவார்கள். எவ்வளவு சிறப்பாக பணியாற்றினாலும் மேலதிகாரிகளிடம் நல்ல பெயர் கிடைப்பது கடினம். வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். மாணவர்கள் கவனமாகப் படித்தால் தான் தேர்வுகளில் மதிப் பெண்கள் வாங்க முடியும். கலைத்துறையினர் புதிய படைப்புகளில் நஷ்டத்தைச் சந்திக்க நேரும். குடும்ப உறவு சீராக இருக்கும். பிள்ளைகள் நலனுக்கு அதிகம் செலவு செய்ய வேண்டி வரும்.

### கடகம்

யோகமான வாரம் ஆகும். பணபலம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு புதிய பதவிகள் தேடி வரும். விரும்பிய இடமாற்றம் கிடைத்து மகிழ்ச்சி அடைவார்கள். விவசாயிகள் அமோக விளைச்சல் அடைந்து கணிசமான பண லாபம் அடைவார்கள். கடன்கள் அடைபடும். புதிய விளை நிலங்களை வாங்குவார்கள். மாணவர்கள் படித்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுவார்கள். வேலை வாய்ப்புகள் அடையப் பெறுவார்கள். வியாபாரிகளுக்கு மேலதிக லாபம் கிடைக்கும்.

### சிம்மம்

கவலையான வாரம். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்ப உறவு ஓரளவு சீராக இருக்கும். நண்பர்கள் உறவினர்களுடன் அளவுடன் பழகுதல் நன்மைதரும். அரச அதிகாரிகள் உண்மையாக உழைத்தாலும் மேலதிகாரிகளிடம் நல்ல பெயர் கிடைப்பது கடினம். பதவி உயர்வு தள்ளிப் போகும். உத்தியோகத்தர்கள் கடுமையான வேலைப்பளுவால் உடலளவிலும், மனதளவிலும் பாதிப்படைவார்கள். விவசாயிகள் அதிக மழையாலும், பூச்சிகளாலும் பயிர்கள் சேதமடைந்து நஷ்டமடைவார்கள். மாணவர்கள் தங்கள் கடுமையான முயற்சியால் அளவான மதிப்பெண் எடுத்துத் தேர்ச்சி பெறுவார்கள்.

### கன்னி

சம பலன்கள் உள்ள வாரம். பொருள் வரவு மத்திமமாக இருக்கும். செலவுகள் அளவுக் கதிகமாகும். எடுக்கும் முயற்சிகள் தடைப்படும். உடல் நோய் வாய்ப்பட்டு மருத்துவச் செலவுகள் உண்டாகும். நண்பர்கள், உறவினர்களிடையே கருத்து வேறுபாடு உண்டாகும். குடும்பத்தில் கடின முயற்சிகளின் பேரில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறும். அதிக செலவினால் சேமிப்பு குறையும். கடன்பட நேரிடும். உத்தியோகத்தர்களின் கடின உழைப்பால் உடலும், மனமும் சோர்வடையும்.

### துலாம்

இன்பமான வாரம் ஆகும். தன லாபம் அதிகரிக்கும். குடும்ப வாழ்வு இனிமையாக இருக்கும். நண்பர்கள், உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். உடல் நலம் நன்றாக இருக்கும். சகோதர உறவு பலப்படும். பிரிந்திருந்தவர்கள் மீண்டும் சேர்வார்கள். பொன், வெள்ளி ஆபரணச் சேர்க்கைகள் உண்டாகும். வாகன யோகமும், சொத்து யோகமும் உண்டு. சுற்றுலா செல்லும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களால் லாபம் கிடைக்கும்.

### விருச்சிகம்

சுபீட்சமான வாரம் ஆகும். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப வாழ்வில் ஒற்றுமை, மகிழ்ச்சி அதிகரிக்கும். அரச அதிகாரிகள் சிறப்பாகப் பணியாற்றி பதவி உயர்வுகள் அடைவார்கள். படித்து முடித்த மாணவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்புகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு விருதுகளும், கணிசமான தன லாபங்களும் கிடைக்கப் பெறுவார்கள். அசையாத் சொத்துக்களை வாங்கும் சந்தர்ப்பம் உண்டு. புடவை, உணவுப் பொருள் வியாபாரிகள் அமோக லாபம் பெறுவார்கள். திருமண மாகாதவர்களுக்கு மங்கள காரியங்கள் பலிதமாகும்.

### தனுசு

யோசனையான வாரம். மனக்குழப்பம் சிந்தனை அதிகரிக்கும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். உடல் நலம் கெடும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தொழில் செய்யும் இடங்களில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகும். மன நிம்மதி குறையும். உறவினர்கள், நண்பர்களால் தொல்லைகள் உண்டாகும். சொத்து சம்பந்தமான வழக்குகள் இழுபறியில் இருக்கும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைப்பது கடினம். வியாபாரத்தில் பொருள்கள் விலைப்படாமல் தேங்கிக் கிடக்கும்.

### மகரம்

மத்திமமான வாரம் ஆகும். பொருள் வரவு சுமாராக இருக்கும். தேவையற்ற செலவுகள் உண்டாகும். உடலில் ரோகங்கள் உண்டாகி, மருத்துவச் செலவுகளுக்கு வழி வகுக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நன்று. தொழிலில் பிரயாசை, அலைச்சல்கள் அதிகமாகும். மாணவர்கள் கல்வியில் சுமாரான முன்னேற்றத்தைக் காண்பார்கள். வியாபாரம் ஏற்றமும் இறக்கமுமாக நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச் சுமை அதிகமாகும். வெளிநாட்டு பயணம் தாமதமாகும்.

### கும்பம்

உயர்வான வாரம் ஆகும். வருமானம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வீடு, நிலம் வாங்கக் கூடிய சூழ்நிலை உருவாகும். தொழிலில் வளர்ச்சியும் நன்றாக இருக்கும். பழைய கடன் பணம் வசூலாகும். மாணவர்கள் சிறந்த மதிப் பெண்கள் பெறுவார்கள். இதுவரை இருந்த உடல் உபாதைகள் தீரும். நினைத்த காரியங்கள் கைகூடும். பிரிந்து சென்ற உறவினர்கள் உதவிக்கு வருவார்கள். திருமணமாகாதவர்களுக்கு திருமண பாக்கியம் ஏற்படும். உத்தியோகத்தர்கள் பதவி உயர்வு மூலம் இடமாற்றம் பெறுவார்கள்.

### மீனம்

அதிர்ஷ்டமான வாரம். பணம் தாராளமாகப் புழங்கும். தொழில்துறையில் இதுவரையில் அடைந்த சிரமங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். உடலாரோக்கியம் சீராகும். வீடு, காணி வாங்கும் யோகமும், புது ஆடை, ஆபரணங்கள் வாங்கி அணியும் யோகமும் உண்டு. பிள்ளைகளின் கல்வி மேம்படும். உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அரச உதவிப் பணம் கிடைக்கும். பல விதத்திலும் வியாபாரம் நன்கு விருத்தியாகும். உத்தியோகத்தர்கள் பதவி உயர்வு பெறுவார்கள். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக்கும்.

# புதிய அரசமைப்பு ஏன் அவசியம்?



பேராசிரியர்
நவரத்ன பண்டார

புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் சில பகுதிகள் தற்போது எழுதப்பட்டுள்ளன. மேலும் பல பகுதிகள் எழுதப்பட்டு வருகின்றன. கருத்து வேற்றுமைகளுக்கு உரித்தான விடயங்கள்பற்றி இணக்கப்பாட்டைக் காண்பதற்கு பிரதமர் தலைமையில் செயற்படும் அரசியற் கட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை, அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல், தேர்தல் முறைமை, ஒற்றையாட்சி முறைமை ஆகிய விடயங்கள் இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்களாகும். அதுபற்றிய கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய அரசமைப்புக்கான முழுமையான கலந்துரையாடல்கள் நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வருகின்றன. வழிகாட்டல் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, அரசமைப்பைத் தயாரிக்கும் சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டியமையால் அவை இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

### புதிய அரசமைப்பு ஏன் அவசியப் படுகிறது?

அரசமைப்பைத் தயாரிக்கும் சபையின் உபகுழுக்கள் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன. அந்த அறிக்கைகள் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன. அரசமைப்பில் உள் வாங்கக்கூடிய அடிப்படை கோட்பாடுகள் பற்றிய விடயங்கள் மாத்திரமே அவற்றில் உள்ளடக்கப்பட்ட விடயங்களாகும். எஞ்சியவை நாடாளுமன்ற சட்ட மற்றும் நிர்வாக ஏற்பாடுகளுக்கமையவே சமர்ப்பிக்கப்பட வேண்டும். உதாரணமாக மாகாண சபை முறைமைகளையும், அரச சேவையையும் பற்றிய பிரேரணைகளைக் கருத்திற்கொள்ளும்போது அவை பற்றி தனியான சட்டங்கள் அவசியமென்பது தோன்றும்.

அதேசமயம், அரசியற்றுறையில் வேறு வகையான கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன. அதன்மூலம் புதிய அரசமைப்பு அவசியமில்லையென்று கூறுவதற்கு முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசமைப்பைத் திருத்தி முன்னகர வேண்டுமென்பதே அதன் குறிக்கோளாகும். நிறைவேறு ஜனாதிபதி முறைமை, தேர்தல் முறைமை ஆகிய மாற்றப்பட வேண்டிய விடயங்களை மாற்றியமைப்பது போதுமானது.

எனவே, தற்போதைய அரசமைப்புக்குப் பதிலாக புதிய அரசமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டுவதிலேயே அவர்கள் அதிக நேரத்தை விரயமாக்குகின்றனர்.

தற்போதைய அரசமைப்பு 1978 இல் அங்கீகரிக்கப்பட்டது. அது முதல் 38 ஆண்டுகள் கடந்துள்ளன. அன்று அந்த அரசமைப்பைத் தயாரிப்பதற்கு மக்களுக்கு அவசியம் இருக்கவில்லை. ஆட்சியாளர்கள் தாம் பெற்ற அதிகாரத்தைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்துவதற்கும், கிடைத்த அதிகாரத்தைப் பேணிப் பாதுகாப்பதும் அவர்களின் தேவையாக இருந்தது. அன்று தமக்குஅவசியமானநடவடிக்கைகளை அமுல்படுத்துவதை இலகுபடுத்துவதற்கே 1978 அரசமைப்பு தேவைப்பட்டது. எனவே, இந்த அரசமைப்பு காலம் கடந்தது மாத்திரமல்லாமல், எமக்குப் பொருத்தமில்லாததாகவும் அமைந்தது. அதுமாத்திரமல்லாமல் நாட்டு மக்களைப்பற்றி சிந்தித்து அது உருவாக்கப்படவுமில்லை.

### 1972 அரசமைப்பிற்கான திருத்தம்

இன்றைய அரசமைப்பு 1978 செப்ரெம்பர் 30 ஆம் திகதி அங்கீகரிக்கப் பட்டது.

இதன்போது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமை ஸ்தாபிக்கப்பட்டதோடு, அப்பதவிக்கு ஒரு நபர் சத்தியப்பிரமாணமும் செய்திருந்தார். இந்நிகழ்வு 1978 பெப்ரவரி 04 ஆம் திகதி இடம்பெற்றது. 1972 ஆம் அரசமைப்பின்கீழ் இது நிறைவேற்றப்பட்டது. இதற்கமைய நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிப் பதவி 1972 அரசமைப்பைப் பயன்படுத்தியே தயாரிக்கப்பட்டது.

1972 அரசமைப்பில் அதிகாரம் ஒழுங்கமைக்கப்பட்டு இருந்த முறைமைக்கு அமைய ஜனாதிபதிப் பதவியின் அதிகாரங்கள் அரசமைப்பில் எழுதப்பட்டிருந்த முறைமைக்கமைய, ஒரு திருத்தத்தின்மூலம் அதிகாரம் நிறை வேற்று ஜனாதிபதியிடம் கையளிப்பது ஜயவர்த்தனவுக்கு இலகுவாக அமைந்தது. பிரதமரால் ஜனாதிபதி நியமனம் செய்யப்படுவார் என்ற உறுப்புரையை நீக்குவதை மாத்திரமே அவர் செய்தார். நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்து ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்குவதற்கு பிரதமருக்கு அதிகாரம் வழங்கப்படும் உறுப்புரையும் நீக்கப்பட்டது. அதேசமயம், பிரதமரின் ஆலோசனைக்கமைய செயற்படுவது அவசியம் என்று ஜனாதிபதி அதிகாரத்துக்கு இருந்த தடைகள் நீக்கப்பட்டன. இதன்மூலம் இயல்பாகவே ஜனாதிபதி பதவி உயர்ந்த அந்தஸ்தில் நிறுவப்பட்டது. பெயரளவிலான ஜனாதிபதி பூரண அதிகாரம்கொண்ட நிறைவேற்றுநராக நியமிக்கப்பட்டார்.

### 6 மணித்தியாலங்களுக்கும் குறைந்த நேரத்தில் இது அமுலாக்கப்பட்டது

இவை அனைத்தும் எழுதப்பட்ட பின்னர் அச்சந்தர்ப்பத்தில் பிரதமர் பதவி வகித்த நாடாளுமன்ற உறுப்பினர், 1978 பெப்ரவரி 04 ஆம் திகதி ஜனாதிபதியாக நியமனம் பெறுவா ரென அரசமைப்புக்கான திருத்தத்தில் குறிப்பிடப்பட்டது. இத்திருத்தம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்கள் மத்தியில் கலந்துரையாடலுக்கு எடுக்கப்படவில்லை. அவ்வாறான உரையாடலுக்கு அது பகிரங்கப்படுத்தப்படவும் இல்லை. அரசமைப்பு திருத்தம் முதல்நாள் காலையில் அவசர சட்ட வரைவாக





நீதிமன்றத்தின் கருத்தையும் பெற்று அன்று மாலையிலேயே நாடாளுமன்றத்தின் ஒப்புதலையும் பெற்றது. இதனை நாம் மறுநாள் காலை பத்திரிகை வாயிலாகவே அறிந்துகொண்டோம். நேற்று மாலை இரண்டு மணிக்கும் இரவு ஒன்பது மணிக்கும் இடையில் நாடாளு மன்றத்தில் இத்திருத்தம்அங்கீகரிக்கப்பட்டதென்று காலையில் வெளியான பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

1972 அரசமைப்புக்கு அமைய ஒரு சட்டவரைவு அவசரமானதென அமைச்சரவை கூறினால் - குறித்துரைக்கப்பட்ட சட்டவரைவு வர்த்தமானியில் பிரசுரிக்காமல் - நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் பிரசுரிக்காமல் - அரசமைப்பு நீதிமன்றத்துக்கு அனுப்ப முடியும். அது தொடர்பான அரசியல் நீதிமன்றத்தின் கருத்தை 48 மணித்தியாலங்களுக்குள் அறிவிக்க வேண்டும்.மேற்படி 48 மணித்தியாலத்திற்குள் அறிவிக்க வேண்டிய தீர்ப்பு அன்று காலை 10 மணிக்கு அறிவிக்கப்பட்டது.

சபாநாயகர் அதனை நாடாளுமன்றத்துக்கு அறிவித்த பின்னர் அமைச்சர் ஒருவர் பின்வரும் பிரேரணையைக் கொண்டு வந்தார். இன்று மாலை இரண்டு மணிக்கு இது தொடர்பான விவாதம் ஆரம்பிக்கப்படும். இத் தருணத்தில் பதவி வகித்த அரசுக்கு நாடாளுமன்றத்தில்5:6பெரும்பான்மை வாக்குகள் இருந்தன. எனவே, பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பித்த விவாதம் மாலை எட்டு மணிக்கு முன்னர் திருத்தம் அங்கீகரிக்கப்பட்டது. இவ்வாறாக, மக்கள் நித்திரை கொண்டிருந்த இரவு வேளையில், ஆறு மணித்தியாலங்களுக்கும் குறைந்த காலகட்டத்தில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறாகவே ஏற்கனவே அமுலில் இருந்த அமைச்சரவை அரசாங்க முறைமை ஜனாதிபதி ஆட்சி முறையாக மாற்றம் பெற்றது.

1977 இல் நான் பல்கலைக்கழகத்தின் உதவி விரிவுரையாளராகப் பதவி ஏற்றபோது மேற்குறிப்பிட்ட அரசமைப்புக்கான திருத்தத்தின் விளைவுகள் பற்றி அப்போது 'அத்த' (உண்மை) என்ற சிங்களப் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதினேன். இக்கட்டுரை 1977 ஒக்ரோபர் மாதத்தில் 'அத்த' பத்திரிகையில் மூன்று பகுதிகளாகப் பிரசுரிக்கப்பட்டது.

அக்கட்டுரையின் தலைப்பு உத்தேச அரசமைப்புப் திருத்தத்தின் பயங்கரமான விளைவுகள் என்பதாகும். இத்திருத்தத்தின் மூலம் புதிய அரசமைப்பு நாட்டில் ஸ்தாபிக்கப்படுமென மேற்படி கட்டுரையின்மூலம் நான் எடுத்துரைத்தேன். 1947 அரசமைப்பின் கீழ் பெயரளவிலான நிறைவேற்றுத்துறை ஜனாதிபதி பதவி குறித்துரைக்கப்பட்டது.

தேசாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது. ஜனாதிபதி இங்கிலாந்து அரசியின் பிரதிநிதியாகச் செயற்பட்டமையும், இங்கிலாந்தின் அரசி தவறு செய்ய முடியாதென்ற முத்தீர்ப்பு காரணமாகவே, தேசாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாதென்ற கோட்பாடு உருவாகியிருந்தது. பெயரளவிலான ஒரு பதவிக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்க முடியாதென்ற காரணமும் அதற்கு அடிப்படையாகும். இது 1972 அரசமைப்பை முன்கர்த்தியது. அன்று ஜனாதிபதி பெயரளவிலான நிறைவேற்றுத் துறையைச் சார்ந்தவராக இருந்தார். 1977 இன் திருத்தத்தின் மூலம் ஜனாதிபதி அரசியல் நிறைவேற்றுநராக நியமிக்கப்பட்டாராயினும் மேற்படி உறுப்புரை நீக்கப்படவில்லை. இவ்வாறாக ஓர் அரசியல் தலைவரான ஜனாதிபதி சட்டத்தைவிட மேன்மையானவராகக் கருதப்பட்டார். ஆட்சியாளர் சட்டத்துக்கு மேல் இருப்பாரேயாயின் அங்கு சட்டத்தின் ஆட்சி நிலவமாட்டாது. சட்டத்தின் ஆட்சி இல்லாத விடத்து ஜனநாயகம் மட்டுப்படுத்தப்படும்.

> *தற்போதைய அரசமைப்பு 1978 இல் அங்கீகரிக்கப்பட்டது. அது முதல் 38 ஆண்டுகள் கடந்துள்ளன. அன்று அந்த அரசமைப்பைத் தயாரிப்பதற்கு மக்களுக்கு அவசியம் இருக்கவில்லை. ஆட்சியாளர்கள் தாம் பெற்ற அதிகாரத்தைத் தொடர்ந்தும் உறுதிப் படுத்துவதற்கும், கிடைத்த அதிகாரத்தைப் பேணிப் பாதுகாப்பதும் அவர்களின் தேவையாக இருந்தது.*

### ஒரே மட்டுப்பாடு

இவ்வாறாக சிருஷ்டிக்கப்படும் ஜனாதிபதிப் பதவியின்அதிகாரத்தை வலுப்படுத்துவதை இலக்குவைத்து 1978அரசமைப்புதயாரிக்கப்பட்டது. ஜனாதிபதிப் பதவியை வலுப்படுத்துவதற்கு அவசியமான முறையிலேயே தேர்தல் முறைமை உட்பட அனைத்து விடயங்களும் தயாரிக்கப்பட்டன. அதன் அதிகாரத்தை பலவீனப்படுத்தக்கூடிய அனைத்தும் நீக்கப்பட்டன. ஒருநபர்நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவிக்கு இரு தவணைகளுக்கு மேல் தேர்ந்தெடுக்கப்பட முடியாதென்ற மட்டுப்பாடு உருவாக்கப்பட்டது. (18 ஆம் பக்கம் பார்க்க...)

# அரசமைப்பு முயற்சியில் அவதானம் அவசியம்!

வி. எஸ். எஸ். தனஞ்சயன்
சட்டத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

இலங்கையின் புதிய மூன்றாவது குடியரசு அரசமைப்பு தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அடிப்படை உரிமைகளை உறுதிசெய்யும், அரச நிறுவனங்களை கட்டமைக்கும் அடிப்படைச் சட்டம் என்பதற்கு அப்பால் பல்வேறு எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தி நிற்கும் ஒரு முக்கியமான ஆவணமாகக் காணப்படுகின்றது. 2009 இன் பின்னர் தமிழர்களிற்கான சமஷ்டி முறைமையிலான அதிகாரங்களுடன் கூடிய அரசியல் தீர்வு புதிய மூன்றாவது குடியரசு அரசமைப்பு மூலம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுதந்திரத்திற்கு முன்னரான காலப் பகுதியில் இலங்கையின் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இணைந்து போராடினார்கள். தமிழ் மக்கள் மற்றும் தமிழ்த் தலைவர்களின் சுதந்திரத்திற்கான பங்களிப்பு மிகக் காத்திரமானது. 1948 ஆம் ஆண்டின் சுதந்திர அரசமைப்பு சிறுபான்மையின மக்கள் மீது பாகுபாடுகாட்டி பாதிக்கும் வகையிலான சட்டங்களைத் தடை செய்வனூடாக சிறுபான்மையின மக்களிற்கானதொரு பாதுகாப்பை பிரிவு 29 (2) இன் மூலமாக ஏற்படுத்தியிருந்தது.

ஆனாலும் சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் தமிழ்மக்கள் பல்வேறு ஒடுக்குமுறைகளிற்கு முகங்கொடுக்க நேரிட்டது. சிறுபான்மையின மக்களைப் பாதிக்கக்கூடிய வகையிலான 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் மற்றும் 1948 ஆம் ஆண்டு பிரஜாவுரிமைச் சட்டம் என்பன நிறைவேற்றப் பட்டன.

கோடீஸ்வரன் எதிர் சட்டமா அதிபர் என்ற வழக்கில் அரசதுறையில் சேவையாற்றுவதற்கு சிங்களமொழி அறிவு அவசியம் எனத் தீர்ப்பளிக்கப் பட்டது. அரச வேலை வாய்ப்புக்களிலும், பல்கலைக்கழக அனுமதிகளிலும் திறமையிருந்த போதிலும் தமிழர்களின் உள்ளீர்ப்புத் திட்டமிட்டுக் குறைக்கப்பட்டது. இவ்வகையான தொடர் ஒடுக்குமுறைகளே ஜனநாயக அரசியலில் ஓர் நம்பிக்கை இழப்பிற்கும் அதன் பேறாக வடக்குக் கிழக்கில் தமிழ் ஆயுதக் குழுக்களின் தோற்றத்திற்கும் காரணமாக அமைந்தன.

1970 களில் ஆரம்பித்த தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் 2009 மே 18 இல் மௌனித்ததன் பின்னர் யுத்தத்தின்போது தமிழ் இனத்திற்கு எதிராக புரியப்பட்டவை எனக் கூறப்படும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், இனவழிப்பு குற்றச்சாட்டுக்கள், யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சர்வதேச விசாரணை மற்றும் இலங்கையில் தமிழ் மக்களிற்கு நிரந்தரமான அரசியற் தீர்வு ஒன்று வழங்கப்படவேண்டும் என தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் ஐக்கிய நாடுகள் சபை உட்பட்ட பல்வேறு தரப்புக்களாலும் வலியுறுத்தப்பட்டது. மஹிந்தவின் காலப்பகுதியில் தமிழ்த் தலைமைகளால் எதுவுமே முடியாதுபோக, தமிழ்த் தலைமைகளே தமிழ்மக்களை 2015 ஜனவரி 8 இல் மைத்திரி - ரணில் தரப்புக்கு ஆதரவளிக்கச் செய்தார்கள். அதன் பேறாக புதிய கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியது. புதிய மைத்திரி - ரணில் அரசு நிலைமாறு கால நீதிச் (Transitional Justice) செயற்பாட்டை முன்னெடுப்பதாகவும், நிலைமாறு கால நீதிச்செயற்பாட்டின் குறிக்கோள்களில் நல்லிணக்கம் மற்றும் மீள நிகழாமையை (non-recurrence) உறுதிப்படுத்தல் ஆகிய இரண்டு குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதாகவும், அந்த அரசமைப்பில் தமிழ் மக்களிற்கு அதிகாரப் பரவலாக்கத்தின் மூலமாக நிரந்தரமான ஓர் அரசியற் தீர்வு வழங்கப்படும் எனவும் உறுதியளித்தது.

ஆனால் அரசமைப்பாக்கச் செயற்பாடு தமிழ் மக்களைப் பொறுத்தவரை நம்பகரமானதாகவோ, திருப்தி அளிக்கக் கூடியதாகவோ இல்லை. அரசமைப்பாக்கச் செயற்பாட்டின் ஒருபகுதியாக இலங்கையின் சகல பகுதிகளிலிருந்தும் அரசமைப்புத் தொடர்பான மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக பொதுமக்கள் கருத்தறியும் குழு (Public Representation Committee) ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இக்குழு இலங்கை முழுவதும் 4000 வரையிலான தனிநபர்களிடம் மட்டும் பெற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்களுடன் மூன்று மாதங்களில் தனது இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்திருந் தது. குறிப்பாக வடக்கு, கிழக்கு பகு திகளில் மிகக்குறைவான எண்ணிக்கையிலான கருத்துக்களே பெறப்பட்டன.

தற்போதைய இலங்கை போன்ற ஓர் சூழ்நிலையிலிருந்த தென்னாபிரிக்கா, தனது வரலாற்று முக்கியத்துவம் மிக்க தற்போதைய அரசமைப்பினை இரண்டு வருடங்களிற்கு மேலாக தென்னாபிரிக்காவிலும் ஏனைய நாடுகளிலும் பல்வேறு ஆய்வுகள் மேற் கொண்டு உலகளவில் சிறந்ததொரு அரசமைப்பாக உருவாக்கியது. தென்னாபிரிக்காவின் அரசமைப்பாக்கச் செயற்பாட்டுடன் ஒப்பிடும்போது இலங்கையினுடைய அரசமைப்பாக்கச் செயற்பாடு வினைத்திறனற்றதாகவும், நம்பகத்தன்மையற்றதாகவும் காணப்படுகின்றது.

புதிய அரசமைப்பின் மூலம் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றையே சர்வதேச சமூகமும் தமிழ் மக்களும் எதிர்பார்க்கின்றனர். ஆயினும் புதிய அரசமைப்பில் சமஷ்டி என்ற சொற்பதம் இடம்பெறமாட்டாது. மாறாக சமஷ்டி முறைமைக்கான உள்ளடக்கங்கள் காணப்படும் என அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன கூறிவருகின்றன. சமஷ்டி என்ற சொற்பதம் வெளிப்படையாக அரசமைப்பில் காணப்படவில்லையாயின் பின்னர் அம் முறைமை சமஷ்டி அடிப்படையிலான முறைமை எனக் கூறப்படமுடியாது. அரசமைப்பு பொருள் கோடல்களிலும் (constitutional interpretations) இது ஓர் சமஷ்டி அற்றமுறைமையாகவே நீதிமன்றங்களால் பொருள்கோடல் செய்யப்படும் அபாயம் உள்ளது.

பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் கூட மாகாணசபைகளிற்கு வழங்கப்பட வில்லை என்பது, எதிர்காலத்தில் தீர்வுகள் மற்றும் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரங்கள் குறைபாடற்ற வகையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு நடைமுறைப்படுத்த வல்லனவாக அமையவேண்டும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. சமஷ்டி அடிப்படையில் என்ன அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன என்பது, இதுவரை புரியாத புதிராகவே உள்ளது.

தமிழ் மக்களினுடைய தேசியம் மற்றும் இறைமை என்பனவற்றிற்கு மதிப்பளிக்கும் வகையிலான பதின்மூன்றாம் திருத்தத்திற்கு மேலான அதிகாரங்களுடன் கூடியதீர்வுகள் தவிர்ந்த வேறு எவையும் தமிழ் மக்களால் பரிசீலிக்கப்படக் கூடியவை அல்ல.

தொடர்ந்தும் புதிய அரசமைப்பில் பௌத்தத்திற்கு முன்னுரிமை அளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ''பௌத்தத்திற்கு முன்னுரிமை அதேவேளை ஏனைய சமயங்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும்'' என்ற ஏற்பாடு தர்க்க ரீதியாகவே தன்னகத்தே முரண்படுகின்றது. இந்த ஏற்பாடானது இலங்கை ஓர் மதச்சார்பற்ற நாடு (secular state) என்ற தன்மையில் இருந்து விலகி தன்னை ஒரு சிங்கள, பௌத்த நாடாகவே அரசமைப்பின் மூலமும் உருவகித்துக்கொள்ள முயல்கின்றது என்பது தெளிவாகப் புலப்படுகின்றது. இலங்கையின் அரச தலைவர்கள் தொடர்ந்து பௌத்த கடும்போக்குவாதிகளின் கருத்துக்களிற்கு செவிசாய்த்து பாரபட்சத்துடன் அரசமைப்பாக்கச் செயற்பாட்டில் ஈடுபடுவது இலங்கையின் நல்லிணக்கத்திற்கு பங்கம் விளைவிப்பதாகவே அமைகின்றது.

2009 இன் பின்னர் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமது பிரதிநிதிகளாக ஏற்று வாக்களித்திருந்தனர். 2009 இற்குப் பின்னரும் தமிழ்மக்களிடம் போர்க்குற்ற விசாரணைகள், தமிழ் மக்களின் வாக்குப் பலம், பூகோளஅரசியல் மற்றும் சர்வதேசஅரசியலில் தனித்தரப்பாகச் செயற்படக்கூடிய தன்மைகள் உள்ளடங்கலான ஒரு பேரம் பேசும் சக்தி காணப்பட்டது. இச்சக்திகள் அனைத்தும் இராஜதந்திரம் எனும் பெயரில், தமிழர்களிற்கு நிரந்தரமான அரசியற் தீர்வு இலங்கை அரசிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட முடியும் என்ற வகையில் விட்டுக்கொடுப்புச் செய்யப்பட்டன. ஆனால் தற்பொழுது அரசமைப்பின் மூலமான தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதான ஒரு தீர்வு கிடைக்குமா என்பது கேள்விக்குறியாகி வருகின்றது.

சர்வதேச விசாரணை, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கான பொறுப்புக் கூறல், காணிவிடுவிப்பு, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தொடரும் பௌத்த சிங்கள மயமாக்கல், இராணுவ மயமாக்கல் போன்ற பல்வேறு விடயங்களுக் குத் தீர்வு காணப்படாத இந்நிலையில் தற்பொழுது போலியான ஓர் அரசமைப்பின் மூலமும் அரசியல் தீர்வு இன்றி தமிழ் மக்களை ஏமாற்றும் முயற்சி ஒன்று முன்னெடுக்கப்படுகின்றது. இத்திட்டங்களில் மேலும் ஓர் அங்கமாக அரசமைப்பை அறிமுகப்படுத்தும் வேளையில் வடக்கு மாகாணசபையில் தெற்குடன் இணைந்து செயற்படக்கூடியவாறான அரசியல் தலைமையை மாற்றவும், வடக்கில் குழப்பங்களை ஏற்படுத்தி மக்களின் சிந்தனைகளைத் திசை திருப்பி அச்சந்தர்ப்பத்தில் அரசமைப்பை நிறைவேற்றவும் சூழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

இலங்கையின் 1972 ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசமைப்போ அல்லது 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசமைப்போ தமிழ் மக்களாலும் தமிழ்த் தலைவர்களாலும் அங்கீகரிக்கப்படாமல் நிராகரிக்கப்பட்டிருந்தன. ஆயினும் தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்படாத இவ்விரு அரசமைப்புக்களும் 1972 ஆம் ஆண்டு தொடக் கம் இன்று வரை அண்ணளவாக அரை நூற்றாண்டுகள் தமிழர்களை ஆட்சி செய்திருக்கின்றன. தற்பொழுது உருவாக்கப்படுகின்ற அரசமைப்பு தமிழ் மக்களுக்கான தீர்விற்கானதொரு அடிப்படையாகக் கருதப்படுகின்றது. ஆகையால் இந்தப் புதிய அரசமைப்பு தமிழ் மக்களினுடைய எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யக்கூடியதாக அமைந்தால் மாத்திரமே தமிழ்மக்களால் அங்கீகரிக்கப் பட வேண்டும். தமிழ்மக்களுக்கான தீர்வை வழங்காத, பிரதி கூலமான ஓர் அரசமைப்பை தமிழ் மக்கள் ஏற்று அங்கீகரித்தால், தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்டது என்ற காரணம் காட்டப்பட்டு எதிர்காலத்தில் பல நூற்றாண்டுகள் அதே அரசமைப்பினால் தமிழ் மக்கள் ஆளப்படக்கூடிய ஓர் அபாயம் தற்பொழுது காணப்படுகின்றது. இந்த அபாயத்தை இன்றைய தமிழ் மக்கள் அறிந்து விழிப்புடன் செயற்படாவிடின், எதிர்காலத்தில் இலங்கைத் தீவில் இறைமை கொண்ட தனித்துவமானதும், கௌரவமானதுமான ஓர் இனமாக தமிழ் இனம் நிலைத்திருப்பதுகேள்விக்குரிய ஒரு விடயமாகும்.





# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



35




## அத்தியாயம் - III

## வாழ்க்கை முறையில் நிகழ்ந்த மாற்றங்கள்

மதியும் பிரபாகரனும் 1984 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி திருப்போரூர் முருகன் கோயிலில் ஓர் எளிமையான சடங்கில் திருமணம் செய்து கொண்டார்கள். அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பிரபாகரனின் நெருங்கிய தோழர் ஒருவரின் பெயர் அந்தக் குழந்தைக்கு சூட்டப் பட்டது; சாள்ஸ் அன்ரனி சீலன்! சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில் மிகத் தொடக்கத்திலேயே வீரச்சாவைத் தழுவிக் கொண்ட இயக்கப் போராளிகளில் ஒருவரே சாள்ஸ் அன்ரனி சீலன். அதன் பின் மகள் துவாரகா பிறந்தாள். யாழ்ப்பாண இராணுவ நடவடிக்கை ஒன்றில் உயிரிழந்த பெண் போராளி ஒருவரின் பெயரே துவாரகா. மதியின் மெய்க் காவலர்களில் ஒருவராக இவர் திகழ்ந்தார். மூன்றாவது ஆண் குழந்தை பத்து ஆண்டுகள் கழித்துப் பிறந்தது. அந்தக் குழந்தைக்கு பாலச்சந்திரன் என்று பெயர் சூட்டப்பட்டது. மதியின் தம்பி பெயர் அது. இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்ட இயக்கப் போராளி அந்த பாலச்சந்திரன். போராட்டத்தில் வீரச்சாவடைந்த இயக்கப் போராளிகளின் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்குச்சூட்டி மகிழ்வதை விடுதலைப் புலிப் போராளிகள் தம்மிடையே ஒரு மரபாக்கியிருந்தார்கள். இதன் மூலம் உறவினர், நண்பர், நெருங்கிய சகாக்கள் ஆகியோரின் நினைவையும் வரலாற்றையும் முன்னெடுத்துச் செல்ல முனைகிறார்கள்.

மதியைத் தனது மனைவியாகத் தேர்ந்தெடுத்தமை பிரபாகரனுக்குக் கிட்டிய மிகப் பெரிய அதிஷ்டம் என்றே கூற வேண்டும். திருமணமான இத்தனை ஆண்டுகளிலும், மிகவும் சோதனையான இடர் படிந்த காலங்களில் கூட, நிலையான ஆழமான அன்பையும் இனிமையான குடும்ப வாழ்வையும் பிரபாகரனுக்கு மதி வழங்கியிருந்தார். எனினும், திருமண வாழ்வு என்பது மதிக்கு ஒரு மலர்ப் படுக்கையாக அமையவில்லை. இயல்பாகவே அமைதியும் பொறுமையும் கொண்ட மதி, எத்தனையோ தடவைகளில் மிகவும் நெருக்கடியான துயர சூழல்களை எதிர்கொண்டு சமாளிக்க வேண்டி இருந்தது. பிரபாகரனது போராட்டப் பணிகள் காரணமாக தம்பதிகள் இருவருக்கும் மத்தியில் நீண்ட காலப்பிரிவுகளும் ஏற்பட்டதுண்டு. இதனால் திருமணமான புதிதில், தனிமைத்துயரை அவ்வப்போது அனுபவிக்கும் கொடுமைக்கு மதி உள்ளானார். வடக்கு, கிழக்கை இந்திய இராணுவம் ஆக்கிரமித்திருந்த காலத்தில் மதி பெரும் மனத்துயரங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையே போர் தொடங்கியதும், நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் தமது பிள்ளைகளுடன் அகதியாகத் தஞ்சமடைந்தவர்களில் மதியும் ஒருவர். அதன் பின்னர் மதி தமது பெற்றோரிடம் பிள்ளைகளை ஒப்படைத்துவிட்டு முல்லைத்தீவு மாவட்ட மணலாற்றுப் பகுதியில் அலம்பில் காடுகளுக்குள் தனது கணவருடன் சேர்ந்து கொண்டார். ஒருபுறம் அவர்களுடைய அலம்பில் முகாம் மீது இடையறாது நடந்த பீரங்கி ஷெல் அடி, தத்தி அடி வைக்கும் மழலைப் பாலரை விட்டுப் பிரிந்த ஓர் இளம் தாயின் பிரிவுத் துயர், இனி இந்திய இராணுவத்துக்கெதிரான மோதலில், நெஞ்சார நேசித்த தம்பியைச் சாகக் கொடுத்த இழப்புத் துயர். இவை எல்லாம் மதியை வெகுவாகப் பாதித்தன. பின்னர் பிள்ளைகளோடு சேர்க்கப்பட்ட மதி, வெளிநாடு சென்று சுவீடனில் வாழ்ந்தார். சுவீடனில் இரண்டு பிள்ளைகளுடன் தலைமறைவான வாழ்க்கை. முன்பின் அறிமுகம் இல்லாத ஒரு கலாசாரம், இடையறாத ஆபத்துக்கு மத்தியில் வாழும் கணவனிடம் இருந்து பிரிவு. ஆதரவு தர நெருங்கிய உறவினர் எவரும் இல்லாது இருந்தமை. இவை எல்லாம் மனச்சஞ்சலத்துக்கும் மனச் சோர்வுக்கும் மதியை உள்ளாக்கின. பிரேமதாச அரசுடன் விடுதலைப் புலிகள் 1989 ஆம் ஆண்டு பேச்சைத் தொடங்கிய போது, இலங்கைக்கு மதி திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளை பாலா செய்தார். இலங்கைக்கு நாம் திரும்பிச் சென்ற ஒரு பயணத்தின் போது மதியும் பிள்ளைகளும் சிங்கப்பூரில் எம்மோடு சேர்ந்து கொண்டார்கள். நாம் கொழும்பு சென்றடைந்ததும் அலம்பில் காட்டுக்கு நாம் செல்வதற்கு உலங்குவானூர்தி ஒன்றைப் பிரேமதாச அரசு ஏற்பாடு செய்து தந்தது. இதனால், 1989 ஆம் ஆண்டு மதி திரும்பவும் தமது கணவருடன் இணைந்து கொண்டார். திருமணமான நாளில் இருந்து மதிக்கு ஒரு நிரந்தர வீடும் இல்லை. பாதுகாப்பான குடும்ப வாழ்க்கையும் கிடையாது. இருந்த போதிலும் ஒரு கெரில்லாப் படைத் தலைவரின் மனைவிக்கு உரிய துணிச்சலுடனும், கண்ணியத்துடனும் செயற்பட்டதோடு தமது பிள்ளைகளுக்கும் ஒரு நிலையான, பாதுகாப்பான வாழ்வை வழங்குவதிலும் அயராது பாடுபட்டார். திருமணம் புரிவதற்காக மதி எமது வீட்டிலிருந்து புறப்பட்ட கையோடு அங்கிருந்த மீதி இளம் பெண்கள் 1984 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் திருச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். விடுதலைப் புலிகளின் பெண்கள் பிரிவுக்கான முதல் இராணுவப் பயிற்சித் திட்டத்தில் சேர்ந்து கொண்டார்கள்.

இளம் பெண்களின் பயிற்சி முகாம் மதுரைக்கு இடமாற்றம் பெற்றதும், நாம் வசித்த அந்தப் பெரிய வீடு வெறிச்சோடிக் காணப்பட்டது. அவ்வளவு பெரிய வீடு தேவையாகவும் இருக்கவில்லை. எனவே, எம் இருவருக்கும் அடக்கமான சிறிய வீடு ஒன்றைத் தேடத் தீர்மானித்தோம். சென்னைப் புறநகரான பெசன்ற் நகரில் கடலோரமாகக் கச்சிதமான இரண்டு படுக்கையறை மாடி வீடொன்றை எமது நண்பர் நேசன் தேடிப்பிடித்தார். இங்கே, பாலா, தமது ஆழமான ஆசை ஒன்றுடன் மீளத் தொடர்பு கொண்டார். இயற்கையுடன் ஒன்றிப் போகும் ஆசையே அது. எனக்கும் சிக்கல் குறைந்த ஒரு சூழலில் அமர்ந்து கடந்த ஆண்டின் சிக்கல்களை ஒவ்வொன்றாக அவிழ்க்க வாய்ப்புக் கிடைத்தது. இந்த வீட்டில் மூன்றாமவர் ஒருவரும் எம்மோடு இணைந்து கொண்டார். எமது நாய் ஜிம்மியே அது. இடையிலே இரண்டே இரண்டு ஆண்டுகள் மட்டும் எம்மிடம் இருந்து பிரிந்து வாழ்ந்த ஜிம்மி, தனது பதினைந்து ஆண்டு ஆயுட்காலத்தின் கடைசிச் சில மாதங்கள் வரை, எம்முடனேயே சீவித்தது. அமைப்பின் அலுவலகங்களில் ஒன்றுக்கு, ஒரு நாள் பாலா போயிருந்தபோது, அங்கே தன்னைக் கட்டிவைத்திருந்த சங்கிலியை அறுக்க முயன்று கொண்டிருந்த ஒரு நாய்க்குட்டியைக் கண்டிருக்கிறார். அது சிறைப்படுத்தப்பட்டிருப்பதையும் அதன் முனகல் முறுகல்களையும் சகிக்க முடியாது வீட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறார். அந்த மென்பந்து மூடையை என்னிடம் நீட்டி ''இது உமக்குத் தான்; உமக்கு வீட்டுத் துணையாக ஒரு நண்பன்'' என்று ஒப்படைத்தார். அவர் சொன்னது பலித்தது. ஜிம்மி ஓர் உண்மையான நண்பனாக மாறியது; வேண்டும் என்று புரியாத சிறு கொடுமைகளையும் மன்னித்தது; என்றுமே பொறுமை காத்தது; முழுமையாக என்னை நம்பியது. ஜிம்மி ஊடாகவே, விலங்கு உலகத்தினூடாகப் பயணம் புரிந்தேன். விலங்குகளை மதித்தேன்; இறுதியில் சைவ உணவையே அருந்தத் தொடங் கினேன். ஓராண்டு ஆகியபின், இப்போது இந்த நாய்க் குட்டியின் கபடம் இன்மை புத்துயிர் அளித்தது; அதனு டைய தேவைகளை நிறைவேற்ற முற்பட்டபோது, எமது வீட்டுக்கு முன்பாக இருந்த கடற்கரையில் இயற்கையை அனுபவிக்கும் வகையில் கூடுதலான நேரம் செலவிட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் நாம் உள்ளாக்கப்பட்டோம்.

இந்தியாவிலும் சரி, இலங்கையிலும் சரி, அன்றாட வாழ்க்கையில் ஒரு மகிழ்ச்சியான நிகழ்வு என்னவென்றால், அதிகாலையில் துயில் எழுவதே. இந்தியாவில் சூரியோதயம் என்பது பருவத்துக்குப் பருவம் மாறாது. ஒவ்வொரு நாளும் காலையில் 5.30 மணிக்கும் 6.00 மணிக்கும் இடையே சூரியன் உதித்து விடும். ஆகவே, துயில் எழுவதில் பிரச்சினை இராது. இங்கு காலை 3.30 மணிக்கே துயில் எழுந்து விடுவார்கள். காலையில் 4.00 மணிக்கு விழிப்பதை நியாயமான நேரமாகக் கொள்வார்கள். பெண்கள் அதிகாலையில் எழுந்து, வீடு வளவைத் துப்புரவாக்கி, காலை ஆகாரம் தயாரிப்பது போன்றவற்றில் ஈடுபடுவார்கள். சிலர் விடியும் முன் எழுந்து, பகல் வெய்யில் ஏறும் முன் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு வேலை செய்து முடிப்பார்கள். மூளை சுறுசுறுப்பாக வேலை செய்வதற்கு அதிகாலையில் எழுந்து விடுவதே நல்லது என்ற கருத்தும் உண்டு. ஆகவே, மாணவர்கள் அதிகாலைக் குளிர்மையில் எத்தனை மணி நேரம் முடியுமோ அவ்வளவுக்குப் படிப்பார்கள். பலர் காலையில் விழித்தெழுந்து உடற்பயிற்சி செய்வார்கள். எமது மாடி வீட்டின் முன்பாக கடற்கரை வீதியில் பெருந்தொகையானோர் கிரமமாக உலா செல்வதும் ஒரு நாளாந்தக் காட்சியே. கடற்கரையில் காலைப் பொழுது தனி அலாதியானது. அடிவானில் சூரியன் மெதுவே எழுவதும் கற்றை கற்றையாகத் தனது ஒளியை வானில் கோடுகளாக வீசுவதும், சிறு சிறு அலைகள் வெள்ளை மணலில் மெதுவாக வருடுவதும், எம்மை அந்த அமைதியிலே சேருமாறு காந்தம் என அழைக்க, அந்த அழகு விதானத்துக்குள் நாமும் சென்று கடல் நீரில் கால் நனைய நடப்போம். சிறிது நேரம் ஜிம்மியையும் தனியே ஓடி உலாவ விடுவோம். அந்தக் குட்டியின் பூரிப்பு அதன் உடல் முழுவதும் தெரியும்; மகிழ்ச்சியில் அது தரையில் உருண்டு புரண்டு ஓடுவது கொள்ளைக் காட்சியாக இருக்கும். எமக்கு ஏதாவது காலையில் வேலை இருந்து கடற்கரைக்குச் செல்ல முடியாது போய்விட்டால் ஜிம்மியை அநேகமாக மாலையில் கூட்டிச் செல்வோம். கடற்கரையில் எமக்கு வசதியான ஓர் இடத்தில் ஒரு சாப்பாட்டுக் கடை; வகை வகையாகச் சுவையான தமிழ் உணவு; விலையும் மலிவு; மாலையில் எமது நண்பர்களைக் கவர்ந்து இழுக்கும் இடம் அது. சூழலும் இதமாக இருக்கும். தமிழ்ப் பாரம்பரிய கர்நாடக இசை, அருகே உள்ள கோவில் ஒலிபெருக்கியில் வெளியை நிரப்பும். அரசியல் சிக்கல்களால் கொந் தளித்துப் போயிருந்த எனது உள்ளத்துக்கு, மாசற்ற இந்த இயற்கை உலகும் அதன் இயல்பான சூழலும் சாந்தத்தை அளித்தன.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir






# ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?

பொன்.வேணு கிருஷ்ணா



**SCO உச்சிமாநாட்டில் மோடி உரையாற்றிய போது பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் குறித்து மையப்படுத்தினார்**


SCO உச்சிமாநாட்டிற்கு முன்னதாக Hindustan Times பத்திரிகை இருதரப்பு கூட்டங்கள் எதற்கும் வாய்ப்பில்லை என்று அறிக்கை வெளியிட்டது. மேலும், பெயர் குறிப்பிடாத இந்திய அதிகாரி ஒருவர் பின்வருமாறு கூறியதாக மேற்கோளிட்டு காட்டியது: ''பாகிஸ்தான் இராணுவம் அதன் இந்திய கொள்கையில் மிகவும் வலுவான பாத்திரம் வகிக்கிறது. பல்வேறு முனைகளில் உறவுகளைக் கெடுக்க சாத்தியமான அனைத்தும் அதனால் மேற்கொள்ளப்படுகிறது. தற்போதைய நிலவரப்படி, எந்தவொரு சந்திப்பிற்கும் பாகிஸ்தானிடமிருந்து வேண்டுகோள் எதுவும் பெறப்படவில்லை''.

SCO உச்சிமாநாட்டில் மோடி உரையாற்றிய போது ''பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம்'' குறித்து மையப்படுத்தியதுடன், ''நாங்கள் ஒருங்கிணைந்த மற்றும் வலுவான முயற்சிகளை எடுக்கும்வரை, ஒரு தீர்வு காண்பது என்பது சாத்தியமற்றது'' எனவும் அறிவித்தார். எந்தவொரு நாட்டின் பெயரையும் குறிப்பிடாத போதும், இந்திய எதிர்ப்பு காஷ்மீர் பிரிவினைவாத குழுக்களை ஆதரிப்பதன் மூலம் தொடர்ந்து ஒரு மறைமுகப் போரை நடத்துவதாக புதுடில்லி குற்றம் சாட்டுகின்ற பாகிஸ்தான் மீது தான் அவரது வெளிப்படையான இலக்கு இருந்தது.

இந்திய பிரதம அமைச்சர் தனது நாடு SCO உறுப்பினர் நாடுகளுக்கு மத்தியிலான ''இணைப்பை'' முழுமையாக ஆத ரித்ததாக தெரிவித்தபோதும், ''உள்ளடக்குதலும், நிலையானதன்மையும் அவ சியமாகவுள்ள அதேவேளையில், இறையாண்மையும், பிராந்திய ஒருமைப்பாடும் மதிக்கப்படவேண்டும்'' என்றும் அவர் வலியுறுத்தினார். இறையாண்மை பிரச்சினையை மேற்கோளிட்டு, சில வாரங்களுக்கு முன்னர் சீனாவின் ஒரே இணைப்பு, ஒரே பாதை (One Belt, One Road - OBOR) உச்சிமாநாட்டை இந்தியா புறக்கணித்ததில் இந்தக் கருத்துக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். OBOR இன் ஒரு பகுதியாக, 46 பில்லியன் டொலர் (46 billion) மதிப்பிலான சீனா மற்றும் பாகிஸ்தானின் பொருளாதார வழித்தடம் (China and Pakistan Economic Corridor - CPEC) இந்தியா இன்னும் உரிமைகோருகின்ற பாகிஸ்தான் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பகுதி ஊடாகச் செல்கின்றது.

SCO வின் உறுப்பினராக உள்ள போதும், CPEC மற்றும் OBOR திட்டங்கள் மீதான எதிர்ப்பை இந்தியா தொடரும் என்பதையே ''இறையாண்மைக்கு மரியாதை'' எனும் மோடியின் குறிப்பு காட்டுகிறது. வொஷிங்டனின் செயற்பட்டியலுக்கு இணங்க புதுடில்லியும், இந்தத்திட்டங்கள் தெற்கு ஆசியாவிலும், யூரேஷியாவிலும் சீனாவின் பூகோள அரசியல் செல்வாக்கைப் பொதுவாக கணிசமான வகையில் மேம்படுத்தும் என்பதுடன் பாகிஸ்தானின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தையும் உயர்த்தும் என்று கவலை கொண்டுள்ளது.

கடந்த ஆண்டில், இரண்டு தெற்கு ஆசிய நாடுகளுக்கு இடையில் போர் பதற்றங்கள் மோசமான வகையில் அதிகரித்துள்ளன. கடந்த செப்ரெம்பரில், பாகிஸ்தானின் எல்லைப்பகுதிக்குள் ''நுட்பமான தாக்குதல்'' ஒன்றைத் தொடங்க இந்திய அரசாங்கம் அதன் இராணுவத்திற்கு உத்தரவிட்டது. பாகிஸ்தானுடனான ''மூலோபாயத் தடையை'' நேருக்கு நேராக முடிவுக்கு கொண்டுவர நோக்கம் கொண்டே இந்தியாவின் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று






மோடி பெருமையடித்துக் கொண்டார். அப்போதிருந்து, இந்தியா மற்றும் பாகிஸ்தான் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பகுதிகளைப் பிரிக்கும் எல்லைக் கட்டுப்பாட்டுக்கோட்டின் (Line of Control - Loc) ஊடாக நடை பெறும் துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதல் பரிமாற்றங்களினால் உறவுகள் மிகவும் மோசமடைந்துவிட்டன. அணுசக்தி ஆயுதங்களைப் பிரயோகிப்பதற்கான சாத்தியங்கள் உட்பட இருதரப்பும் போர் அச்சுறுத்தல்களை ஒருவருக்கொருவர் விடுத்துள்ளனர்.

பாகிஸ்தான் இராணுவம் எல்லை கட்டுப்பாட்டுப் பகுதியுடன் சேர்த்து பூஞ்ச் மற்றும் ரஜோவ்ரி போன்ற எல்லைப்புற மாவட்டங்களின் மூன்று பிரிவுகளின் பாதுகாப்புப் பகுதிகள் மற்றும் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளையும் இலக்குவைத்து தாக்கிய பின்னர், அதற்கு எதிராக இந்திய இராணுவம் ஒரு பெரும் தாக்குதலைத் தொடங்கியதாக Daily Excelsior பத்திரிகை அறிவித்தது. பதிலடியான துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் குறைந்த பட்சம் ஒன்பது பாகிஸ்தானிய இராணுவ காவல் அரண்களும், பதுங்கு குழிகளும் அழிக்கப்பட்டன எனச் செய்தித்தாள் அறி வித்தது. ஒரு நாள் கழித்து, அதன் இராணுவத் தலைவரான ஜெனரல் கமர் ஜாவெத் பாஜ்வா, முசாப்ராபாத்துக்கும், எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சில முன்னோடி காவல் அரண்களுக்கும் விஜயம் செய்த பின்னர் பாகிஸ்தான் அதன் தாக்குதல்களை மேலும் தீவிரப்படுத்தியது.

அதையடுத்து, எல்லைக் கட்டுப்பாட்டு கோடு ஊடாக இந்தியத் துருப்புக்கள் நடத்திய பீரங்கித் தாக்குதல்களினால் இரண்டு இளைஞர்கள் கொல்லப்பட்டனர் என்றும், மேலும் மற்றொரு மூன்று பேர் காயமடைந்தனர் என்றும் Inter Services Public Relations இல் இருந்து மேற் கோளிட்டு, பாகிஸ்தான் இராணுவ ஊடகப் பிரிவான Geo News அறிவித்தது. அதன் பின்னர், சிராக் கோட்டில் 70 வயதான முதியவர் ஒருவர் இந்திய பீரங்கித் தாக்குதலினால் கொல்லப்பட்டார். இவை குறித்து, இந்தியத் துணை உயர் ஆணையர் J.P. சிங்குக்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் நீதிமன்ற அழைப்பு விடுத்ததுடன், இந்தியத் துருப்புகளினால் ''தூண்டப்படாத'' துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் குறித்து ஒரு உத்தியோகபூர்வ எதிர்ப்பையும் தாக்கல் செய்தது.

இந்த மாதத் தொடக்கத்தில், ஒரு ''பதிலடி துப்பாக்கிச் சூட்டுத்'' தாக்குதலில் பாகிஸ்தானிய படையினர் ஐந்து பேர் கொல்லப்பட்டனர் என்றும், மற்றுமொரு ஆறு பேர் காயமடைந்தனர் என்றும் இந்திய இராணுவம் அறிவித்தது. மேலும், இந்திய இராணுவ படையினரின் தாக்குதலினால் இரண்டு பாகிஸ்தானிய பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றும், மேலும் எட்டு பேர் காயமடைந்தனர் என்றும் பாகிஸ்தான் இராணுவச் செய்தித் தொடர்பாளர் அறிவித்தார்.

(கேள்வி தொடரும்)

தோல்விகளே வளர்ச்சிக்குத் துணை நின்று கொண்டிருக்கும். இந்த உண்மையை உணர்ந்து கொண்டு செய்யும் தொழிலிலோ, படிப்பிலோ தோல்வியைச் சந்திப்பவர்கள், எங்கு, எப்படி தவறு நேர்கிறது என்பதை அலசி ஆராய வேண்டும். விதி மீது பழி போடுபவர்கள் வெற்றியை ஒருபோதும் நெருங்க முடியாது. தோல்வியை எதிர்கொள்பவர்கள் மற்றவர்களின் விமர்சனங்களைக் கேட்டு மனம் தளர்ந்துபோய்விடக்கூடாது.

உங்களின் பேச்சுக்களைக் காது கொடுத்து கேட்காமல் அலட்சியம் செய்தாலும் கவலைப்படக்கூடாது. தோல்வி மற்றவர்களிடம் இருந்து ஒதுக்கி வைக்கும். தொடர் வெற்றிகளைக் குவிப்பவர்களைத் தூக்கி வைத்து கொண்டாடும். தோல்வியும், வெற்றியும் நிரந்தரமானதல்ல. இன்று வெற்றியைக்குவிப்பவர்கள் அதைத் தக்க வைத்துக் கொள்ளத் தவறி, வெற்றி மமதையில் உலா வந்தால் விரைவில் தோல்வி அவர்களைக் குடிகொண்டு விடும்.

ஒருபோதும் தோல்வியைக் கண்டு மனம் துவள வேண்டியதில்லை. நம்பிக்கை விதைகளை விதையுங்கள். நிச்சயம் நல்ல அறுவடையை எதிர்பார்க்கலாம். வெற்றி பெறுபவர்கள் உழைக்கும் நேரத்தை விட இருமடங்கு உழையுங்கள். சோம்பலைத் துரத்தி சுறுசுறுப்போடு சுழலுங்கள். முந்தைய தோல்வியை பற்றிச் சிந்தியுங்கள். அதில் இருந்து கற்றுக்கொண்ட விஷயங்களை மனதில் நிலை நிறுத்தி வெற்றிக்காகப் போராடுங்கள்.

அதற்காக வெற்றி பெற்றே தீர வேண்டும் என்ற வெறியுடன் செயற்படாதீர்கள். அது எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடும். உங்களுடைய கடின உழைப்புக்கு உடனடி பலன் கிடைக்காமல் போகலாம். எந்த சூழ்நிலையிலும் மனம் தளர்ந்து போய் விடாதீர்கள். அடுத்த முறை நிச்சயம் வெற்றி பெற்று விடலாம் என்ற மனத் தைரியத்துடன் செயலாற்றுங்கள். நிச்சயம் பலன் கிடைக்கும்.

## விதி மீது பழி போடுபவர்கள் வெற்றியை நெருங்க முடியாது!



# நீங்கள் சொக்லட் பிரியையா?

## முகப்பரு வந்தே தீரும்




பெண்கள் அழகில் மிகப் பெரிய வில்லன் முகப் பருக்கள் தான். இந்தப் பருக்களுக்கும் சாப்பிடும் உணவுப் பொருளுக்கும் நிறையவே தொடர்பு உண்டு. அதிலும் சொக்லட் போன்ற கொழுப்பு நிறைந்த பொருள்களுக்கு மிக நெருங்கிய தொடர்பு உண்டு.



முகப்பரு உள்ளவர்கள் கொழுப்பு உணவைக் குறைத்துக் கொண்டால், பருக்கள் விரைவில் குணமாகும். உடலில் கொழுப்புக் கூடும்போது, கொழுப்பு அமிலங்களும் கூடும். இவை எண்ணெய்ச்சுரப்பி செல்களை உறுத்திக் கொண்டே இருக்கும்.

இதன் விளைவால், எண்ணெய்ச் சுரப்பிகளின் துவாரம் மூடிக் கொள்ள, பருக்கள் அதிகரிக்கும். இந்த வாய்ப்பைத் தடுப்பதற்காகவே கொழுப்பு உணவைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

100 கிராம் சொக்லட்டில் 30 - 40 கிராம் கொழுப்பு உள்ளது. இந்தக் கொழுப்பு செறிவுற்ற கொழுப்பு வகையைச் சேர்ந்தது, கொழுப்பு அமிலம் மிகுந்தது.

ஆக, எண்ணெய்ச் சுரப்பிகளுக்கு நல்ல 'தீனி' கிடைத்து விடும். இதனால் அவை சீக்கிரத்தில் மூடிக் கொள்ளும்.

இந்த நிலையில் ஏற்கெனவே பருக்கள் இருந்தால் அவை அதிகரிக்கும்; புதிதாகவும் பருக்கள் தோன்றும். அதனால் பரு இருப்பவர்கள், சொக்லட்டைத் தவிர்ப்பதே நல்லது.

# பதின்ம பருவம்:

## பல்வேறு மாறுதல்களை எதிர்கொள்ளும் காலம்



பதின்ம பருவம் எனப்படும் 'டீன் ஏஜ்' பருவம் பெண்களின் வாழ்க்கையில் முக்கியமான காலகட்டத்தை உள்ளடக்கியது. 13 முதல் 19 வயது வரையிலான அந்தப் பருவத்தில் பெண்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பல்வேறு மாறுதல்களை எதிர்கொள்கிறார்கள். 'தனக்கு எல்லாம் தெரியும்' என்ற மனோபாவம் பெரும்பாலானவர்களிடம் வெளிப்படும்.

மற்றவர்களின் அறிவுரைகளைக் காதுகொடுத்துக் கேட்க முன்வரமாட்டார்கள். அவர்கள் சொல்லும் நல்ல விஷயங்களைப் புரிந்து கொள்ளும் மனநிலையில் இல்லாமல் 'நல்லது எது? கெட்டது எது? என்பதை முழுமையாக அறிந்து கொள்ள இயலாமல் தடுமாறுவார்கள். அந்தச் சமயத்தில் பெற்றோரின் அரவணைப்பு மிக அவசியம். குறிப்பாகத் தாய்மார்கள் மகளின் மனநிலையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயற்பட வேண்டும்.

★ பதின்ம பருவத்தில் அதிக படியான வளர்சிதை மாற்றம் நிகழும். உடல் உறுப்புகளின் வளர்ச்சி மாற்றத்தால் உணர்வுப்பூர்வமாக பல விதமான மன உளைச்சலுக்கும் ஆளாவார்கள். ஆதலால், உடல் வளர்ச்சி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம். ''இந்தப் பருவத்தில் எல்லோருக்கும் இப்படித்தான் உடல் வளர்ச்சி இருக்கும்'' என்பதைப் புரியவைக்க வேண்டும்.

★ சீரற்ற மாதவிடாய்ச் சுழற்சி, அதிகமான உதிரப்போக்கு, அடி வயிற்றில் விட்டுவிட்டு ஏற்படும் வலி போன்ற பிரச்சினைகள் பதின்ம வயதுப் பெண்களை அடிக்கடி வாட்டி வதைக்கும். அதுபற்றி அச்சம் கொள்ளவோ, கவலைப்படவோ தேவையில்லை. இது இயற்கையாக நடக்கும் விஷயம் என்பதை எடுத்துரைக்க வேண்டும். அந்தச் சமயங்களில் அவர்களின் உடல்நிலையும், மனநிலையும் பாதிப்புக்குள்ளாகாத வாறு ஆறுதலாக இருக்க வேண்டும்.

★ பதின்ம வயதுப் பெண்களின் உணவு விஷயத்திலும் தாய்மார்கள் அக்கறை கொள்ள வேண்டும். அந்த பருவத்தில் பெரும்பாலான பெண்கள் சரிவரச் சாப்பிடமாட்டார்கள். நொறுக்கு தீனிகளே அவர்களின் விருப்பமான உணவு பட்டியலாக இருக்கும். சத்தான உணவு வகைகளைச் சாப்பிடாமல் அலட்சியம் காட்டுவது ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சினையை ஏற்படுத்தும்.

★ உடல் எடை அதிகரிப்பு பதின்ம வயதினரைக் கவலை கொள்ளச் செய்யும் வகையில் விஸ்வரூபமெடுக்கும் பிரச்சினையாக உருவெடுத்துக்கொண்டிருக்கிறது. இதன் போது உடல் நிறையைச் சீராகப் பராமரிப்பதிலும் கவனம் கொள்ளச் செய்ய வேண்டும்.

> பதின்ம பருவத்தில் அதிக படியான வளர்சிதை மாற்றம் நிகழும். உடல் உறுப்புகளின் வளர்ச்சி மாற்றத்தால் உணர்வுப்பூர்வமாக பல விதமான மன உளைச்சலுக்கும் ஆளாவார்கள். ஆதலால் உடல் வளர்ச்சி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம்.

★ பதின்ம பருவத்தில் பெரும்பாலான பெண்கள் 'மேக்கப்' விஷயத்தில் அதிக ஆர்வம் காண்பிப்பார்கள். உடுத்தும் உடை, அணியும் அணிகலன்களை தேர்வு செய்வதில் அதிக கவனம்செலுத்துவார்கள். மற்றவர்கள் எப்படியெல்லாம் தங்களை அலங்கரித்துக்கொள்கிறார்கள் என்பதை ஒப்பிட்டு பார்ப்பார்கள். தன்னுடைய தேர்வு மற்றவர்களுக்கு பிடிக்குமா? என்ற கவலை அவர்களுக்குள் வந்து போகும். அதெல்லாம் அந்தப் பருவத்தில் ஏற்படும் இயல்பான உடல் ரீதியான மாற்றங்கள்தான் என்பதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கவோ, கண்டிக்கவோ கூடாது.

★ இந்தப் பருவத்தில் பெரும்பாலானவர்கள் இனக்கவர்ச்சிக்கும், காதலுக்கும் இடையே உள்ள இடைவெளியைப் புரிந்துகொள்ள முடியாமல் தடுமாறுவார்கள். ஒருசிலர் எதிர்பாலினத்தவர்களிடமிருந்து தொந்தரவுகளை சந்திக்கக்கூடும். அது அவர்களை மன அழுத்தத்துக்கு ஆளாக்கும். அவர்களின் நடவடிக்கைகளையும், செயற்பாடுகளையும் கண்காணித்து பக்குவமாக எடுத்துச் சொல்லி புரியவைக்க வேண்டும்.

# ‘பண்டா’ வடிவத்தில் இராட்சத சோலர்!

சுவட்டு எரிபொருள்கள் வெகுவாகக் குறைவடைந்து வருவதனால் எதிர்காலத்தில் எரிபொருள் தட்டுப்பாடு அதிகரிக்கும் என்பது வெளிப் படையானது.

இதனைக் கருத்தில் கொண்டு பல நாடுகள் சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்னை உற்பத்தி செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளன.

இதில் சீனாவும் ஏற்கனவே நீரில் மிதக்கக் கூடிய சூரிய மின்சக்தி நிலையம் உட்பட மேலும் சில இராட்சத சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையங்களை நிறுவியுள்ளது.

இதன் தொடர்ச்சியாகத் தற்போது மற்றுமொரு விநோத மின்சக்தி உற்பத்தி நிலையத்தை அமைத்துள்ளது.

அநேகமான நாடுகள் தமது சூரிய மின்சக்தியை உற்பத்தி செய்யும் சோலர் படலங்களை நிரல், நிரை வடிவில் அமைத்துள்ளன.

இதேபோன்ற வடிவில் தான் சீனாவும் ஏற்கனவே தனது சோலர் படலங்களை நிறுவி வந்துள்ளது.

ஆனால், முதன் முறையாக ஒரு பண்டா விலங்கின் வடிவத்தில் தனது இராட்சத சோலர் படலங்களை நிறுவியுள்ளது.

Datong நகரத்தில் 248 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த மின்சக்தி நிலையத்தை China Merchants New Energy Group வடிவமைத்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி நிர்மாணிப்புப்பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் இதன் ஊடாக 50 மெகாவாட்ஸ் மின் சக்தியை உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*அநேகமான நாடுகள் தமது சூரிய மின் சக்தியை உற்பத்தி செய்யும் சோலர் படலங்களை நிரல், நிரை வடிவில் அமைத்துள்ளன.*





# மனிதர்கள் வாழாத தெய்வீகத் தீவு!

உலகில் எத்தனையோ தீவுகள் காணப்படுகின்ற போதிலும், அதில் நாம் அறியாத, பல மர்மங்கள் நிறைந்த தீவுகள் உள்ளன.

அந்த வகையில், உலகில் உள்ள தீவுகளில் மனிதர்கள் வாழாத தெய்வீக தன்மையுடைய தீவு ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இயற்கை அழகைக் கொண்ட, கடலால் சூழப்பட்ட 8 கோயில்களைக் கொண்ட ஒரு குட்டித் தீவு இந்தோனேஷியாவில் உள்ளது.

இந்தோனேஷியா பாலித்தீவிற்கு அண்மையில் மெஞ்சாங்கன் எனும் சிறிய தீவாக அமைந்துள்ளது.

இந்தத் தீவை ‘கணேஷர் தீவு’ என்று கூறுவர். இந்தப் பெயர் வரக் காரணம் குறித்த தீவில் பெரிய விநாயகர் திருக்கோயில் அமையப் பெற்றுள்ளது.

இந்தோனேஷியாவின் சுமார் 2000 ஆண்டுகள் மிகவும் பழைமை வாய்ந்த இந்துக் கோவில்களில் ஒன்றாக இந்தக் கோயில் அமைகின்றது.

இந்தத் தீவில் 8 கோயில்கள் உள்ளன எனத் தெரிய வந்துள்ளது. இவற்றில் மிகவும் புகழ்பெற்ற ஆலயமாக சேகரகிரி தர்ம காஞ்சன ஆலயம் காணப்படுகின்றது.

தற்பொழுது இந்தத் தீவில் மனிதர்கள் வாழவில்லை என்றாலும் தினந்தோறும் இந்து மக்கள் இந்தக் கோயிலுக்குச் சென்று வழிபட்டு வருகின்றனர்.

இந்தத் தீவில் உள்ள ஒவ்வொரு கோயிலும் மிகவும் சக்தி வாய்ந்தவை என நம்பப்படுகின்றது.

பல பயங்கர எரிமலை தாக்குதல்கள் மற்றும் நில நடுக்கங்கள் ஆகியவற்றையும் மீறி இந்தக் கோயில்கள் நிலைத்து நிற்கின்றன.

தீவுக்கு அண்மையில் ‘லெத்கொல் விஸ்ணு’ எனப்படும் ஒரு விமான நிலையமும் அமையப் பெற்றுள்ளது.

இந்தக் கோயிலின் சிற்பங்களும் பல அரிய பொக்கிஷங்களும் கடலுக்குள் மூழ்கிக் காணப்படுகின்றன. இவை அனைத்தும் ‘அண்டர் வோட்டர் டெம்பில்’ என பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன.

கடல் நீர்மட்ட உயர்வால் இந்தத் தீவின் கரையோரப் பகுதிகளில் இருந்த ஒரு சில கோயில்கள் தற்போது நீருக்குள் மூழ்கி விட்டன என்று குறிப்பிடப்படுகின்றது.

மேலும், இந்தத் தீவின் கோயில்களில் இந்து தர்மத்தைச் சார்ந்த பெரிய சிலைகளும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# உலகின் மிகப்பெரிய பனிப்பாறை உடைந்ததால் பெரும் ஆபத்து





அந்தாட்டிக்கா தீபகற்பத்தில் பெரிய அளவிலான பனிப்பாறை உடைந்துள்ளதால் பெரும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

உலகின் ஐந்தாவது மிகப் பெரிய கண்டம் அந்தாட்டிக்கா. புவியின் தென்முனையில் இந்தக் கண்டம் முழுவதும் ஏறக்குறைய பனிக்கட்டியால் மூடப்பட்டுள்ளது.

புவியில் உள்ள நன்னீரில் 70 வீதமானது அங்கேயே உள்ளது. அங்கே நிரந்தர மக்கள் குடியிருப்பு எதுவும் கிடையாது, வெவ்வேறு உலக நாடுகளின் ஆய்வு கூடங்கள் மட்டுமே இருக்கின்றன.

புவி வெப்பமாதலால் அங்குள்ள பனி உருகிவருகின்றது. இதன் மூலம் கடல் நீர் மட்டம் உயர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மேற்கு அந்தாட்டிக்காவில் அமைந்துள்ள லார்சன் இ பனியடுக்கு பகுதியில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய பிளவால், பனிப்பாறை ஒன்று பிரிந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து விரிசல் ஏற்பட்டுக் கொண்டிருந்த நிலையில், பனிப்பாறை முழுவதுமாக உடைந்து பிரிந்துவிட்டது நாசா வெளியிட்டுள்ள புகைப் படங்கள் மூலம் உறுதியாகியுள்ளது.

5 ஆயிரம் சதுர கிலோமீற்றர் கொண்ட இந்தப் பனிப்பாறை லண்டனை விட நான்கு மடங்கு பெரியதாகும். இந்தப் பனித் தகர்வால் பேராபத்து ஏற்பட வாய்ப்புள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தாட்டிக்காவின் வடக்கில் உள்ள பனியடுக்கான லார்சன் ஏ மற்றும் லார்சன் பி பகுதிகளில் இதுபோன்ற பனித் தகர்வுகள் ஏற்பட்டதால், அவை முற்றிலுமாக நொறுங்கிப் போயின.

இதேபோன்று லார்சன் இ பகுதியிலும் நிகழுமோ என்று விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்.

பனியடுக்கு உடைந்தால், இதே போன்ற உடைப்புகள் அந்தாட்டிக் தீபகற்பம் முழுவதும் தொடரும் என்று ஆராய்ச்சியாளர்கள் கணிக்கிறார்கள்.

உலக வெப்பமயமாதல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கும் சூழலில், நமது பூமி ஒரு பேராபத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதை இந்தப் பனித்தகர்வு எமக்குக் காட்டுகிறது.

கடந்த பத்தாண்டுகளில் பிரின்ஸ் கஸ்டவ் சேனல், லார்சன் இன்லேட், லார்சன் ஏ, லார்சன் பி, வேர்டி, முல்லர், ஜோன்ஸ் சேனல், வில்கின்ஸ் போன்ற ஒரு டசினுக்கும் அதிகமான பெரிய அளவிலான பனியடுக்குகள் உடைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் பாரதி


34

● முருகபூபதி – ஆஸ்திரேலியா

"...வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப்பதவி கொள்வார்."


பாரதியின் இந்தத் தாரக மந்திரத்துடன் 2000 ஆம் ஆண்டில் கண்டியிலிருந்து வெளிவரத் தொடங்கிய ஞானம் கலை, இலக்கிய மாத இதழ் தங்கு தடையின்றி தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இதன் ஆசிரியர் தி. ஞானசேகரன் ஒரு மருத்துவராவார். இலங்கையில் வடபுலத்தில் புன்னாலைக்கட்டுவனில் 1941 ஆம் ஆண்டு பிறந்தவர்.

தந்தையோ ஆலயத்தில் குரு. பூட்டனார் கணேசய்யர் தொல்காப்பியத்துக்கு விளக்கவுரை எழுதிய வித்துவசிரோன்மணி. கதாப்பிரசங்கம் புகழ் மணி அய்யர் சுவாமி நாதத் தம்பிரான் தாய் மாமனார். கணேசய்யர் பற்றி இரசிகமணி கனகசெந்திநாதன் தமது ஈழத்து இலக்கிய வளர்ச்சி நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சுவாமிநாத தம்பிரான்தான் இலங்கையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் உருவச்சிலைக்கு மொடலாக இருந்தவர். இந்தப் பின்னணியிலிருந்து வருகை தந்த ஞானசேகரன், அந்தப் பரம்பரையின் குலமுறை ஆலயத் தொண்டுக்குச் செல்லாமல், தனது பெயருக்குப் பின்னால் அய்யர் என பதிவு செய்துகொள்ளாமல், மருத்துவம் பயின்றார். இலக்கியம் படித்தார்; படைத்தார்; இதழாசிரியரானார்.

பொதுவாக பிராமணர் சமூகத்திலிருந்து வருபவர்கள் தந்தைக்குப் பின் தனயன் என்பது போன்று தர்ப்பையும் மணியுமாக வாழ்ந்து சோதிட நூல்களையே ஆய்வுசெய்வர்.


ஆனால், அவர்களின் பரம்பரையிலிருந்து வேறு திசையில் சமூகப்பிரக்ஞையுடன்



சாதாரண மக்களுக்காக, அவர்களின் எளிய குரலுக்காக உழைத்தவர்கள் சிலரைப் பற்றி எமது தமிழ் இலக்கிய உலகம் இன்றும் பேசிக் கொண்டிருக்கிறது. பாரதியும் தனது தந்தைக்குப்பின்னர் தந்தையின் தொழிலுக்குச் செல்லாமல் இலக்கியம் படைத்தார். இறுதிவரையில் படைப்பாளியாகவும் பத்திரிகையாளனாகவும் வாழ்ந்து மறைந்தார்.

பாரதிக்கும் ஞானம் என்ற சொல்லுக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது. ஞானரதம் எழுதியவர் பாரதி. பாரதியை தனது ஞானகுருவாக ஏற்றுக் கொண்டிருந்த ஜெயகாந்தனும் அதனையடியொற்றி ஞானரதம் என்ற பெயரில் இலக்கிய இதழ் நடத்தியவர்.

இலங்கையில் ஞானம் இதழைத் தொடங்கியிருக்கும் தி.ஞானசேகரன், சிறுகதை,




நாவல், பத்தி எழுத்துக்கள், பயண இலக்கியம் முதலான துறைகளில் பல நூல்களை வெளியிட்டிருப்பவர். காலதரிசனம், புதிய சுவடுகள், குருதிமலை, அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும், லயத்துச் சிறைகள், கவ்வாத்து உட்பட பல நூல்களை வரவாக்கியிருக்கும் இவர், இலங்கையின் தேசிய சாகித்திய விருது உட்பட பல விருதுகளும் பெற்றவர்.

இவரது சில நூல்கள் பல்கலைக்கழக மட்டத்திலும் மாணவர்களினால் ஆய்வுக் குட்படுத்தப்பட்டுள்ளன. 2011 இல் கொழும்பில் நடந்த முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் இணைப்பாளராகவும் இயங்கியிருக்கும் ஞானசேகரன், தொடர்ந்தும் மேலே குறிப்பிட்ட பாரதியின் தாரக மந்திரத்துடனேயே தமது இதழை வெளிக்கொணர்வதிலிருந்து, இவரையும் பாரதி எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறார் என்பது தெரிகிறது.

ஞானம் இதழும் இலங்கையில் பாரதி குறித்த ஆய்வுகளுக்கு சிறந்த களம் வழங்கியுள்ளது.

ஞானம் இதுவரையில் போர்க்கால இலக்கியச் சிறப்பிதழ், புகலிட இலக்கிய சிறப்பிதழ்களையும் இறுதியாக 200 ஆவது இதழை நேர்காணல் ஆவண மலராகவும் வெளியிட்டுள்ளது.

இவற்றுக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலும் அதன் பின்னரும் பாரதி தொடர்பான ஆக்கங்களை ஞானம் இதழ்களில் காண முடிகிறது.

பிஜித்தீவுக்குச்சென்று அங்கு கரும்புத்தோட்டங்களில் துன்பக்கேணியில் வாடும் இந்திய மக்கள் பற்றி பாரதி நெஞ்சுருகி எழுதிய கவிதை இன்றளவும் பேசப்படுகிறது. அதற்குள்ளிருந்தது தேசியப்பார்வையல்ல, சர்வதேச ரீதியிலும் நோக்கப்படுகிறது என்று பாலகிருஷ்ணன் சிவாகரன், ஞானம் 144 ஆவது இதழில் ஆய்வுசெய்திருந்தார்.

பாரதியின் குறிப்பிட்ட கவிதையில் பாரதியின் பல கோணப்பார்வை மேற்கிளம்பும் தன்மை மெய்சிலிர்க்க வைக்கிறது என்கிறார் இந்த ஆய்வாளர். அத்துடன், அக்கவிதையின் தலைப்பில் ஏற்பட்ட மாற்றங்களையும் எமது வாசகர்களுக்கு அறிமுகப் படுத்துகிறார்.

"கரும்புத் தோட்டத்திலே – என்ற இந்தக்கவிதை முதன் முதலில் பாரதி பிரசுரத்தாரின் தேசிய கீதங்கள் என்ற தொகுப்பில் வெளிவந்தபோது "பிஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள்" என்ற தலைப்பில் வெளிவந்தது. புதிய பதிப்புகளில் "கரும்புத் தோட்டத்திலே" என பிரசுரம் பெற்று பிஜித்தீவின் கரும்புத்தோட்டத்தில் பாடுபட்ட இந்திய நாட்டுப்பெண்களின் அவல நிலையைக்குறித்து எழுதப்பட்டது " என்று எமக்கெல்லாம் நன்கு தெரிந்த தகவலையும் பாலகிருஷ்ணன் சிவாகரன் பதிவுசெய்துள்ளார்.

தரகு கங்காணிமார்களின் ஆசைவார்த்தைகளை நம்பி இலங்கை, பி.ஜி, ஆபிரிக்கா, கென்யா, பிரிட்டிஷ் கயானா, மேற்கிந்தியத்தீவு முதலான நாடுகளுக்குச் சென்ற வர்களுக்கு அங்கு நேர்ந்த அவலம் பற்றிய இலக்கியங்களில் பாரதியின் குறிப்பிட்ட கரும்புத் தோட்டத்தினிலே கவிதை முக்கியத்துவம் பெறுகின்றது.

அதிலிருந்து பெறப்பட்ட துன்பக்கேணியில் என்ற சொல்லிலிருந்து புதுமைப் பித்தனும் இலங்கை வந்து துயருற்ற இந்திய மக்கள் பற்றி ஒரு புதினம் படைத்திருக்கிறார். இந்தப் பின்னணிகளுடன் தான் இலங்கையில் மலையகம் வந்த இந்திய மக்கள் பற்றிய பின்வரும் கவிதை, பாடலாக மேடைகளில் ஒலிக்கிறது.

" வாடையடிக்குதடி, வடகாத்து வீசுதடி, செந்நெல் மணக்குதடி, சேர்ந்து வந்த கப்பலிலே...

"நாட்கள் கழிகின்றன, நாடுகடக்கும் வேளை நெருங்குகிறது. பிரிவு வாசலைத் தட்டுகின்றது, பிரிவு வேதனையின் பிரதிநிதி விழிவாசலை முட்டுகின்றான், அழுது விடுவேனோ என்ற பயம் என்னை அமுக்குது...

"நான் பிறந்த நாட்டினிலே நான் இருக்க விதியில்லை, என் ஜென்ம பூமியிலே எனக்கு உரிமையில்லை"

என்ற பாடல் வரிகளையும் எமது வாசகர்களுக்கு ஞானம் இதழின் ஊடாகத் தருகின்றார் பாலகிருஷ்ணன் சிவாகரன்.

ஞானம் இதழ் பாரதியை இலங்கை வாசகர்களுக்கும் தமிழ்கூறும் நல்லுலகிற்கும் வேறும் ஒருவகையில் அறிமுகப்படுத்தியிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.


– தி.ஞானசேகரன்

பாரதியார் எழுதிய முதல் கவிதையும், முதல் சிறுகதையும் என்ன... ? என்பது பற்றியும் இலக்கிய உலகில் ஆராயப் படுகிறது. வழக்கமாக இலக்கிய வரலாற்றாசிரியர்கள் வ.வே.சு. ஐயர் எழுதிய குளத்தங்கரை அரசமரம் தான் முதலில் தமிழில் வெளிவந்த சிறுகதை என்று நிறுவுகின்றனர்.

ஆனால், அது தவறு என்று ஞானம் 197 ஆவது இதழில் ( ஒக்ரோபர் 2016) ஆதாரங்களுடன் நிரூபிக்கின்றார் செங்கதிரோன் த.கோபால கிருஷ்ணன். இவர் இலங்கையில் இலக்கியவாதியாகவும் அரசியல் சமூகப்பணியாளராகவும் அறியப்பட்டவர். இலக்கிய விமர்சகர். செங்கதிர் என்ற இலக்கிய இதழின் ஆசிரியர். மீன்பாடும் தேனாடாம் என வர்ணிக்கப்படும் மட்டக்களப்பிலிருந்து எழுதிக்கொண்டிருக்கும் இவரும், இலங்கையில் பாரதியை ஆய்வு செய்துள்ளார்.

இலங்கையிலும் தமிழகத்திலும் ஒரு காலத்தில் சிறுகதைகளுக்கு இரண்டு தலைப்புகள் இடப்பட்டிருக்கும். பாரதியாரும் அவ்வாறுதான் தொடக்கத்தில் எழுதியிருக்கிறார்.

1905 இல் சக்கரவர்த்தினி என்னும் இதழில் பாரதி எழுதியிருக்கும் சிறுகதை: துளசிபாய் அல்லது ரஜபுத்திரகன்னிகையின் சரித்திரம்.கோபால கிருஷ்ணன் சிறுகதையின் சுருக்கத்தை இவ்வாறு தருகின்றார்.

"துளசிபாய் என்ற பெயருடைய ரஜபுத்திரகன்னிகைக்குத் திருமணம் நிச்சயிக்கப் பெற்று அவளுக்கு விவாகம் நடத்துவதற்காக மணமகனுடைய ஊருக்குப் பல்லக்கில் அவளை இருத்திப் பயணம் செல்கிறார்கள். போகும் பாதையில் ஒரு கொள்ளைக்காரக் கும்பலிடம் துளசிபாய் அகப்பட்டுக்கொள்கிறாள். அவளை அக்பரின் படைத் தளபதி அப்பாஸ்கான் என்பவன் அந்தக்கொள்ளைக்காரக் கும்பலிடமிருந்து காப்பாற்றுகிறான். தன்னைக் காப்பாற்றிய அப்பாஸ்கானுக்கு ஒரு வரக் கணை யாழியைப் பரிசளித்துத் துளசிபாய் நன்றி பாராட்டுகிறாள். கதையின் முற்பகுதி இங்கே முடிவடைகிறது.

அடுத்து ஒரு வருடகால இடைவெளிக்குப்பின்னர் அப்பாஸ்கான் மீண்டும் துளசிபாயைச்சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அப்போது திருமணமாகிக் கணவன் இறந்துபோன நிலையில் துளசிபாயைச் சுற்றத்தார் இந்திய நாட்டின் பண்டைய வழக்கப்படி உடன்கட்டை ஏறும்படி வற்புறுத்துகிறார்கள். துளசிபாய் கதறிக்கொண்டு கூக்குரலிட அப்பாஸ்கான் அருகில் சென்று பார்க்கிறான். " இது எனது... எனது...எனது... துளசி பாய் அல்லவா...? அரே அல்லா, மேரீகுலாப் கோ ஜலாவோங்கே...? எனது காதல் ரோஜாவையா இப்பாதகர்கள் சாம்பராக்கப்போகிறார்கள்?" என்ற கோபத்தோடு அவர்களோடு மீண்டும் சண்டையிட்டு மீண்டும் துளசிபாயை காப்பாற்றுகிறான்.

இவ்விதம் தம்மால் இருதடவைகள் காப்பாற்றப்பெற்ற துளசிபாய் மீது அப்பாஸ்கான் காதல்கொள்கிறான். அப்பாஸ்கானின் காதலை துளசிபாயும் ஏற்றுக்கொள்கிறாள்.

இதுதான் பாரதியார் எழுதிய கதை. எந்தக்காலத்தில் என்பதைப்பாருங்கள்...? இந்தக் கதையில் பாரதி சொல்லும் செய்திகளை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

பெண்மைக்காகவும் பெண்கள் விடுதலைக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்திருக்கும் பாரதியின் முதல்




சிறுகதையே பெண்ணிற்கு நேர்ந்த அநீதிக்கு எதிரான குரலையே ஒலித்திருக்கிறது. அத்துடன், விதவை மறுமணத்தையும், மூட நம்பிக்கைக்கு எதிரான சிந்தனையையும் இந்து - முஸ்லிம் ஒற்றுமையையும், கலப்புத்திருமணத்தையும் அக்காலத்திலேயே அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

செங்கதிரோன் த.கோபால கிருஷ்ணன், இந்தப்பதிவில், மேலும் இவ்வாறு சொல்கிறார்:

" நவீனத்துவம்,பின் நவீனத்துவம், யதார்த்தவாதம், கட்டுடைப்பு வாதம் என்றெல்லாம் கலை இலக்கியக்கோட்பாடுகள் குறித்த கருத்தியல்கள் எல்லாம் மேற்கு நாடுகளில் பின்னாளில் எழுந்து தமிழ் நாட்டுக்குத் தொற்று முன்பாகவே ஒரு முற்போக்கான கதையை பாரதி 1905 இலேயே பின்னியிருக்கிறார்.

எனவே, நல்ல முற்போக்கான சிறுகதையொன்றைப் படைப்பதற்கு எந்த 'இஸம்' களும் தேவையில்லை. எந்த 'வாதம்'களும் அவசியமில்லை."

இவ்வாறு பாரதியின் முதல் சிறுகதையும் தமிழ் இலக்கிய வரலாற்றின் முதல் சிறுகதையுமான "துளசிபாய் அல்லது ரஜ புத்திர கன்னிகையின் சரித்திரம்" பற்றி ஞானம் இதழில் விரிவாக அறிமுகப் படுத்தியிருக்கும் செங்கதிர் த. கோபாலகிருஷ்ணன், ஞானம் 205 ஆவது இதழில் ( 2017 ஜூன்) பாரதியார் எழுதிய முதற் கவிதை பற்றியும் அதனை இலக்கிய வரலாற்றில் பதிவுசெய்வதற்கு தொடர்ச்சியாக நேர்ந்த தாமதங்கள் பற்றியும் விரிவாக சொல்லியிருக்கிறார்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

## இயேசுவோடு உள்ள உறவுக்கு முதலிடம்

பொதுநிலையினரோ அர்ப்பண வாழ்வு வாழ்பவரோ ஆயரோ அருள்பணியாளரோ யாராக இருந்தாலும் அனைவரும் எல்லாவற்றுக்கும் மேலாக இயேசுவோடு உள்ள உறவுக்கு முதலிடம் கொடுக்க வேண்டு மென திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக்கொண்டார். தங்கள் வாழ்வில் இயேசுவுக்கு முதலிடம் கொடுத்தால் அது முழுமையானதாக இல்லாமல் இருந்தாலும் கூட உலகில் கிறிஸ்து போன்று வாழ்வதற்கு உதவும் என்றும் கூறினார்.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
TCNL
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## சீடத்துவத்தின் இன்றியமையாதப் பண்புகள்

கிறிஸ்தவ சீடத்துவத்தின் இன்றியமையாதப் பண்புகள் பற்றி எடுத்துரைத்த திருத்தந்தை இயேசுவைச் சந்திக்கிறாயா? இயேசுவிடம் செபிக்கின்றாயா? போன்ற கேள்விகளை ஒவ்வொரு கிறிஸ்தவரிடமும் முதலில் கேட்க வேண்டும். இயேசுவுக்காக ஒருவர் எல்லாவற்றையும் துறந்தார் என்றால் அவரில் மக்கள் ஆண்டவரைக் கண்டுகொள்வார்கள். ஒவ்வொரு நாளும் அவர் தன்னைப் புதுப்பித்து சோதனைகளை வெற்றி காண இது உதவும் எனறார்.

# இலத்திரனியல் சாதனங்களில் இன்றைய இளைய சமுதாயம் மூழ்குவது எதிர்கால வாழ்வுக்கு ஆரோக்கியமானது அல்ல

## பொதுநிலையினர் கழக மாநாட்டில் ஆயர் உரை



குடும்ப உறவுகளுடன் முகம் முகமாய் பேசுவதையும் அன்பையும் அறிவையும் அனுபவத்தையும் பகிர்வதையும் ஒன்றாக அமர்ந்து உணவு அருந்துவதையும் குடும்பமாக செபத்தில் ஈடுபடுவதையும் தவிர்த்து இலத்திரனியல் சாதனங்களுடன் தனியே பேசிச் சிரித்து மகிழ்ந்து நீண்ட நேரம் அதனுள் மூழ்குவதும் போதைப் பொருள் மற்றும் கலாசார சீரழிவுகளில் ஈடுபடுவதும் இன்றைய இளைய சமுதாயத்தின் எதிர்கால வாழ்வுக்கு ஆரோக்கியமானதல்ல என யாழ்.ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பொது நிலையினர் கழக மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது-

நீங்கள்தான் திருச்சபை. உங்களுக்குத்தான் குடும்ப, சமூக பிரச்சினைகள் தெரியும். ஒதுங்கி வாழ்வதை விடுத்து பணியாற்ற முன்வாருங்கள் என அழைப்பு விடுத்தார்.

யாழ்.மறைமாவட்ட பொது நிலையினர் கழக இயக்குநர் எம்.வி.இ.ரவிச்சந்திரன் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற மேற்படி மாநாட்டில் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி புனிதநாயகம் கலந்துகொண்டார்.

யாழ். மறைமாவட்டத்தின் தீவகம், யாழ்ப்பாணம், இளவாலை, பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய ஆறு மறைக்கோட்டங்களின் பங்குகளில் இருந்து 250 இற்கும் அதிகமான பிரதிநிதிகள் மேற்படி மாநாட்டில் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சட்டத்தரணி புனிதநாயகம் அவர்கள் உரையாற்றும் போது, ஆன்மீகம் குடும்பத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும், பெற்றோர் பிள்ளைகளுக்கு எப்போதும் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.- என்றார்.


## கத்தோலிக்க அருள் பணியாளர் மெக்சிக்கோவில் குத்திக்கொலை

மெக்சிக்கோவில் 71 வயது நிரம்பிய அருள் பணியாளர் தனது பங்குத்தள அறையில் இருந்தபோது ஜூலை 5 ஆம் திகதி இரவில் குற்றக் கும்பல்களால் கொடூரமாய்க் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அருள் பணியாளர் கொலை செய்யப்பட்டுள்ளமை குறித்து மிகுந்த கவலையடைந்துள்ள மறை மாவட்ட விசுவாசிகள் குற்றவாளிகள் விரைவில் கண்டு பிடிக்கப்படுவர் என்றும் தங்கள் சமுதாயத்தில் நீதியும் அமைதியும் நிலைநாட்டப்படும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

மெக்சிக்கோவில் இவ்வாண்டில் மூன்று அருள் பணியாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

## திருத்தந்தையிடம் சொல்லுங்கள்...!



திருத்தந்தையிடம் சொல்லுங்கள் என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள வலைத்தளத்திற் பங்கேற்க 16 வயது முதல் 29 வயது முடிய உள்ள அனைத்து இளையோரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

கத்தோலிக்கர் மட்டுமல்லாமல் அனைத்து மதத்தவரும் திருத்தந்தையிடம் கேட்க விழையும் கேள்விகள் மற்றும் அவருக்குக் கூறவிழையும் பரிந்துரைகள் ஆகியவற்றை இவ்வாண்டு நவம்பர் 30 ஆம் திகதிக்குள் பதிவு செய்யுமாறு சுவிற்ஸர்லாந்து ஆயர்கள் கேட்டுள்ளனர்.

மேலும் 20 கேள்விகள் அடங்கிய கருத்துக் கணிப்பு ஒன்றும் இவ் வலைத்தளத்தில் உள்ளது. இங்கு பதியப்படும் கருத்துக்கள் திரட்டப்பட்டு வத்திக்கானுக்கு அனுப்பப்படும் என்றும் ஆயர்கள் அறிவித்துள்ளனர். 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வத்திக்கானில் 15ஆவது உலக ஆயர்கள் மாமன்றம் இளையோர், நம்பிக்கை அழைப்பைத் தேர்ந்து தெளிதல் என்ற மையக் கருத்துடன் நடைபெறவுள்ளது.

## உண்மையின் எண்ணங்கள்


### இன்றைய இளைய சமுதாயத்தின் எதிர்கால வாழ்க்கைக்கு...

இலத்திரனியல் சாதனங்களுடன்தனியே பேசி சிரித்து மகிழ்ந்து நீண்ட நேரம் அதனுள் மூழ்குவதும் போதைப்பொருள் மற்றும் கலாசார சீரழிவுகளில் ஈடுபடுவதும் இன்றைய இளைய சமுதாயத்தின் எதிர்கால வாழ்விற்கு ஆரோக்கியமானதல்ல என யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரீன் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பொதுநிலையினர் கழக மாநாட்டில் தெரிவித்துள்ளமை கவனத்துடன் நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்றைய நவீன உலகில் - வேகமாக வளர்ந்துள்ள தொழில் நுட்பத்தில் - எல்லாமே ஊடக மயமாக்கப்பட்ட நிலையில் - சமூக ஊடகங்களே இளைய சமுதாயத்தை ஆட்டிப்படைக்கும் நிலையில் - மோட்டார் சைக்கிள் கணினி, கைத்தொலைபேசி, இணையம், முகநூல், செல்பி, போதைப் பொருள் என்று நேரம் முழுவதையும் செலவு செய்வது பல விடயங்களை இழக்கும் நிலையை உருவாக்கியுள்ளது. இதற்கான மாற்றுத் திட்டம் ஒன்றை கண்டுபிடிக்காத நிலையில் இன்றைய இளைய சமுதாயத்தின் எதிர்கால வாழ்வு எப்படியாகும் என்பது சிந்திக்கப்பட வேண்டியதே.

## இந்தோனேஷியாவில் இம்முறை ஆசிய இளையோர் தின நிகழ்வு

### பல்சமய உலகைக் கண்டுணர வாய்ப்பு




முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ளஇந்தோனேஷியாவில் கத்தோலிக்க இளையோர் எவ்வாறு தங்கள் விசுவாசத்தில் வாழ்கின்றனர்என்பதைக் கண்டுணர ஆசிய இளையோர் தினம் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என ஜூலை 30 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 6 ஆம் திகதி வரை இந்தோனேஷியாவின்நடைபெறவிருக்கும் 7 ஆவது ஆசிய இளையோர் தினம் பற்றி பிலிப்பைன்ஸ் ஆயர்பேரவையின்இளையோர் பணிக்குழு அதிகாரி கூறினார். ஆசியாவின் பல்வேறு நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான இளையோர் கலந்து கொள்ளும் ஆசிய இளையோர் தினம் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை சிறப்பிக்கப்படுகின்றது.

## கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு விலகி இருப்போருக்காகவும் செபிப்போம்!

கிறிஸ்தவ விசுவாசத்தைவிட்டு விலகியிருப்பவர்களுக்காகச் செபிப்போம் என்ற தலைப்பில் தனது ஜூலை மாதச் செபக் கருத்தை வெளியிட்டுள்ள திருத்தந்தை, ஒரு கிறிஸ்தவர் கவலையாக இருக்கின்றார் என்றால் அவர் இயேசுவிடமிருந்து விலகியிருக்கின்றார் என்று அர்த்தம் என்றார்.ஆயினும், கிறிஸ்துவைவிட்டு விலகியிருப்பவர்களை நாம் கைவிடக்கூடாது.நம் சொற்கள் இன்னும் சிறப்பாக நம் மகிழ்வான சாட்சிய வாழ்வு கிறிஸ்தவ நம்பிக்கையை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்ஸிஸ்.

## முன்னாள் திருத்தந்தையுடன் புதிய கர்தினால்கள் சந்திப்பு

21 மே 2017 அன்று திருத்தந்தை அறிவித்த ஐந்து கர்தினால்களில் சுவீடன் - மாலி -லாவோஸ் - எல் சால்வடோர் ஆகிய நாடுகளில் இருந்து முதன்முதலாக கர்தினால்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

28 ஜூன் அன்று திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்கள் புதிதாகப் பொறுப்பேற்ற கர்தினால்கள் ஐந்து பேருடன் முன்னாள் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்களின் இல்லம் சென்று புதிய கர்தினால்களை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஐந்து கர்தினால்களையும் இணைத்து திரு அவையில் கர்தினால்களின் எண்ணிக்கை 225 என்பதும் இவர்களில் திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் தகுதி பெற்ற கர்தினால்களின் எண்ணிக்கை 121 என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## புதிய கர்தினால்களை இயேசு சிலுவை சுமக்க அழைக்கிறார்

புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் ஐந்து புதிய கர்தினால்களுக்கு மோதிரம் தொப்பி மற்றும் பட்டம் ஆகியவற்றை வழங்கும் நிகழ்வை தலைமையேற்று நடத்தினார். திருத் தந்தை பிரான்ஸிஸ் எருசலேமுக்கு தான் செல்லவேண்டும் என்பதையும் அங்கு துன்பங்களைத் தாங்கவேண்டும் என்பதையும் இயேசு தன் சீடர்களுக்குப் பல முறை கூறியும் சீடர்கள் அதைப் புரிந்து கொள்ளாமல் இயேசுவுக்கு இடப்புறமும் வலப்புறமும் இருக்கைகளில் அமர்வதிலேயே அவர்கள் கருத்தாய் இருந்தனர்.

எருசலேமில் இயேசு சுமந்த சிலுவையில் உலகில் துன்புறும் அனைத்து மனிதர்களின் துயரங்களையும் சுமந்தார். போர்தீவிரவாதம், அடிமைத்தனம் என்ற பல கொடுமைகளால் இன்றும் ஆயிரமாயிரம் அப்பாவி மக்கள் துன்புறுகின்றனர். இன்று பொறுப்பேற்கும் புதிய கர்தினால்கள் திருஅவையின் இளவரசர்கள் என்று அழைக்கப்பட்டாலும் தன் வலப்புறமும், இடப்புறமும் அமர்வதற்கு இவர்கள் அழைக்கப்படவில்லை மாறாக சிலுவைகளைச் சுமக்க இயேசு இவர்களை அழைக்கிறார் என்றார் திருத்தந்தை பிரான்ஸிஸ்.

# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

# பிரபாகரன் மனதிலை நினைச்சது இவங்களுக்கு எப்படித் தெரியும்?

''பிரபாகரனும் பொட்டம்மானும் முச்சந்தியிலை இருந்து, மூக்குப் பேணியிலை தேத்தண்ணி குடிச்சுக் கொண்டோ, எல்லாத் திட்டங்களையும் போட்டவை?''என்று சிடுசிடுத்தபடியே கச்சான் கடையைத் திறந்தாள் செல்லாச்சி.

சந்தியடியில் ஊர்வம்பளக்க செல்லாச்சியுடன் வாத்தியார், ஏரம்பர், ஜீவன், ரூபன், பேப்பர் தம்பி என்று வழக்கமான உறுப்பினர்கள் எல்லோரும் கூடியிருந்தனர்.

செல்லாச்சியின்கடுகடுப்பைக் கண்டு சிரித்தபடியே, "தென்ன வினோதமாகக் கேட்கிறாய்?'' என்று கேட்டார் ஏரம்பர்.

"இப்பவும் பிரபாகரனையும் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் வித்துத்தானே எல்லோரும் பிழைப்பு நடத்துகினம். அதிலை ஊடகங்களிலை வாற தொடர்கட்டுரைகளைப்பார்க்கும் போது, பிரபாகரன்திட்டங்களைப் போட்ட போதும், முக்கியமான முடிவுகளை எடுத்த போதும் இந்தத் தொடர் கட்டுரைகளை எழுதிறவையையும் பக்கத்திலை இருத்திவைச்சுக் கொண்டுதான் எல்லாத்தையும் செய்தவர் என்பது மாதிரியெல்லே எழுதித் தள்ளுறாங்கள்'' என்று கடும் கோபத்துடன் சொன்னாள் செல்லாச்சி.

"அட நீ வேற செல்லாச்சி. தலைவர் இன்னொருவரோடை கதைச்சதை எழுதிறாங்கள் என்று சொல்லுகிறாய். சில கட்டுரைகளிலை 'பிரபாகரன் இப்படி நினைத்தார்' என்று எழுதிறாங்கள். அவர் நினைக்கிறது அவரிண்டை நிழலுக்குக் கூடத் தெரிய வராது என்று கூட இருந்தவை சொல்லக் கேட்டிருக்கிறம். இந்தக் கட்டுரையாளர்கள் அவரின்றை மனதுக்குள்ளை புகுந்து பார்த்த மாதிரியெல்லே புளுகிறாங்கள்'' என்று சொன்னான் ஜீவன்.

"காசு வரும் என்றால் என்னத்தையும், எவரையும் விற்கத் தயங்காத ஒரு கூட்டம் எல்லா இடங்களிலையும் இருக்கும். அதிலையும் யுத்தத்தைக் கண்ணாலை பார்க்காதவையெல்லாம் இப்ப அதைப் பற்றிக் கதைக்க வெளிக்கிட்டால் இந்த மாதிரி புளுகுப்புனைவுகள் வரும்தானே'' என்றான் ரூபன்.

இவையெல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த வாத்தியார், பேப்பர் தம்பியைப் பார்த்தார். அதன் அர்த்தத்தை உணர்ந்த பேப்பர் தம்பி கதைக்கத் தொடங்கினான்.

"இது தமிழகத்திலை இருந்து இங்கு தொத்தின பழக்கம். ஊடகங்கள் அதிகரித்துப் போக வியாபாரப் போட்டியும் அதிகரித்து விட்டது. இதனால் எப்படியாவது மக்களைக் கவர, எதையும் செய்யலாம் என்ற நிலைக்கு சிலர் வந்து விட்ட கொடுமைதான் இது. மூடிய அறையொன்றுக்குள் காதலர் இருவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்கின்றனர் என்று வைத்துக் கொள்ளுவம். இதனை வெறும் செய்தியாகப் போட்டால் இன்ன இடத்தில் இன்னார் இப்படிச் செத்தார்கள் என்பதுடன் விசயம் முடிந்து விடும். அநேகமாக எல்லா ஊடகங்களிலும் ஒரே மாதிரியான செய்திதான் வரும். மிஞ்சிப் போனால் அவயின்றை குடும்பம், உற்றார், உறவுகளின் செவ்வி ஏதும் புதுசாக இணைக்கப்படலாம்'' என்று சொன்ன பேப்பர்தம்பியை வாத்தியாரின் குரல் இடைமறித்தது.

"தற்கொலைச் செய்திகளைப் பத்திரிகையில் பிரசுரிப்பது மேலும் தற்கொலையைத் தூண்டும் என்பதால் ஊடகங்களில் தற்கொலைச் செய்திகளைப் போடக் கூடாது என்று இருந்த ஊடகப் பாரம்பரியம் எங்களுடையது. ஆனால் இப்போது நாங்கள் தமிழகத்தைப் பார்த்து சீரழியிறதுதான் வேதனையானது'' என்றார் வாத்தியார்.

அதனைத் தலையசைத்து ஏற்றுக் கொண்ட பேப்பர்தம்பி தொடர்ந்து கதைத்தான்.

''வியாபாரப் போட்டியால் வாசகரைக் கவர கதை சொல்லும் போக்கை ஊடகங்கள் பின்பற்றத் தொடங்கின. அறைக்குள் நஞ்சருந்தியதை' இருவரும் நஞ்சைக் கையில் எடுத்தார்கள். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.' என்ற அளவிற்கு நேரில் பார்த்தது போல எழுத ஆரபித்ததுதான், இன்று புளுகு மூட்டைகளாக வந்து நிற்கின்றன'' என்று சொல்லி முடித்தான் பேப்பர்தம்பி.

இதைக் கேட்ட வாத்தியார் "இப்படிக் கதை சொல்வதில் பல தகவல்கள் விடுபட்டுப் போவதும் சுவாரஸ்யத்திற்காகப் புதிய புதிய வியங்கள் இணைக்கப்படுவதும் தவிர்க்க முடியாது. செய்திகள் ஒவ்வொரு நாளும் புதிய புதிய அதிரடித் தகவல்கள், அதிர வைக்கும் அறிக்கைகள், திடுக் திருப்பங்கள் போன்றவற்றால் மர்மக் கதைகளைப் போலச்சொல்லப்படுகின்றன. ஊடகங்களைப் பொறுத்தமட்டில் இவை செய்திகள் மட்டுமல்ல, ஊடகச் செய்திகளைப்பரபரப்புக்கு உள்ளாக்கும் வணிகம். இது வியாபாரம் சம்பந்தப்பட்டது. இவற்றை வெறும் செய்திகளாக்குவதில் வருவாய் குறைவு. கதையாக்குவது வாசகர்களை அல்லது பார்வையாளர்களைத் தக்கவைத்துக் கொள்ளும் வியாபார உத்தி. தினம் தினம் புதிய புதிய தலைப்புகளில் இந்தக் கதைகள் சொல்லப்படும்.'' என்று விளக்கினார்.

எல்லாவற்றையும் கேட்ட ரூபன் "இப்படிக் கதை சொல்வது வெறும் வியாபார விசயம் என்று விட்டு விடவும் முடியாது. புலிகளைப் பற்றிய கதைகளைப் போட்டால் விற்கும் எனப் பிரசுரிக்கிறவர்கள் ஒரு புறம் என்றால், மெல்லக் கொல்லும் விசமாக, நீண்ட காலத்திட்டத்தில் புலிகளைப் புகழ்வது போல, அவர்கள் செய்தது எல்லாமே தவறு என்று நிறுவி விடும் முயற்சிகளாகவும் சில பிரசுரிக்கப்படுகின்றன போல இருக்கே'' என்று சொன்னான் ரூபன்.

"இதுவும் கவனத்தில் கொள்ள வேண்டிய விசயம்தான். பிரபாகரன் மற்றும் புலிகள் இயக்கம் என்பன சரி பிழைகளுக்கு அப்பால் தமிழ்த் தேசியத்தின் பலமான குறியீடுகளாக இருக்கின்றன. இன்று தமிழ்த் தேசியத்தை நீர்த்துப் போகச் செய்ய முயற்சிப்பவர்களுக்கு எப்படியாவது புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளை எங்களுக்குள்ளையிருந்து ஒதுக்கி விடுவது அவசியத் தேவையாக இருக்கிறது. இப்போது எமக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றி இருக்கும் பெருமிதத்தை உடைக்கும் விதத்தில் சில ஊடகங்களில் புலிக் கதைகள் புனையப்படுகின்றன. நாங்கள் தான் விழிப்பாக இருக்க வேண்டும்'' என்றார் வாத்தியார்.



"நீங்கள் சொல்வதையெல்லாம் பார்த்தால் வெறுமனை நாங்கள் கடந்து போகிற ஊடகச் செய்திகளுக்குப் பின்னாலை எங்களை கவிழ்த்துப் போடும் பெரும்சதிகள் இருக்கும் போல தெரியுது'' என்று ஆச்சரியப்பட்டார் ஏரம்பர்.

அதற்குச்செல்லாச்சி "மாவீரர் தினத்துக்கும், முள்ளிவாய்க்கால் தினத்துக்கும் கேளிக்கைகள், களியாட்டங்களை ஒழுங்கு செய்து எங்கடை உணர்வுகளை மழுங்கடிக்க எவ்வளவு முயற்சிகளை முன்னர் நடத்தினவை. இப்பவும் நடத்துகினம். நாங்கள் எதிர்க்கிறதாலை இப்ப புது வழியைக் கையாளுகினம் போலை இருக்கு'' என்றாள் செல்லாச்சி.

அப்போது கால்களை மாற்றிப் போட்ட பேப்பர்தம்பி "ஊடகங்களின் கதை சொல்லும் போக்கினால் வாசகர் அல்லது நேயர்களின் நியாயமான கேள்விகள் புறக்கணிக்கப்படுகின்றன. உதாரணத்துக்கு ஒரு பாடசாலை இடிந்து விழுந்து மாணவர்கள் இறக்கின்றனர் என்று வைத்துக் கொள்ளுங்கள். தவறாகக் கட்டப்பட்டதற்கு யார் காரணம்? கட்டட ஒப்பந்தகாரரும் மேற்பார்வை செய்த அதிகாரிகளும் கல்வி அமைச்சின் கட்டடப்பிரிவினரும் தானே பொறுப்பேற்க வேண்டும் என்ற கேள்விகள் எல்லாம் செய்திகளை கதையாக்குவதால் மழுங்கடிக்கப்படுகின்றன. மாணவர் இறந்த சோகம் முன்னிலைப் படுத்தப்பட்டு, அதிகாரிகளும் அமைச்சரும் சாவு வீட்டுக்குச் சென்றதும் ஆறுதல் கூறியதும், உதவி வழங்கப்பட்டதும் கதையாக்கப்படும். இதனால் ஊழல் அமைச்சரும் அதிகாரிகளும் அப்பாவிகள் ஆக்கப்படுவார்கள். மக்களின் கோபம் சிதைக்கப்பட்டு, அனுதாபமும் இரக்கமும் கொண்ட சோக நாடகமொன்று மக்களின் முன்வைக்கப்படும். இப்படித்தான் ஒவ்வொரு சம்பவங்களிலும் செய்தியின் பாதிப்புகள் மறுக்கப்பட்டு, மறைக்கப்பட்டு சுவாரஸியம் கூட்டப்படுகிறது'' என்று சொல்லி முடித்தான்.

இதைக் கேட்ட வாத்தியார் நீண்டதொரு பெரு மூச்சை விட்டபடி கதைக்கத் தொடங்கினார்.

"கதை சொல்லல் என்ற ஊடக மொழியின் மூலமே ஊடகங்கள் நம்முடன் கதைக்கின்றன என்பதை நாங்கள் உணர்வதில்லை. அதனால் ஊடகங்களில் சொல்லப்படும் அனைத்துமே இயல்பான, யதார்த்தமான, உண்மையான விசயங்களாகவே எமக்குத் தோன்றுகின்றன. சம்பவங்களுக்கிடையிலான இடைவெளிகள் ஊடகங்களால் நிரபப்பட்டதையோ, அந்த ஊடகங்கள் சார்ந்திருக்கிற பக்கத்துக்கு இடையூறாக இருந்தவையெல்லாம் நீக்கப்பட்டதையோ எந்த ஊடகமும் எமக்குச் சொல்வதில்லை. இதில் ஒவ்வொரு ஊடகமும் தத்தமது சார்புகளுக்கு ஏற்ற மாதிரி அல்லது அரசியல் நிலைப்பாடுகளுக்கு ஏற்ற மாதிரி கதைகளைச் சொல்லும். இந்தக் கதைகளில் ஊடகங்களுக்கு ஏற்ற மாதிரி கதாநாயகர்களும் வில்லன்களும் இடம்மாறுவார்கள். ஊடகங்கள் சொல்வதெல்லாம் உண்மை, நடுநிலையானவை என்ற தோற்றம் திட்டமிட்டு அவற்றால் உருவாக்கப்படுபவை. இவற்றையெல்லாம் சரியாக விளங்கிக் கொள்பவர்களால் மட்டுமே ஊடகங்களின் அரசியலைப் புரிந்துகொள்ள முடியும். ஓர் ஊடகம் பயன்படுத்தும் மொழியை ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில் நாம் வாசிக்க நம்மைப் பழக்கப்படுத்தும் பணியைத்தான் அந்த ஊடகம் செய்து வைத்திருக்கும். ஊடகங்களின் இந்த உத்தியைச் சரியாகப் புரிந்துகொள்ளும் போது செய்திகளில் விடுபட்டவை எவை, இட்டு நிரப்பப் பட்டவை எவை,என்பதை விளங்கிக் கொள்ளவும் ஊடகங்களின் பக்கச்சார்புத் தன்மையை உணரவும் முடியும்.'' என்றார் வாத்தியார்.

அப்போது கைபேசியிலிருந்து தலையை நிமிர்த்திய ஜீவன் "இணையத்தில் பார்த்த ஒரு விசயம். எங்களது கலாசாரப்படி பெண்கள் உடலை மூடித்தான் உடை அணிவது வழக்கம். பெண்களின் கால்களில் உள்ள முடிகளை நீக்கும் களிம்பை விற்கும் நிறுவனத்துக்கு இது சிக்கலாக இருக்கும். அதனால் பெண்களைக் கால்கள் தெரியக் கூடிய குட்டைப்பாவாடை போன்ற உடைகளை அணியுமாறு ஊடகங்கள் மூலம் தூண்டும். இந்த விளம்பரங்களில் மயங்கித் தமது கலாசாரத்தை விட்டு, கால் தெரியும் உடைகளைப் பெண்கள் அணியத் தொடங்குவார்கள். அதற்குப் பிறகு 'வெளியில் தெரியும் கால்களில் முடி இருப்பது அழகில்லை. ஆகவே எங்களது களிம்பைப் பயன்படுத்தி கால்முடியை அகற்றுங்கள்' என்று ஊடக விளம்பரங்கள் மூலம் பெண்களைத் தமது உற்பத்தியை வாங்க வைக்கும். இப்படித்தான் பன்னாட்டு நிறுவனங்களும் ஊடகங்களும் சேர்ந்து எங்களை நுகர்வுக் கலாசாரத்துக்குள் மூழ்க வைக்கின்றன ''– என்று தெரிந்ததைச் சொன்னான்.

"இன்றைக்குப்பெரும்பாலான ஊடகங்களில் நடுநிலைமை என்பது அறவே போய் விட்டது. பக்கச்சார்பான செய்திகள் வலிந்து உருவாக்கப்படுகின்றன. ஊடக விளம்பரங்கள் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரையும் நுகர்வோர்களாக மாற்றிவிட்டன. விளம்பரங்களும் வியாபார நோக்கங்களும் நேர்மை, அறம் போன்ற தனிமனித ஒழுக்கங்களைக் கேலிக்குரியவையாக மாற்றி வருகின்றன. இப்போதெல்லாம் பணம் வாங்கிக் கொண்டு விளம்பரங்களையே செய்திகளாகப் போடும் செயல் புதிய சீரழிவாக ஊடகத்துறையைப் பீடித்து வருகிறது. இணையக்குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை ஊடகக்கல்வி வந்தும் நிலைமை மோசமாகிச் செல்கிறதே தவிர திருந்துவதற்கான வழியெதையும் காணவில்லை''என்று வேதனையுடன் சொன்னான் ரூபன்.

"நேர்மையின் மீது நம்பிக்கையும் பற்றும் கொண்ட ஊடகங்கள் இன்னும் உருவாக வேண்டும். அவற்றில் வேலை செய்ய – இப்போதுள்ள சிலரைப் போன்ற – நல்ல அறிவும் நன்னடத்தையும் போர்க்குணமும் கொண்ட ஊடகவியலாளர்கள் முன்வர வேண்டும். இத்தகைய ஒருங்கிணைவு கொண்ட ஊடகங்களை மட்டுமே ஆதரிப்பதென்று மக்கள் உறுதியேற்க வேண்டும். அப்போது தான் எதிர்காலத் தலைமுறைகள் தலைநிமிர முடியும்'' என்றபடி எழுந்து நடந்தார் வாத்தியார்.

மற்றவர்களும் அவரைத் தொடர்ந்தனர். கச்சான் கடையைக் கட்டினாள் செல்லாச்சி.



## செப்புகிறார்... சின்னப்பு!

வணக்கமுங்கோ!

எப்பவெண்டாலும், எந்த இடத்திலயெண்டாலும் நாங்கள் அறிஞ்சும்; தெரிஞ்சும் வைச்சிருக்கிற விசயங்களைக் குறிச்சுத்தான் பெரும்பாலும் அலட்டிக் கொள்ளுறம். அறியப்படாத விசயங்களில அதிகம் அக்கறை காட்டாமல், ஆராய விரும்பாமல் அப்படியே கிடப்பில போட்டுவிடுகிறம்.

இதன் நிமித்தமாப் பாருங்கோ... மணிசரிட்டை போய் சேர வேண்டிய சில சங்கதியள், உண்மையான விசயங்கள் எல்லாம் வெளிச்சத்துக்கு வராத நிலையாகி, அப்படியே முடங்கிப் போயிடுது கண்டியளே!

பிரச்சினையளை மனம்விட்டுக் கதைக்கவேணும்; விவாதிக்கவேணும். அப்பத்தான் அதில உள்ள சரி பிழையள் என்னெண்டு தெரியவரும்.

அதோடை பாருங்கோ! தவறுகளுக்கான ஒரு பக்க நியாயத்தை தூக்கிப் பிடிச்சுக் கதைக்கிறதும் பிழையான விடயம்.

இப்ப நான் இதில என்ன சொல்லவாறன் எண்டால்-

ஒரு ஆணுக்கு கலியாணம் முடிக்கிற வயசு வந்திட்டால், உடன அந்தப் பொடியன், தாய், தேப்பன் பெண் பார்க்க வெளிக்கிட்டு விடுவினம். தங்கட சொந்தத்துக்கையோ அல்லாட்டி பிறத்தீக்கையோ புறோக்கர் மூலமோ பெண் எடுக்க முயற்சிப்பினம்.

இந்த முயற்சியினூடாக அவையள் தேட வெளிக்கிடுறது என்னவெண்டால் கொழுத்த சீதனம்.

இந்தச் சீதனம் எண்ட பெயரில காணி - பூமி, நகை-நட்டு, வீடு-வாசல்... எண்டு ஒரு பட்டியலே நீளும். அதோடை இதுகளை விட காசு - பணம் எண்டது ஒரு தொகையோடு ஊதிப்பெருத்துப் போய் நிற்கும்!

இப்பவெல்லாம் பாருங்கோ! ஊர்ச்சனங்கள் எல்லாம் - இது கொம்பியூட்டர் யுகம், உலகம் உள்ளங்கைக்குள்ள சுருங்கி வந்திட்டுது. விஞ்ஞானம் நல்லா முன்னேறினதால மனிசற்ற அறிவும் நல்லா விரிஞ்சு போய்க்கிடக்குதெண்டு உங்கினேக்கை பறையுதுகள்.

ஆனா, உலகம் முன்னேறிச்சுதோ இல்லையோ, பறையுற சனங்களின்ர, அறிவு இன்னமும் நல்லா விரியேல்லை முன்னேறேல்லை எண்டு நான் சொல்ல வாறன்.

ஏனெண்டால் பாருங்கோ...

ஆம்பிளையள் சீதனம் வாங்கிறது அவையளின்ர சுயகௌரவத்துக்கு அவமதிப்பு... எண்டு சொல்லிக் கூத்தாடுகிறவை, இப்படியான சீதனம் ஒண்டால பெண்கள் மட்டுமல்ல ஆண்களும்தான் அவலப்படுகினம். பாதிக்கப்படுகினம்... எண்டதையும் தெரிஞ்சு கொள்ள வேணும்.

இப்பவும் கூட, நான் அறிஞ்ச வரையில் பெரும்பாலான குடும்பங்களில இந்த சீதனப் பிரச்சினை எண்டதொண்டு இருக்கிறதால, கூடப்பிறந்த பொறுப்பு வாய்ந்த ஆண் சகோதரங்களின்ர வாழ்வும் இலையுதிர் காலமாகத்தான் போய்க்கொண்டிருக்குது.

தன்னோடு கூடப்பிறந்த பெண் சகோதரங்களுக்காக, அவர்கள் கலியாணம் முடிக்கும் வரைக்கும் காத்திருத்தல், அல்லது அந்தச் சகோதரிகளுக்காக மாடாய் உழைத்து முடிவில் நோயைத் தேடுதல்!

இதுதான் பாருங்கோ சில குடும்பங்களுக்கை நடந்துகொண்டிருக்குது. ஆண்கள் பெருந்தொகையில சீதனம் கேட்கினம்; வாங்குகினம்... எண்ட குற்றச்சாட்டு ஒரு புறமிருக்க, சீதனம் கொடுக்கமுடியாமல் சில பெண்கள் 35-40 வயது வரைக்கும், மனசுக்குள்ளை கவலையள், கற்பனையள், மன ஆசைகள், சுயவிருப்பங்கள்... எல்லாத்தையும் அடக்கி; அமுக்கி வாழுற மாதிரித்தான் பொறுப்புள்ள சில ஆண் சகோதரங்களும், தங்கட மனவிருப்பு - வெறுப்புக்களை வெளியே சொல்ல விடாமல் தமக்குள்ளே அமுக்கிவைத்துக்கொள்ளுகினம் கண்டியளே?

சீதனப் பிரச்சினையில இப்படிப்பட்ட ஆண் சகோதரங்களைப் பற்றி யாராவது சிந்திக்கினமே? அதிலும் உந்தப் பேப்பர்காரர் இதைக் குறிச்சு ஏதாவது எழுதியிருக்கினமே?

சரி பேப்பர்காரரை விடுவம்... ஏதோ இலக்கியமெண்டு, கதை - கவிதை - கட்டுரை எழுதுற ஆள்கள் கூட இதைப் பற்றி பெரிசா எழுதின மாதிரியும் எனக்குத் தெரியவருகுதில்லை.


ஆண்கள் சீதனம் வாங்குறதால பெண்களின் வாழ்வு சீரழிவதாகச் சொல்லுற ஆள்கள், அதே சீதனத்தால ஆண்வர்க்கத்திலுள்ள இன்னொரு பகுதியும் வாழ்வில்லாமல் தவிக்கிறதைப் புரிஞ்சு கொள்ள வேணும்.!

எப்பவும் ஒரு பக்கத்தைப் பாராமல், அதன் தாக்கத்தால் ஏற்படுகிற இன்னொரு பக்கத்தையும் பார்க்கவேணும். அப்பதான் 'சரி - பிழை' எங்கை நிற்குது? எங்கை உதைக்குது எண்டது தெரியவரும். கண்டியளோ

-குருவிக்குஞ்சு

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி நாளை!

## யாழ். துரையப்பா அரங்கில்









யாழ்ப்பாணம், ஜூலை 16

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு, யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகும்.

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் க.நந்தகுமாரனும், கௌரவ விருந்தினர்களாக வவுனியா ஓகான் நிறுவனத் தலைவர் வெ.சுப்பிரமணியமும் கோண்டாவில் ராஜாபிளாசா உரிமையாளர் குவேந்திரநாதன்- றஞ்சினி தேவி தம்பதியரும் கலந்து கொள்வர். (இ)

# அம்பாந்தோட்டை எண்ணெய் தாங்கிகள் விற்கப்பட்டால் போராட்டம் நிச்சயம்

## எச்சரிக்கிறது பெற்றோலியத் தொழிற்சங்கம்

அம்பாந்தோட்டை எண்ணெய்த் தாங்கிகள்விற்பனைசெய்யப்பட்டால் தொழிற்சங்கப் போராட்டம் தவிர்க்க முடியாதது என்று பெற்றோலிய வள தொழிற்சங்க ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் நாள்களில் அம்பாந்தோட்டைதுறைமுகத்தை சீனாவுக்கு விற்பனைசெய்ய அரசுஉடன்படிக்கை கைச்சாத்திட உள்ளதாக தொழிற்சங்க ஒன்றியத்தின் அழைப்பாளர் டி.ஜே.ராஜகருணா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எண்ணெய்த் தாங்கிகளை சீனாவுக்கு விற்பனை செய்ய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் அன்று முதல் போராட்டம் வெடிக்கும்.

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை விற்பனை செய்வது தொடர்பில் எதிர்ப்பு வெளியிட்டு போராட்டம் நடத்தப்பட்டது. அதற்கு அரசுசாதக மான பதிலளித்திருந்தது.

கோரிக்கைகளுக்கு உரிய பதிலளிக்கப்படாவிட்டால் தொடர்பணிப் புறக்கணிப்புப் போராட்டம் வெடிக்கும். - என்றார். (எ)

## இலங்கையில் பாரதி...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பாரதி எழுதி அச்சுவாகனம் ஏறிய முதல் கவிதை 1904 ஆம் ஆண்டில் விவேகபாநு இதழில் வெளியாகியிருக்கிறது. தனிமையிரக்கம் என்ற அக்கவிதையே அச்சில் வெளியான முதல்கவிதையாயினும் அதுவே பாரதி எழுதிய முதல் கவிதை அல்ல என்றும் அவர் சுட்டிக்காண்பிக்கின்றார்.

எட்டயபுர சமஸ்தான மன்னர் வெங்கடேசுவரரெட்டப்ப பூபதிக்கு பாரதி தனது படிப்புக்கு உதவி கேட்டு கவிதை வடிவில் 24-01-1897 இல் எழுதிய கடிதமே அவர் எழுதிய முதல் கவிதை என்றும் அதனை பாதுகாத்து வைத்திருந்தவர் பாரதியின் இளைய சகோதரன் சி. விசுவநாத ஐயர் எனவும் குறிப்பிடுகிறார்.

'' குயிலானாய்... எனத் தொடங்கும் அச்சில் வெளியான முதல் கவிதையும், தென்னிளசை நன்னகரிற் சிங்கம்... எனத்தொடங்கும் எட்டயபுர மன்னருக்கு அனுப்பிய கவிதைக்கடிதமும் ஞானம் இதழில் முழுமையாக இடம்பெற்றுள்ளன.

இளைசை என்பது எட்டயபுரத்துக்கு மற்றும் ஒரு பெயர்.

எனினும், பாரதியாரே 1908 இல் பதிப்பித்த அவரது முதல் நூலான 'ஸ்வதேச கீதங்கள்' நூலிலும் அதன் பின்னர் வந்த பல தொகுப்புகளிலும் இக்கவிதை இடம்பெறவில்லை எனவும், பாரதி நூற்றாண்டு விழாக்காலத்தின் பின்னர்தான்இ தஞ்சை பல்கலைக் கழகம் வெளியிட்ட பாரதி பாடல்கள் (ஆய்வுப்பதிப்பு) சேர்க்கப்பட்டிருக்கும் தகவலையும் கோபால கிருஷ்ணன் ஞானம் இதழின் ஊடாக எமக்குத் தெரிவிக்கின்றார்.

அடுத்த அங்கத்தில், ஞானம் இதழில் மேலும் வெளியான பாரதி தொடர்பான ஆக்கங்களையும் ஆய்வுகளையும் பார்ப்போம். (தொடரும்)

## புதிய அரசமைப்பு...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசமைப்பிற்கான 18 ஆவது திருத்தத்தின்மூலம் மேற்படி மட்டுப்பாட்டையும் நீக்கினார்.

ஆனால், ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் மிகப் பெரியது. ஜனாதிபதி அரசின்தலைவராவார், நிறைவேற்றுத் துறையின் தலைவராவார், அரசாங்கத்தின் தலைவராவார். அதேபோல முப்படைகளினதும் சேனாதிபதி ஆவார். அரசின் தலைவர் என்ற பதவியை வகிக்கும்போது எதுவித பேதமுமன்றி அனைத்து மக்களினதும் தலைவராகப் பணியாற்ற வேண்டும். ஆனால், நிறைவேற்றுத்துறையின் தலைவராக செயற்படுகையில் இந் நிலைமை முற்றிலும் எதிரானதாக அமைதல் வேண்டும். ஜனாதிபதியினாலேயே அமைச்சர்களும் நியமிக்கப்படுகின்றனர். ஜனாதிபதி ஒப்படைக்கும் நிறைவேற்று அதிகாரமே அமைச்சர்களுக்கும் வழங்கப்படுகிறது. அது உண்மையான அதிகாரமல்ல. ஜனாதிபதி நியமிக்கும் அமைச்சர்கள், அமைச்சரவை அரசாங்கமாகக் கருதப்படுகிறது. இந்த அரசாங்கத்தின் தலைவர் ஜனாதிபதி ஆவார்.

எனவே,அமைச்சரவைக்கூட்டங்களின் தலைமைப் பொறுப்பை ஜனாதிபதியே ஏற்றுக்கொள்வார். ஜனாதிபதி தான்தோன்றித்தனமாக அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரத்தை அரசமைப்பின் மூலம் பெறுகிறார். அமைச்சர்கள்மாத்திரமல்லாது பிரதமரை நியமிக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்படுகிறது. அரசமைப்பில் பிரதமர் ஒருவரை நியமிப்பது பின்வருமாறு குறித்துரைக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையை பெற்றவர் என ஜனாதிபதி கருதும் நாடாளுமன்ற உறுப்பினரைப் பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமுண்டு. ஜனாதிபதி கருதும் நாடாளுமன்ற உறுப்பினர் தவிர, உண்மையிலேயே பெரும் பான்மையினரின் நம்பிக்கைக்கு உரித்தான நாடாளுமன்ற உறுப்பினர் பிரத மராக நியமிக்கப்பட வேண்டுமென்ற நியதி கிடையாது. பிரேமதாசவை வெட்டி விடுவதற்காகவே இத்தகைய உறுப்புரை இணைக்கப்பட்டதென அன்று சிலர் கருதினர்.

ஆனால், பிரேமதாசவைத் தோற்கடிக்க முடியவில்லை. அரசாங்கக் கட்சியில் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி,அத்துலத் முதலி போன்றோரை தோல்வியுறச்செய்து பிரேமதாசா பிரகாசித்தார். எனவே, பிரேமதாசவுக்கு பிரதமர் பதவி வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தனக்குத் தேவையான நபரை பிரதமர் பதவிக்கு நியமிக்க ஜனாதிபதி ஜயவர்த்தன வினால் முடியாமற் போனது. தற் போது தமக்கு அவசியமான நபரை மாத்திரமல்லாமல் அதிகாரத்திற்கான கூட்டு அரசைப் பேணிப் பாதுகாக்கக்கூடிய ஓர் உறுப்பினரை பிரதமர் பதவிக்கு நியமிப்பதற்கு ஜனாதி பதியால் முடிந்துள்ளது.

(மிகுதி நாளை)

# கமரூன் எல்லையில் மீன்பிடியில் ஈடுபட்ட 97 நைஜீரிய மீனவர்கள் சுட்டுக்கொலை!

யாவுண்டே,ஜூலை 16

கமரூன் நாட்டு எல்லையில் மீன்பிடியில் ஈடுபட்ட நைஜீரியா நாட்டைச் சேர்ந்த 97 மீனவர்கள் அந்த நாட்டு இராணுவ வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




ஆபிரிக்காவில் அமைந்துள்ள பகாசி என்ற தீபகற்பப் பகுதியை கடந்த 2008 ஆம் ஆண்டு கமரூன் நாட்டுக்கு நைஜீரியா விட்டுக்கொடுத்தது. முன்னதாக, இந்தத் தீபகற்பத்தில் நைஜீரியா நாட்டினர் சுதந்திரமாக மீன் பிடித்து வந்தனர். ஆனால், கமரூன் நாட்டின் கட்டுப்பாட்டில் பகாசி சென்றமையைத் தொடர்ந்து, இந்தப் பகுதியில் மீன் பிடிப்பவர்களுக்கு கடும் கட்டுப்பாடுகளை அந்நாட்டு அரசு விதித்தது.

மேலும், இந்தத் தீபகற்பத்தில் மீன் பிடிக்க வரும் நைஜீரிய மீனவர்களுக்கு தலா 300 டொலர்கட்டணத்தைவழங்குமாறு கமரூன் அரசு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், கமரூன் நாட்டின் இந்த விதிகளை மீறி கட்டணம் செலுத்தாமல் நைஜீரிய மீனவர்கள் மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில், கடந்த வாரம் கட்டணம் செலுத்தாமல் மீன் பிடிக்கச் சென்ற 97 மீனவர்களை கமரூன் அரச இராணுவம் கொடூரமாகச் சுட்டுக் கொலை செய்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தாக்குதலில் இருந்து தப்பிச் சென்ற சில மீனவர்கள் நைஜீரிய அரசிடம் முறைப்பாடு அளித்துள்ளனர். 97 மீனவர்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்படும் என நைஜீரிய அரசு தெரிவித்துள்ளது.

ஆனால், இந்தத் தாக்குதல் தொடர்பாக கமரூன் அரசு இதுவரை எந்தவிதக் கருத்தையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## 'உங்கள் உடற்கட்டு அற்புதம்'

### பிரான்ஸ் ஜனாதிபதியின் மனைவியை வர்ணித்தார் டொனால்ட் ட்ரம்ப்!



பரிஸ்,ஜூலை 16

பிரான்ஸுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அந்தநாட்டுஜனாதிபதி மக்ரோனின் மனைவியை வர்ணித்துள்ளமை தொடர்பான காணொலிசமூகவலைத் தளங்களில்வெளியாகி உள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இமானுவேல் மக்ரோனை அவரது இல்லத்தில் சந்தித்தார். இதன்போது, டொனால்ட் ட்ரம்பின் மனைவி மெலனியாவும் உடனிருந்தார். அப்போது, அமெரிக்க ஜனாதிபதி மற்றும் அவரது மனைவி ஆகியோரை வாசலில் நின்று தங்கள் முறைப்படி மக்ரோன் அவரது மனைவி ஆகியோர் வரவேற்றனர்.

இதை அடுத்து, நடைபெற்ற உரையாடலின் போது பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனின் மனைவி ப்ரிக்கிட்டி மக்ரோனிடம் (வயது-61), 'நீங்கள் மிகவும் நேர்த்தியாகவும், அழகாகவும் உள்ளீர்கள். உங்கள் உடற்கட்டு அற்புதமாக உள்ளது.'- என்று ட்ரம்ப், கூறியுள்ளார்.

இந்தக் காணொலி சமூக வலைத்தளங்களில் 'வைரலாகப்' பரவி வருகிறது.

## ஐ.நா. தடைகளைக் கொண்டு வந்தாலும் எதிர் நடவடிக்கைகள் மூலம் சந்திப்போம்!

### கொக்கரிக்கிறது வட கொரியா

சியோல், ஜூலை 16

வட கொரியா மீது ஐ.நா. சபை மேலும் தடைகளைக் கொண்டு வந்தாலும், அவற்றை எதிர் நடவடிக்கைகள் மூலம் சந்திப்போம். -இவ்வாறு வடகொரிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிடம் இருந்து வரக்கூடிய அணு ஆயுதத் தாக்குதல்களில் இருந்து எமது நாட்டைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை பரிசோதிக்கப்பட்டது. அது வட கொரியாவின் சட்டப்பூர்வ உரிமை என அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

அண்மையில்கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை வெற்றிகரமாக வட கொரியா சோதித்தது. இதனைத் தொடர்ந்து, அந்த நாட்டின்மீது மேற்கொண்டு தடைகளைக் கொண்டுவர வேண்டும் என்று அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கோரிக்கை விடுத்தன.

இந்த நிலையில், அமெரிக்கா ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளை ஐ.நா. சபையில் மேற்கொள்ளப்படும், வடகொரியாவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி இரு நாடுகளும் மேற்கொண்டு தடைகளையோ, போரையோ நடத்துவதற்குப் பதிலாக வட கொரியாவுடன் பேச்சு நடத்துமாறு அமெரிக்காவுக்கு யோசனை தெரிவித்துள்ளமையை குறிப்படத்தக்கது. (ச)

## ஆப்கன் ஐ.எஸ். அமைப்பின் தலைவர் சாவு!

கிழக்கு ஆப்கானிஸ்தானின் குனார் மாகாணத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது, அந்த நாட்டு ஐ.எஸ். பயங்கரவாதிகளின் தலைவர் அபு சயிட் கொல்லப்பட்டுள்ளார் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகள் தொடர்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில்ஐ.எஸ்.பயங்கரவாதிகள்அமைப்பைச் சேர்ந்த பலர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அபு சயிட்டின் உயிரிழப்பு தொடர்பில் ஐ.எஸ். தரப்பில் இருந்து இதுவரை எவ்வித தகவல்களும் வெளியிடப்பட வில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஆப்கானிஸ்தான் ஐ.எஸ். அமைப்பின் முன்னாள் தலைவராக இருந்த அப்துல் ஹசீப், கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

### 6 இஸ்லாமிய நாடுகளுக்கான தடை தளர்வு:

## அமெ. உச்ச நீதிமன்றில் ட்ரம்ப் அரசு எதிர்த்து மனுத் தாக்கல்!

வொஷிங்டன், ஜூலை 16

ஆறு நாடுகளைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு ட்ரம்ப் அரசு விதித்த தடையைத் தளர்த்தி ஹவாய் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து ட்ரம்ப் அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் அவசர மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஈரான், லிபியா மற்றும் சோமாலியா, சூடான், சிரியா, ஏமன் ஆகிய 6 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கே அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட் டிருந்தது. இந்த உத்தரவை எதிர்த்து அமெரிக்க நீதிமன்றங்களில் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன. அதில் ட்ரம்பின் தடை உத்தரவுக்கு எதிரான தீர்ப்புகள் வழங்கப்பட்டன. அவற்றை எதிர்த்து ட்ரம்ப் நிர்வாகம் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. அதனை விசாரித்த உச்ச நீதிமன்றத் தடை உத்தரவில் மாற்றங்களைக் கொண்டு வந்து நடைமுறைபடுத்த உத்தரவிட்டது.

அதனைத் தொடர்ந்து, மேற்கண்ட 6 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் இருக்கும் பட்சத்தில் அவர்களது நெருங்கிய உறவுகளான தாய்-தந்தை, பிள்ளைகள், சகோதர- சகோதரிகள், வருங்கால கணவன் அல்லது மனைவி ஆகியோர் மட்டுமே அமெரிக்காவுக்குள் வர முடியும் எனக் கூறி ட்ரம்ப் நிர்வாகம் புதிய தடை உத்தரவை பிறப்பித்தது.மேலும் தாத்தா-



பாட்டி உள்ளிட்ட பிற உறவினர்கள் யாரும் அமெரிக்காவுக்குள் நுழைய முடியாது என அந்தத் தடை உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தப் புதிய தடை உத்தரவை எதிர்த்து ஹவாய் மாகாணத்தின் ஹோனோலுலு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு நீதிபதி டெரிக் வாட்சன் முன்பு விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி டெரிக் வாட்சன், ட்ரம்ப் நிர்வாகம் குடும்பத்தின் நெருங்கிய உறவுகளை வரையறை செய்திருக்கின்றமையைக் கடுமையாகச் சாடினார்.

அதனைப் பொதுவான அறிவுக்கு எதிரானது எனக் குறிப்பிட்ட அவர், தாத்தா-பாட்டி என்பவர்கள் குடும்பத்தின் மறுவடிவம். அவர்களைக் குடும்பத்தின் நெருங்கிய உறவில் சேர்க்காமை முட்டாள்தனம் எனவும் கூறி னார். அதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் இருக்கும் மேற்கண்ட 6 நாடுகளை சேர்ந்தவர்களின் தாத்தா- பாட்டி மற்றும் மற்ற உறவினர்களும் அமெரிக்கா வரலாம் எனக் கூறி நீதிபதி டெரிக் வாட்சன் தீர்ப்பு அளித்தார்.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் உத்தரவுக்கு எதிராக வெளியான இந்தத் தீர்ப்பு அமெரிக்க மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், இந்தத் தீர்ப்புக்குத் தடை விதிக்கக் கோரி அமெரிக்க அரசின் சார்பில் அந்த நாட்டு உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றம் விடுமுறையில் உள்ளமையால் அவசரகால வழக்காக இந்த மனு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இலங்கையின் புதிய சட்ட வரைவு:

# அபாயகரமான ஒரு சூழலில் திணறுகின்றனர் மீனவர்கள்!

## எங்களை மீட்பாரா மோடி?

தமிழக மீனவர்களுக்கு இதுவரை மறைமுகப் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தி வந்த இலங்கை அரசு, இனி அதை நேரடியாகச் செய்வதற்காகப் புதிய சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறது.


இலங்கை நாடாளுமன்றத்தில் அந்நாட்டு கடல் தொழில் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, கடந்த வியாழக்கிழமை தாக்கல் செய்த சட்ட முன்வரைவு, மிக அபாயகரமான ஒரு சூழலில் தமிழக மீனவர்களைக் கொண்டு போய் நிறுத்தி இருக்கிறது.

இலங்கைகடல்பகுதியில்அத்துமீறல் செய்யும் படகுகளுக்கும், தடை செய்யப்பட்ட உபகரணங்களைக் கொண்டு மீன்பிடிப்பவர்களுக்கும் 2 கோடி முதல் 20 கோடி ரூபா வரை அபராதமும், இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதிக்கப்படும் என்கிறது இந்தச் சட்ட முன் வரைவு.

இலங்கை அரசின் இந்தச் செயலைக்



சேசுராஜ்



அருளானந்தம்



போஸ்

எந்த நாட்டிலும் இல்லாத நடைமுறையாக, இலங்கை அரசு புதிய சட்டத்தைக் கொண்டு வருகிறது. இது, 1974 ஆம் ஆண்டு இந்தியாவும் இலங்கையும் செய்து கொண்ட கச்சதீவு ஒப்பந்தத்துக்கு எதிரானது.

கண்டித்து, மீனவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இது குறித்து தமிழகக் கடலோர விசைப்படகு மீனவர் சங்க ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் சேசுராஜ் கருத்து தெரிவிக்கையில்–

இலங்கைக் கடற்படையினரால் கடந்த மார்ச் மாதம், மீனவர் பிரிட்ஜோ சுட்டுக்கொல்லப்பட்டார். அந்தச் சம்பவத்துக்குப் பின், நமது எல்லைப் பகுதிக்கு உட்பட்ட 12கடல் மைல் தொலைவுக்குள்தான் மீன் பிடிக்கிறோம்.

அப்படி இருந்தும், கடந்த 10 நாள்களில் ஐந்து முறை எங்கள் மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர்.

எந்த நாட்டிலும் இல்லாத நடைமுறையாக, இலங்கை அரசு புதிய சட்டத்தைக் கொண்டு வருகிறது. இது, 1974 ஆம் ஆண்டு இந்தியாவும் இலங்கையும் செய்து கொண்ட கச்சதீவு ஒப்பந்தத்துக்கு எதிரானது.

இரு நாட்டு மீனவர்களையும் அச்சுறுத்தும் வகையிலும் இது அமைந்துள்ளது. மீன்பிடிக்கச் செல்லும் எங்கள் மீனவர்கள் உயிர், உடைமை என அனைத்தையும் இழந்திருக்கிறார்கள்.

பல கோடி ரூபா மதிப்புடைய 151 படகுகள் இலங்கையின் பிடியில் உள்ளன. இவற்றில் பலபடகுகள் மீட்டுவர முடியாத நிலையில் பழுதாகி உள்ளன. இந்த நிலையில், எங்களை மேலும் வதைக்க இப்படிச் சட்டம் போடுகிறது இலங்கை அரசு.

கடலுக்குச் செல்லும் மீனவர்களை நம்பி, இனியாரும் கடன்கூட கொடுக்க மாட்டார்கள். மத்திய அரசு இதைத் தடுக்கக் குரல் கொடுக்காமல் மௌனமாக இருக்கிறது.

நாங்கள் எல்லை தாண்டாமல் இருக்க வேண்டும் என்றால், கச்சதீவை திரும்பப் பெற்று கடல் எல்லையை மறுவரையறை செய்து கொடுங்கள். இல்லையேல் எங்களைச் சாகவாவது விடுங்கள் என்பதை மத்திய அரசுக்கு வலியுறுத்தி, தீக்குளிப்புப் போராட்டத்தை அறிவித்துள்ளோம்.– என்றார் சேசுராஜ்.

நிரபராதி மீனவர் கூட்டமைப்பின் தமிழகப் பிரதிநிதி அருளானந்தம் கூறுகையில்–

இந்திய மீனவர்களின் நலனுக்கு எதிரான இந்தச் சட்டம் குறித்து மௌனமாக இந்திய அரசு இருப்பதன் மூலம், அது இலங்கைக்கு உடந்தையாக உள்ளதோ என நினைக்கத் தோன்றுகிறது.– என்றார்.

ஆசியப் பகுதியில் உள்ள ஜப்பான், சீனா, தென்கொரியா, தைவான், பாகிஸ்தான், இந்தியா, இலங்கை என அனைத்து நாட்டு மீனவர்களுமே எல்லை தாண்டி மீன்பிடிப்பில் ஈடுபடு கின்றனர்.ஆனால், இலங்கை மட்டும்தான் ஐ.நாவின் கடல் சார்ந்தசட்ட உடன்பாட்டின் பிரிவு 73 இற்கு எதிராகச் செயற்பட்டு வருகிறது.

இந்தச் சட்டத்தின்படி, ஒரு நாட்டின் கடல் பகுதிக்குள் எல்லை தாண்டும் அடுத்த நாட்டைச் சேர்ந்த படகில் சந்தேகப்படும் படியான பொருள்கள் ஏதும் இல்லை எனில் அப்படகை விடுவித்து விடவேண்டும்.

மேலும் 145 ஆம் பிரி வின்படி, கடலில் மீனவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் நிலையை உருவாக்கக் கூடாது.

அதேபோல் இந்திய தண்டனைச் சட்டம் 25/1A படி, உயிர்பறிக்கும் ஆயுதங்களுடன் இந்தியக் கடல் பகுதிக்குள் யாரும் ஊடுருவக் கூடாது.

ஆனால், இந்தியக் கடற் பரப்பில் ஆயுதங்களுடன் நுழையும் இலங்கைக் கடற்படையினர், இந்திய மீனவர்களைத் தாக்குவதும், சிறைபிடித்துச் செல்வதும் அன்றாட நடவடிக்கையாக உள்ளது. இதை மத்திய அரசு கண்டு கொள்வதில்லை.

தூத்துக்குடி தொடங்கி காரைக்கால் வரையிலான கடற்பரப்பில் 3,600 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகளும் பைபர் படகுகளும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இந்தத் தொழிலை நம்பி லட்சக் கணக்கான மீனவர்கள் உள்ளனர்.

எங்களுக்கு மாற்று வழியை ஏற்படுத்தும் வரையிலாவது, இலங்கை அரசின் புதிய சட்டத்தை அமுல்படுத்தாமல் நிறுத்தி வைக்க மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்.– என்கிறார் அருளானந்தம்.

தமிழ்நாடு, புதுச்சேரி கடலோர மீனவர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் என்.ஜே.போஸ் குறிப்பிடுகையில்–

1983 ஆம் ஆண்டு மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டத்தை முறையாக அமுல்படுத்தியிருந்தால் மீனவர் பிரச்சினை இந்த அளவுக்கு விஸ்வ ரூபம் எடுத்திருக்காது.

நமது மீனவர்களால் தமது கடல்வளம் அழிவதாக இலங்கை அரசு குற்றம் சாட்டியிருக்கவும் முடியாது.

மோடியின் செல்லப்பிள்ளையாகத் திகழும் இலங்கை அரசு, தன்னைத் தட்டிக் கேட்க மாட்டார்கள் என்ற தைரியத்தில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.– என்றார்.

வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வரும் பிரதமர் மோடி, தன் சொந்த நாட்டு பிரஜைகளைச் சிக்கலில் இருந்து மீட்பாரா?

**நன்றி: ஜூனியர் விகடன்**

# தஞ்சாவூரில் பஸ் விபத்து: 10 பேர் சாவு; 20 பேர் காயம்!



தஞ்சாவூர், ஜூலை 16

**தஞ்சாவூர் வல்லம் பகுதியில் அரச பஸ்ஸும், லொறி ஒன்றும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இதில், 10 பேர் உயிரிழந்தனர்; 20 பேர் படுகாயம் அடைந்தனர்.**

தஞ்சாவூரில் இருந்து கும்பகோணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த மேற்படி பஸ்ஸில், 60 இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர்.

வல்லம் பகுதியில் உள்ள பாலத்தில் பஸ் சென்று கொண்டிருந்த போது, எதிரே வந்துகொண்டிருந்த லொறியுடன் எதிர்பாராத விதமாக மோதியது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் படுகாயம் அடைந்தவர்கள் தஞ்சாவூர் அரச மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### தமிழக அரசு நிதியுதவி

இந்த விபத்தில் 10 பேர் உயிரிழந்தமை தொடர்பில் முதலமைச்சர் பழனிச்சாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

மேலும், உயிரிழந்த 10 பேரின் குடும்பத்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்படும் எனவும், காயமடைந்த 23 பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# சசி விவகாரத்தில் விதிமுறை மீறல்: சிறைத்துறை டி.ஐ.ஜிக்கு நோட்டீஸ்!



பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் சசிகலாவுக்குச் சிறப்புச் சலுகைகள் வழங்குவதற்கு 2 கோடி ரூபா லஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளது எனக் குற்றம் சுமத்தியுள்ள டி.ஐ.ஜி. ரூபாவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

சசிகலாவுக்கு சிறப்புச் சலுகைகளைச் செய்து கொடுப்பதற்காக கர்நாடக சிறைத்துறை டி.ஜி.பி. சத்தியநாராயண ராவுக்கு 2 கோடி ரூபா லஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளது எனவும், அங்கு கைதிகளுக்குத் தாராளமாகப் போதை பொருள்கள் கிடைக்கின்றன எனவும் கர்நாடக சிறைத்துறை டி.ஐ.ஜி. ரூபா ஊடகங்களிடம் தகவல் வெளியிட்டிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு உள்துறை அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், டி.ஐ.ஜி. ரூபாவும் தான் கொடுத்த குற்றச்சாட்டுகள்தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என முதலமைச்சர் சித்தராமையா குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக முதலமைச்சர் சித்தராமையா ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறையில் முறைகேடுகள் இடம்பெற்றன என டி.ஐ.ஜி. ரூபா குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தாலும், அது தொடர்பில் அவர் முதலில் அரசின்கவனத்துக்கு கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால், ஊடகங்களுக்கு நேரடியாக அறிவித்தமைதவறானது. ரூபாவின் செயல் விதிமுறைகளை மீறிய செயலாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## இரட்டை இலை லஞ்சம் விவகாரம்:

# குற்றப் பத்திரிகையில் இருந்து தினகரனுடைய பெயர் நீக்கம்!

இரட்டை இலைச் சின்னத்தைப் பெற இலஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் டி.டி.வி. தினகரன்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்த நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பான குற்றப்பத்திரிகையில் இருந்து தினகரனின் பெயர் நீக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றப் பத்திரிகை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை டில்லி உச்ச நீதிமன்றத்தில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டது.

அ.தி.மு.க. அம்மா அணியின் துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன், இரட்டை இலைச் சின்னத்தைப் பெறுவதற்காக லஞ்சம் கொடுக்க முயற்சித்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இதனை அடுத்து, தினகரன் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை டில்லி பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்தக் குற்றப்பத்திரிகையில், சுகேஷ் சந்திர சேகர் பெயர் இடம்பெற்றுள்ளது. ஆனால், டி.டி.வி. தினகரன் பெயர் இடம்பெறவில்லை. (ச)

காலைக்கதிர்
Kalaikkathir
ஞாயிற்றுக்கிழமை 16.07.2017


**கல்வித் திணைக் களத்தின் ஏற்பாட்டில் வட மாகாண ரீதியில் பாடசாலை களைச் சேர்ந்த வீர, வீராங்கனை களுக்கு இடையில் கடந்த 6 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் துரையப்பா விளை யாட்டு அரங்கில் நடத்தப்பட்ட தட, களப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் தொடர்ந்து வெளிவரும்.**





# தட, களப் போட்டிகளில்



## வெற்றி பெற்றோர் விவரம்:








5 நாள்கள் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில், ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டவர்களின் விவரங்கள் வருமாறு:-

16 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஈட்டி எறிதலில் முதலிடத்தை வி.சௌகர்யா (வித்தியானந்தாக் கல்லூரி), இரண்டாமிடத்தைஏ.அன்புலா (பாசையூர்சென்.அன்ரனீஸ் மகளிர் வி.), மூன்றாமிடத்தை ரி.புஸ்பலதா (நானாட்டான் ம.வி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

14 வயதுப்பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தலில் முதலிடத்தை ஜெ. ஜெதுசனா (கொக்குத்தொடுவாய் அ.த.க.), இரண்டாமிடத்தை வி.நிரோசா (கற்கிடந்தகுளம் அ.த.க.), மூன்றாமிடத்தை ரி.அபிசாமார்க் (சென்.ஆன்ஸ் ம.வி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

16 வயதுப்பிரிவு பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் முதலிடத்தை ஜெ.அபிசா (சிலாவத்துறை அ.த.க.), இரண்டாமிடத்தை ஜெ.திருட்சிகா (நெடுந்தீவு ம.வி), மூன்றாமிடத்தை ஜெ.கிருசாந்தினி (பிரான்பற்று கலைமகள் வி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

18 வயதுப்பிரிவு பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் முதலிடத்தை யு. குயின்சிமி (விவேகானந்தா வித்தியாலயம்), இரண்டாமிடத்தை வை.நிதர்சனா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), மூன்றாமிடத்தை எஸ்.சுஜாந்தினி (நாவாந்துறை றோ.க.த.) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

20 வயதுப்பிரிவு பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் முதலிடத்தை எஸ்.மதுரா (கற்கிடந்தகுளம் றோ.க.த.), இரண்டாமிடத்தை பி.கீர்த்தனா (நெளுக்குளம் கலைமகள் ம.வி), மூன்றாமிடத்தை ரி.தமிழ்வாணி (சிவப்பிரகாச மகளிர் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் முதலிடத்தை ஆர்.ரஸ்கன் (பாத்திமா ம.வி), இரண்டாமிடத்தை எஸ்.டிலக்சன் (கனகபுரம் ம.வி), மூன்றாமிடத்தை ஜி.கோபிநாத் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

18 வயதுப்பிரிவு ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் முதலிடத்தை ஏ.அபிக்சன் (சென்.ஆன்ஸ் ம.வி), இரண்டாமிடத்தை எஸ்.சிறித்னுஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெ.இருதயயூட் (சிலாவத்துறை அ.த.க.) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் முதலிடத்தை ரி. விதுசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாமிடத்தை ஏ.அபிநாஸ் (பாத்திமா ம.வி), மூன்றாமிடத்தை எஸ்.செந்தூரன் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

18 வயதுப்பிரிவு பெண்களுக்கான தட்டெறிதலில் முதலிடத்தை எஸ்.சங்கவி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாமிடத்தைஆர்.தர்சி (உரும்பிராய்சைவத்தமிழ் வித்தியாலயம்), மூன்றாமிடத்தை என். சிவானுஜா (யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

18 வயதுப்பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் முதலிடத்தை எஸ்.சங்கவி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாமிடத்தை சி.ஹெரினா (மகாஜனக் கல்லூரி), மூன்றாமிடத்தை என்.டக் சிதா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

14 வயதுப்பிரிவு பெண்களுக்கான குண்டெறிதலில் முதலிடத்தை எஸ்.கஜானி (பூந்தோட்டம் ம.வி), இரண்டாமிடத்தை ஆர்.கேதாரணி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடத்தை ஏ.நிரோஜினி (நெடுந்தீவு சீக்கிரயம்பலம் அ.த.க. வி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

14 வயதுப்பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தலில் முதலிடத்தை எஸ். செந்தீஸ் (உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி), எம்.கபிவர்மா (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), மூன்றாமிடத்தை கே. சபேசன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

14 வயதுப்பிரிவு பெண்களுக்கான 80 மீற்றர் தடைதாண்டலில் முதலிடத்தை பி.பிரியங்கா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), இரண்டாமிடத்தை கே.நிதுசா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), மூன்றாமிடத்தை வி. நிரோசா (கற்கிடந்தகுளம் றோ.க.த.) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

14 வயதுப்பிரிவு ஆண்களுக்கான 80 மீற்றர் தடைதாண்டலில் முதலிடத்தை எஸ்.அன்ரூ சர்தார்க் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), இரண்டாமிடத்தை ஈ.பொலிகப் (நானாட்டான் ம.வி), மூன்றாமிடத்தை எம்.அந்தோனி குறூஸ் (சென்.சேவியர் ஆண்கள் பாடசாலை) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

16 வயதுப்பிரிவு பெண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டலில் முதலிடத்தை சி. தீபிகா (மகாஜனக் கல்லூரி), இரண்டாமிடத்தை பி.தனுசங்கவி (அருணோதயாக் கல்லூரி), மூன்றாமிடத்தை வி.சனுஜா (அருணோதயாக் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

18 வயதுப்பிரிவு பெண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டலில் முதலிடத்தை என்.விதுசனா (கொக்குவில் இந்துக் கல்லூரி), இரண்டாமிடத்தை ஏ.மேரிதயானந்தினி (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), மூன்றாமிடத்தை ஜெ.ஜெருசிகா (அருணோதயாக் கல்லூரி) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

20 வயதுப்பிரிவு பெண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டலில் முதலிடத்தை வி.சாத்வீகா (அருணோதயாக் கல்லூரி), இரண்டாமிடத்தை பி.கிரிஜா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மூன்றாமிடத்தை எஸ். கிசாந்கா (வித்தியானந்தாக் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

18 வயதுப்பிரிவு ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டலில் முதலிடத்தை கே.கவிலவன் (வவுனியா தமிழ்.ம.ம.வி.), இரண்டாமிடத்தை கே.கேதுசன் (மகாஜனக் கல்லூரி), மூன்றாமிடத்தை எஸ்.ஜேசுதாசன் (சென்.ஆன்ஸ் ம.ம.வி.) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டலில் முதலிடத்தை ரி. செந்தூர்ஜன் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), இரண்டாமிடத்தை வி.ஜக்சன் (மகாஜனக் கல்லூரி), மூன்றாமிடத்தை எஸ்.சுஜன் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

(தொடரும்)

## முல்லைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டியாக நிறுத்துமாறு வலியுறுத்தி இன்று கவனவீர்ப்புப் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை 11 மணிக்கு முல்லைத்தீவு காட்டா விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக இருந்து ஆரம்பமாகவுள்ள கவனவீர்ப்பு பேரணி கூழாமுறிப்பு வரை இடம்பெறவுள்ளது.

இயற்கைச் சமநிலையைப் பேணும் இளைஞர்கள் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாணத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களிலும் இருந்து மக்களைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து பேரணியில் கலந்துகொள்ளச் செல்பவர்களுக்கு விசேட வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக இருந்து இன்று காலை 8.00 மணிக்கு பேருந்துகள் புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பேருந்து வசதி தொடர்பாக 0771548563 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப்போராட்டத்திற்கு பல தரப்பினரும் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். வடமாகாண தமிழ்த் தேசியமாணவர்பேரவை போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவில் கூழாமுறிப்பில் இருந்து வாரிவண்ணான் காடு வரையான பகுதியானது முள்ளியவளை - ஒட்டுசுட்டான் வீதிக்கும், நெடுங்கேணி - புளியங்குளம் வீதிக்கும் இடையிலுள்ள அடர் வனப் பகுதிக்கு இடைப்பட்ட பகுதியாகும்.

இந்தக் காட்டில் 177 ஏக்கரை அழித்து முஸ்லிம் மக்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இனப்பரம்பலை சிதைக்கும் நோக்குடனான சட்டவிரோத குடியேற்றத்தை மேற்கொள்ளும் இத்திட்டத்தை எதிர்க்க வேண்டியது அவசியமானதாகும். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சுவிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பணியாற்றிவந்தலலித்ஜயசிங்கவை குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நேற்று நீண்ட நேர விசாரணைகளின் பின்னர் கைது செய்தனர் என்றும் -

இன்று அவர் மேற்படி வித்தியா படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்திற்குப் பொறுப்பான ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வித்தியா படுகொலைச் சம்பவத்தை அடுத்து கைதுசெய்யப்பட்ட சுவிஸ்குமார் யாழ்ப்பாணத்திலிருந்துதப்பிச்சென்று கொழும்பில் தங்கியிருந்த சமயம் திரும்பவும் கைது செய்யப்பட்டார் என்பது தெரிந்ததே. (உ)

## படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடக்குமுறை ஏவி விடப்படுகின்றது. இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒரே வழி ஆட்சி மாற்றத்தை விரைந்து ஏற்படுத்துவதுதான். அதை மிக வேகமாகச் செய்வோம்."

- இவ்வாறு சூளுரைத்திருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளின் நலன்களை விசாரிப்பதற்காக நேற்று வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று வந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே முன் னாள் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

இதனிடையே விளக்கமறியலில் வைக்கப்பட்டபின்னர் தற்போது கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் கொமடோர் டி.கே.பி.தஸநாயக்கவின் நலன் அறிய நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நேற்று வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமை மற்றும் பயங்கரவாத ஒழிப்புத் தொடர்பான விசேட அறிக்கையாளரை மகிழ்விக்கும் நோக்கில் இவ்வாறான அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என விமல் வீரவன்ஸ குற்றம் சுமத்தினார். (உ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னார்.

மாகாண அவைத் தலைவர்களின் சங்கத்தின் கூட்டமே நேற்று மாதகலில் நடந்தது. சப்பிரகமுவ மாகாண அவைத் தலைவரே அச்சங்கத்தின் தலைவர். ஆனால் அவர் மட்டும் நேற்றைய கூட்டத்துக்கு வருகை தரவில்லை. அதனால் வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் நேற்றைய கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். ஏனைய ஏழு மாகாண அவைத் தலைவர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

இலங்கையின் ஒன்பது மாகாணசபைகளினதும் தலைவர்களில் வடக்குத் தலைமை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிடம் உள்ளது. கிழக்கு மாகாண சபையின் அவைத் தலைவராக ஐ.தே.கட்சியின் கலப்பதி பதவி வகிக்கின்றார். ஏனைய ஏழு மாகாண சபைகளின் அவைத் தலைவர்கள் பதவியும் சு.க.தரப்பிடமே உள்ளது.

நேற்று தமது உரையில் சி.வீ.கே.சிவஞானம் -

"எங்களுக்கு ஐ.தே.கட்சி, சு.க. கட்சி ஆகிய இரண்டும் ஒன்றுதான். தந்தை செல்வா 1957 இல் சு.க.வின் பண்டாரநாயக்காவுடன் ஒப்பந்தம் செய்தார். 1965 இல் ஐ.தே.கட்சியின் டட்லி சேனநாயக்காவுடன் ஒப்பந்தம் செய்தார். தீர்வு ஒன்றைக் காண்பதற்காக எல்லாத் தரப்புகளுடனும் நாங்கள் ஊடாடத் தயார். எப்படியாவது நீண்ட காலம் புரையோடிப் போயிருக்கும் இந்தப் பிரச்சினைக்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து தீர்வைக்காணவேண்டும். அதற்கு உங்கள் முழு ஒத்துழைப்பை - ஈடுபாட்டை - பங்களிப்பை - தமிழர்கள்சார்பில்கோருகின்றேன்." - என்றார். (உ)

# யாரையும் கொச்சைப்படுத்தும் விதத்தில் எதுவுமே பேசவில்லை

## சிறிதரன் எம்.பி நேற்று மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

"எந்தச் சமூகத்தினரையும் வேறுபடுத்தி அல்லது கொச்சைப்படுத்தி, தரக்குறைவு படுத்தும் விதத்தில் தான் பேசவேயில்லை.

- இப்படி மறுத்திருக்கின்றார் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

நேற்று வேணாவில், யூனியன்குளம்பகுதியில்இடம்பெற்ற மக்களின் சந்திப்பின்போதே அவர் இப்படிக் கூறினார்.

நான எந்த ஊடகத்துக்கோ, தொலைக்காட்சிக்கோ வானொலிக்கோ அப்படி ஏதும் கூறவில்லை. அப்படிக் கூறியிருந்தால் - அதை நிரூபித்தால் - நான் எனது பதவியை இராஜினாமாச்செய்துவிட்டுப்போகவும் தயார்.

ஆசிரியர் கணேசன் தொடர்பான விவகாரம் இடம்பெற்ற காலம் 2016 ஜூலை. ஈராண்டு கடந்துவிட்டது.

அப்போது நான் அப்படிப் பேசியிருந்தேன் என்றால் இவ்வளவு காலமும் அது வெளிவராதது ஏன்? அப்படி ஒரு விடயத்தை நான் பேசியமை போல மிமிக்கிரி பண்ணி இப்போது வெளியிடுவதில் ஏதோ ஒரு சூழ்ச்சி-மர்மம்-புதைந்துள்ளது. அதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

நான் எல்லாத் தமிழர்களையும் சகோதரர்களாக அரவணைத்துப் பழகும் பண்புடையவன். நான் எனது சகோதரர்களை அப்படிக் கொச்சைப் படுத்துவேன் என்ற மாதரியான தொனியில் விஷத்தைப்புகுத்துவாராளன் மக்கள் அதனை நம்பவேமாட்டார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். - என்றார். (உ)

# சங்கத்தானையில் விபத்து சிறுமி ஒருவர் படுகாயம்

சாவகச்சேரி - சங்கத்தானை புளியடிச்சந்தி பகுதியில் ஏ-9 வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - பேருந்து விபத்தில் சிறுமி ஒருவர் காலில் படுகாயமடைந்தார்.

இச்சம்பவத்தில் வரணி இயற்றாலையைச் சேர்ந்த செல்வகுமார் சுலட்சதிரா (வயது-11) என்ற சிறுமியே படுகாயமடைந்தார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்படி சிறுமி உறவினர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றது.

உள் ஒழுங்கையில் இருந்து ஏ-9 வீதிக்கு ஏறிய மோட்டார் சைக்கிளை பின்னால் வந்த பேருந்து மோதியதால் இந்த விபத்து இடம் பெற்றது எனக் கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-21)

## டெனீஸை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீழ விடுதலை இயக்கத்தினால் அனுப்பட்ட கடிதத்துக்கு உடனடியாகவே பதில் கடிதம் அனுப்பியுள்ள வடக்குமாகாண முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரன், ரெலோவின் கோரிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அக்கட்சிக்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கின்றார்.

டெனீஸ்வரன் மீது தமது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவிருப்பதால் அவரை அமைச்சர் வாரியத்திலிருந்து நீக்குமாறு கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை ரெலோ அமைப்பின்சார்பில் அதன் செயலாளர் நாயகம் ந.சிறிகாந்தா முதல்வர் விக்னேஸ்வரனைக் கடிதம் மூலம் கோரியிருந்தார்.

அந்தக் கடிதத்துக்கு அன்றைய தினமே திகதியிட்டு பதில் அனுப்பி வைத்திருக்கின்றார் முதல்வர் விக்னேஸ்வரன்.

ரெலோ செயலாளர் நாயகம் ந.சிறிகாந்தாவுக்கு முதல்வர் 13 ஆம் திகதி அனுப்ப வைத்த பதில் கடிதத்தின் முழு விவரம் வருமாறு :-

"உங்களின் 13.07.2017 ஆம் திகதிய இன்றைய கடிதம் கிடைத்தது. அதன் உள்ளடக்கங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன. ஏற்கனவே அமைச்சர் டெனீஸ்வரன் அவர்கள் எமது விசாரணைக்குழு முன் தான் தெரியமாட்டார் என்று பகிரங்கமாகக் கூறியமையை முன் வைத்தும், வேறுகாரணங்களுக்காகவும் அவர் மீது நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருந்தேன்.

"எனவே உங்கள் பரிந்துரைகளும் கவனத்திற்கு எடுக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்." - என்று உள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதி அமைச்சர் டெனீஸ்வரகுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (உ)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர் கபில வைத்தியரத்ன, முப்படையினரும் அச்சமின்றி வாழ முடியும் எனவும் கூறினார்.

கண்டி - தலதா மாளிகையில் நேற்றைய தினம் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

'பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுவோர் சம்பந்தமாக கொண்டு வரப்படும் சட்ட மூலத்தால் படையினர் ஆபத்தில் சிக்குவார்களா?' - என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

கடற்படையின் முன்னாள் பேச்சாளர் கைது செய்யப்பட்டமை தொடர்பாகவும் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த அவர், இதுசம்பந்தமான தேவையான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப்பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர் என்றார்.

அந்த விசாரணைகள் முடியும் வரை தேவையற்ற கைதுகள் நடக்காது எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ம)

## இங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறுதமது மதிப்பீட்டை வெளியிட்டிருக்கின்றார் நீதி, பௌத்த சாசன அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ.

"என்னுடனான சந்திப்பின் போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதிகளாக உள்ளோர் தொடர்பில் தவறான தகவல்களோடு அவர் வந்து அவற்றைத் தெரியப்படுத்தினார். அந்தத் தகவல்களின் ஆதாரத்தைக் கேட்டபோது நம்பக மானவட்டாரங்கள்மூலம்அவை கிடைத்தன என்றார். நான் மறுத்துசரியானதகவல்களைத் தெரியப்படுத்தினேன்.

"கைதியின் ஒப்புதல் வாக்கு மூலத்தை அக்கைதிக்கு எதிரானசாட்சியமாகஏற்கும் இலங்கையின் சட்டமுறைமையை அவர் குறை கூறினார். அந்த முறைமை பிரிட்டனிலும் உள்ளமையைச் சுட்டிக்காட்டி, அங்கு சட்டங்கள் மாற்றிவிட்டு வாருங்கள், இங்குபிறகு மாற்றுவோம் என்றேன்.

"யுத்தக் குற்றம் இழைத்த படையினருக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை என்றார் அவர்.

"இதுவிடயத்தில் அவர்களின் பிரிட்டிஷ் பிரதமரான தெரேசா மேயின் வழியை நாங்கள் பின்பற்றுகின்றோம் என்று பதிலளித்தேன். ஈராக்கில் போரிட்ட தனது நாட்டுப் படைகளுக்கு சட்டத்தின் பிடியிலிருந்து பாதுகாப்பதற்குதெரேஸாமேஎடுத்தபோக்கையையே நாம் பின்பற்றுகின்றோம் என்றேன்.

"ஐ.நா.வுக்கு அளித்த வாக்குறுதிகளை அதற்குரிய காலத்தில் நிறைவேற்றுவது குறித்து நாங்கள் ஐ.நாவுக்குள் பதில் சொல்லலாம். இவருக்கு (பென் எமர்ஸனுக்கு) பதிலளிக்கத் தேவையில்லை என்றேன் நான் கருதுகிறேன்.

"இந்த விடயத்தில் விசேட அறிக்கையாளர்கள் குறித்து நாம் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

"இதற்கு முன்னர் வந்த மொனிக்கா பின்டோ அம்மையாரும் நாட்டையும் நீதித்துறையும் மிக மோசமாக விமர்சிக்கும் பாணியில் கருத்து வெளியிட்டார்.

இந்த அறிக்கையாளர்கள் இங்குள்ள ஆசிரியர்கள், படிக்காதவர்கள், நாகரிகம் தெரியாதவர்கள். அதனால் மேற்கைப் பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள்.

இந்த இரு ஐ.நா. விசேட அறிக்கையாளர்கள் குறித்தும் நாங்கள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சரிடம் இயன்றவிரைவில் எமது முறைப்பாட்டைத் தெரிவிப்போம். - என்று ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (உ)

# மஹிந்தவுக்கு திரை மறைவு ஆதரவா? திட்டவட்டமாக மறுக்கின்றது ஐ.தே.க.

## அமைச்சர் கிரியெல்ல திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 16

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு திரை மறைவில் ஆதரவு வழங்கி வருவதாக வெளியாகும் தகவல்களை ஐக்கிய தேசியக் கட்சி திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

இவை வெறும் வதந்திகளே தவிர இதில் எந்தவித உண்மையும் இல்லை என்று பெருந்தெருக்கள் மற்றும் உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

20 ஆயிரம் கோடி ரூபா செலவில் இராஜகிரிய பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலத்தின் இறுதி நிர்மாணப் பணிகளைப் பார்வையிடுவதற்காக அமைச்சர் நேற்று முன்தினம் விஜயம் செய்தார்.

இந்த விஜயத்தில் கொள்கைத் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வாவும் கலந்துகொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின் பின்னர் அமைச்சர் லக்ஷ்மன்கிரியெல்ல ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி திரை மறைவிலான ஆதரவை வழங்கி வருவதாகவும், இது தொடர்பில் உண்மை நிலைவரம் என்ன என்பது தொடர்பாகவும் அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், 'அதில் எந்த உண்மையும் இல்லை. அதே போல அந்த தகவல்களை யாருமே நம்பவும் மாட்டார்கள். அது வெறும் வதந்தியாகும். எவரும் நம்பிவிட மாட்டார்கள்.- என்றார். (எ)

## அரியாலைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அரியாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படும்.

**இதன்படி, நாளை திங்கட் கிழமை:**

★ காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை அனைத்துப் பகுதிகளிலும் நடமாடும் சேவை நடைபெறும்.

வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக 30 ரூபா செலுத்தப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சாயி பஜனையுடன் பொதுக்கூட்டம்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் சாயிபாபா பஜனை நிகழ்வுகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும். அன்றைய தினம் அனைத்து மூத்த சிரேஷ்ட பிரஜைகளையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## பொதுக்கூட்டம்

இளவாலை மணலடைப்பு ஸ்ரீ அண்ணமகேஸ்வரர் தேவஸ்தான பரிபாலன சபையில் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிறு முற்பகல் 10.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் தலைவர் வ.தருமராசா தலைமையில் நடைபெறும். (ச)

★★★

சண்டிலிப்பாய், ஜூலை 16

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் கல்லூரியில் இன்று ஞாயிறு மாலை 4 மணிக்குக் கல்லூரி அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் இடம் பெறும்.

## உலகத் தமிழர் பேரவையினர் தெற்கில் நடத்திய மருத்துவ முகாம்

### 780 பேர் கிசிச்சை; அரசு நன்றி தெரிவிப்பு

தெற்கில் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவ முகாம் ஒன்று புலம்பெயர் தமிழர் அமைப்பான உலகத் தமிழர் பேரவையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட மருத்துவ முகாம்களின் மூலம் 780 பேர் வரை நன்மையடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், தென் பகுதி மக்களுக்கு உதவிகளை வழங்கிய உலகத் தமிழர் பேர வைக்கு அரசு நன்றி பாராட் டியுள்ளதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உலகத் தமிழர் பேரவை யின் உறுப்பினர்களான அமெரிக்கா, பிரிட்டன், கனடா, நோர்வே, ஆஸ்திரேலியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 17 இலங்கை வம்சாவளி வைத்தியர்களாலேயே இந்த சேவைகள் வழங்கப்பட்டிருந் தன என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## வட மாகாண சமுதாய சீர்திருத்த திணைக்களத்தில் மீளாய்வுக் கூட்டம்



வட மாகாண சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களத்தின் 2017ஆம் ஆண்டின் அரையாண்டுக்கான மீளாய்வுக் கூட்டம் கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்போது, வட மாகாணத்தில் உள்ள அனைத்து நீதிமன்ற எல்லைகளுக்கு உட்பட்ட சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்கள் தம்மால் மேற்கொள்ளப்பட்ட சமுதாய சீர்திருத்தப் பணிகள் தொடர்பிலான அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தனர்.

கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற சந்திப்பில் சமுதாய சீர்திருத்தத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், வேலை பரிசோதகர்கள், ஆகியோர் கலந்து கொண்டு தங்களது முன் வைப்புக்களை முன்வைத்தனர். அத்துடன், கருத்துக்களையும் வழங்கியிருந்தனர். (எ)

## குடிதண்ணீர் பிரச்சினைகள் தொடர்பாக திருமலையில் நடைபெற்ற நடமாடும் சேவை

### அமைச்சர் ஹக்கீம் முன்னிலையில்



திருகோணமலை, ஜூலை 16

'குடிதண்ணீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம்' என்ற விசேட திட்டத்தின் கீழ் நடைபெறும் 6 ஆவது நடமாடும் சேவையை நேற்று தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை திருகோணமலையில் நடத்தியிருந்தது.

இந்த நடமாடும் சேவை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது. சபையின் பணிப்பாளர் அதிகாரிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் நேரடியாக மக்கள் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சீறுநீரக நோய் பரவலாக காணப்படும் பிரதேச மக்களுக்குப் பாதுகாப்பான குடிதண்ணீரைப் பெற்றுக்கொடுப்பதற்காக நீர்சுத்திகரிப்பு இயந்திரங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன, அத்துடன் குழாய் தண்ணீர் விநியோக இணைப்பைப் பெற்றுக்கொள்ள பொருளாதார வசதியற்ற குடும்பங்களுக்கு இலவச இணைப்புகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் பாடசாலை, வைத்தியசாலை, மத ஸ்தாபனங்கள் முதலான பொது இடங்களுக்கு நீரைச் சேமித்து வைக்கக்கூடிய 30 நீர்த்தாங்கிகளும் அதற்கான உபகரணங்களும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீரால் வழங்கப்பட்டன.

மேலும், திருகோணமலை மாவட்டத்திலும் டெங்கு நோய் தொற்று காணப்படுவதால் நோயாளிகளுக்கு வசதி ஏற்படுத்தும் நோக்கில் கட்டில், மெத்தை என்பன கையளிக்கப்பட்டன, பொது சுகாதார வசதியற்ற குடும்பங்களுக்கு கழிவகற்றல் வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு 75 குடும்பங் களுக்கு நிதி உதவிகளும் வழங்கப் பட்டன. (எ)

## பொதுஜன முன்னணியின் நோக்கங்களை விளக்க நாடு முழுவதும் கருத்தரங்குகள்

### களத்தில் இறங்குகின்றனர் மஹிந்த, பஸில்



கொழும்பு, ஜூலை 16

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன ஐக்கிய முன்னணியின் நோக்கங்களை விளக்கும் கருத்தரங்குகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் எதிர் வரும் 22 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 5 ஆம் திகதி வரை இந்தக் கருத்தரங்குகளும் உறுப்பினர்களை இணைக்கும் கூட்டங்களும் நடத்தப்பட உள்ளன என்று முன்னணியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு உறுப்பினர்களைச் சேர்க்கும் கூட்டங்களும் அவர்கள் தலைமையில் நடத்தப்பட உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சில கருத்தரங்குகளில் மாத்திரம் முன்னாள் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளார். எந்த மாவட்டங்களில் அந்த கருத்தரங்குகள் நடத்தப்படும் என்பதைக் கூறமுடியாது.

மேலும், தேர்தலை ஒத்தி வைக்க மேற்கொள்ளும் முயற்சிக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பாக மக்களுக்குத் தெளிவு படுத்துவதே இந்தக் கருத்தரங்குகளின் நோக்கம்.- என்றார். (எ)

காலைக்கதிர் Kalaikkathir

















'ஆறுதல்' நிறுவனத்தினால் நடத்தப்பட்ட முன்பள்ளிக் கல்விக்கான டிப்ளோமா பயிற்சியில் சித்தியடைந்தோருக்குப் பட்டமளிக்கும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் நேற்றுக் காலையும் மாலையும் நடந்தது. கொழும்பு கிழக்கு றோட்டறிக் கழகத்தின் நிதி உதவியில் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த 163 டிப்ளோமா தாரிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்றுக் காலை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம். பிற நிறுவனங்களின் உதவிகளோடு பயிற்சிகளைப் பூர்த்தி செய்த 230 பேருக்கு டிப்ளோமா பட்டமளிப்பு மாலை நிகழ்வில் இடம்பெற்றது. (உ)

# மரதனில் சாதித்த உடையார்கட்டு வீராங்கனை சுடர்மதி
















(கங்கா)

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில், நெஸ்லே நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்ற வடமாகாண மட்ட அரை மரதன் ஓட்டப் போட்டியின் பெண்கள் பிரிவில் உடையார்கட்டு மகா வித்தியாலய வீராங்கனை சுப்பிரமணியம் சுடர்மதி, ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.கிந்துசன் ஆகியோர் முதலிடம் பெற்றனர்.

எதிர்வரும் ஆகஸ்ட் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய மட்ட மரதன் ஓட்டத்தில் பங்குபற்றுவதற்கான வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகளைத் தெரிவு செய்வதற்கான மரதனோட்டப் போட்டிகள் நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன.

15 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் சுமார் 2 ஆயிரம் பேருக்கு மேல் இதில் பங்குபற்றியிருந்தனர்.

இருபாலாருக்குமான 21 கிலோ மீற்றர் தூரம் கொண்ட அரை மரதன் ஓட்டப்போட்டி துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகி, காங்கேசன்துறை வீதி வழியாக சுன்னாகம் சந்தி வரையில் சென்று மீண்டும் அதே வழியாக விளையாட்டரங்கை வந்தடைந்தது.

இருபாலாருக்குமான 5 கிலோமீற்றர் கொண்ட நகரரோட்டம் விளையாட்டரங்கில் ஆரம்பமாகி, காங்கேசன்துறை வீதி வழியாகத் தட்டாதெருச் சந்தியை அடைந்து, மீண்டும் அதேவழியாக விளையாட்டரங்குக்குத் திரும்பியது.

21 கிலோமீற்றர் ஆண்களுக்கான அரைமரதன் ஓட்டத்தில் முதலிடத்தை வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.கிந்துசன் பெற்றார். இவருக்கும் இரண்டாமிட வீரருக்கும் இடையில் சுமார் 3 கிலோ மீற்றர் இடைவெளி காணப்பட்டது.

இரண்டாமிடத்தை ஓட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.ஜெனந்தனன், மூன்றாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.றினுஜன் ஆகியோர் தட்டிச் சென்றனர்.

தொடர்ந்து 10 இடங்களுக்குள் கே.டினேஸ் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), எஸ்.திஸாந்த் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.தனுசன் (தர்மபுரம் மத்திய மகா வித்தியாலயம்), பி.நிலோசன் (பண்டத்தரிப்பு பிரான்பற்று), கே.அனற்றோஜன் (சென். அன்ரனீஸ் கல்லூரி), கே.நிசோபன் (வவுனியா இந்துக் கல்லூரி), வி.கஜீபன் (வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

21 கிலோமீற்றர் பெண்களுக்கான அரைமரதன் ஓட்டத்தில் முதலிடத்தை சுப்பிரமணியம் சுடர்மதி (உடையார்கட்டு மகா வித்தியாலயம்), இரண்டாமிடத்தை எஸ்.விதுசா (கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), மூன்றாவது இடத்தை ரி.டென்சிகா (கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து 8 இடங்களுக்குள் வை.நிதர்சனா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), எல்.மங்கையர்க்கரசி (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), கே.டினோஜா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), எஸ்.டிலக்சனா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ரி.திவ்யா (உருத்திரபுரம் மகாவித்தியாலயம்) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்கான 5 கிலோ மீற்றர் நகரரோட்டத்தில் முதலிடத்தை அகோசிசலேகா (பளுகொல்லகம மகா வித்தியாலயம்), இரண்டாவது இடத்தை எம்.எஸ். எச்.தர்மபிரியா (கல்லிபிதுனிவா மத்திய கல்லூரி), மூன்றாவது இடத்தை எஸ்.எல்.நிமசிகா வன சிங்ஹே (டிகாபுயு வித்தியாலயம்) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.




ஆண்களுக்கான 5 கிலோ மீற்றர் நகரோட்டத்தில் முதலிடத்தை எம்.அனோஜன் (நெல்லியடி மத்திய கல்லூரி), இரண்டாமிடத்தை வி.சஜீவன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), மூன்றாமிடத்தை கே.வசந்தரூபன் (காரைநகர் இந்துக் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

வெற்றிபெற்ற வீரர்களுக்கான பரிசில்களை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாணக் கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் மற்றும் விருந்தினர்கள் வழங்கினர்.


## விற்பனைக்கு

வட்டக்கச்சியில் 2 ஏக்கர் மேட்டுக் காணி,
தென்னை, 3 அறைகள் புதிய வீடு,
கிணறு மற்றும் 3 ஏக்கர் வயல் காணியும்
உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 071 531 5500

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை





எமது சேவை 365 நாட்களும்

விரைவாகவும் பாதுகாப்பாகவும்
72 மணி நேரத்தில்
உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும்
(EXPRESS SERVICE)

உங்கள் வீடுகளுக்கே வந்து
பொதிகள் ஏற்கப்பட்டு
வெளிநாடுகளில்
ஒப்படைக்கப்படும்
(Door to Door Service)

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.